Koviloor Digital Library

தாயுமானவரின் சித்தர்கணம் – ஒரு பார்வை

A.15332
R65, தாய
15332



தாயுமானவ சுவாமிகள்

புலவர் ஆ. ஆறுமுகம்

Koviloor Digital Library

Koviloor Digital Library 4-3

தாயுமானவரின் சித்தர்கணம் – ஒரு பார்வை

புலவர் ஆ. ஆறுமுகம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 15332

எழில்கார்த்திகை பதிப்பகம்
45, சுண்ணாம்புக்காரத் தெரு,
திருவண்ணாமலை – 606 601.

Koviloor Digital Library

நூல் விளக்கக் குறிப்புகள்

நூலின் பெயர்	:	தாயுமானவரின் சித்தர்கணம் – ஒரு பார்வை
ஆசிரியர்	:	புலவர் ஆ. ஆறுமுகம்
மொழி	:	தமிழ்
பொருள்	:	கட்டுரை
பதிப்பு	:	முதல் பதிப்பு
பதிப்பாண்டு	:	நவம்பர், 2007
உரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்புரிமை	:	பதிப்பகத்தாருக்கே
அச்சுத்தாள் விவரம்	:	14.4 மேப்லித்தோ
நூல் கட்டு	:	தாள் அட்டை
பக்கம்	:	112
நூலின் அளவு	:	டெம்மி
எழுத்து	:	12 புள்ளி
வெளியீடு	:	எழில் கார்த்திகை பதிப்பகம் 45, சுண்ணாம்புக்காரத் தெரு, திருவண்ணாமலை–606 601.
ஒளியச்சு	:	கங்காராணி கணினியகம் சென்னை–14.
அச்சாக்கம்	:	ரேவதி ஆப்செட் அச்சகம் சென்னை – 14.

விலை : ரூ. 42.00

Koviloor Digital Library 4-3

படையல்

மண்ணுலகில் என்னை ஈன்று
மணித்தமிழ் கற்கச் செய்து
எண்ணரிய புகழைத் தேடி
என்வாழ்வில் ஒளியைத் தந்த
கண்ணனைய என்றன் தந்தை
கவின்மிகு **ஆரி முத்து**
எண்ணத்தில் இன்றும் வாழும்
என்தாய் **ஆ.ஞானம்பாள்**

என்இனிய முதல்ப டைப்பை
இவர்களுக் குப்படைக் கின்றேன்!

— புலவர் ஆ. ஆறுமுகம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

வாழ்த்துரை – அமைச்சர் தங்கம் தென்னரசு ... 5

வாழ்த்துரை – அமைச்சர் எ.வ. வேலு ... 6

வாழ்த்துரை – அரங்க. இராமலிங்கம் ... 7

அணிந்துரை – புலவர் நஞ்சப்பன் ... 8

பாராட்டுரை – இரா. கருணாகரன் ... 13

என்னுரை ... 18

1. அறிமுகம் ... 21

2. தாயுமானவரின் வாழ்க்கை வரலாறும் படைப்புகளும் ... 37

3. தாயுமானவரின் சித்தர்கணத்தில் விளக்கமுறும் சித்தர்களின் சிறப்புகள் ... 61

4. தாயுமானவர் சித்தர்கணத்திடம் வேண்டுவன ... 82

நிறைவுரை ... 101

துணைநூற்பட்டியல் ... 106

Koviloor Digital Library

தங்கம் தென்னரசு
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள் : 12.11.2007

வாழ்த்துரை

நம் உயிரினும் மேலான தமிழ் மண்ணில் சான்றோர்கள், அறிஞர்கள், சமயத் தலைவர்கள், சித்தர்கள் எனப் பெரியவர்கள் பலர் தோன்றி நம் செந்தமிழுக்குப் புகழ் சேர்த்துள்ளனர். இவை வரலாற்றுச் சான்றாகும். இவர்களில் சித்தர்கள் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தோன்றி நமக்கு நல்ல பல கருத்துகளைக் கூறி நல்ஒழுக்க நெறிகளை நம் மனதில் ஆழப் பதிந்தவர்களில் தாயுமானவர் அவர்கள் சமயம் கடந்து சமரசம் கண்டவர்.

தமிழகத்தில் பல சமயக் கருத்துக்கள் காலம்தோறும் தோன்றி மக்கள் மனதில் நிலைபெற்று மக்களை நல்வழிகாட்டி பெருமையுடன் வழங்கிய கருத்துகளையும், தனி மனிதன் ஒழுக்கத்தையும் சமுதாயம் மேம்பட நமக்குத் தந்தவர் தாயுமானவர்.

அவரைப்பற்றி இந்நூல் ஆசிரியர் புலவர் பெருந்தகை திரு. ஆ. ஆறுமுகம் அவர்கள் "தாயுமானவரின் சித்தர் கருத்தை" தமது எழுத்தாற்றலால் பொதுமக்கள் பார்வைக்கு எடுத்து உணர்த்தியுள்ள விதம் பாராட்டுதலுக்குரியது.

அவர்தம் முயற்சி வென்றிடவும், அவரது படைப்பு பார்புகழவும், அவர்தம் சீரிய எழுத்துப்பணி தொடரவும் எனது நல்வாழ்த்துக்களையும், பராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

(தங்கம் தென்னரசு)
பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

Koviloor Digital Library

எ.வ. வேலு
உணவுத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள் : 8.11.2007

வாழ்த்துரை

கடவுள் என்பவர் இருக்கின்றாரா? எங்கு இருக்கிறார்? என்பது பகுத்தறிவுவாதிகளின் கேள்வியாகும்.

ஆனால் மனிதர்களாகவே பிறந்து, மனிதர்களாகவே வாழ்ந்து, தனிமனித ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, அதன் பரிணாம வளர்ச்சியின் உச்சத்தில் உள்ளவர்கள்தாம் சித்தர்கள்.

அவர்கள் வாழ்ந்ததற்கும் சான்றுகள் உண்டு. தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கும் சான்றுகள் பல உண்டு. அப்படிப்பட்ட சித்தர்களின் வழி வந்தவர்தான் தாயுமானவர்.

இவர் தனிமனித ஒழுக்கத்திற்கும், சமுதாயம் மேம்படவும் கூறிய பல கருத்துகளை, புலவர் ஆ. ஆறுமுகம் அவர்கள் இந்நூலின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கின்றார். அவரின் முயற்சி வெல்லவும், அவருக்கும் இந்நூல் வெளிவர துணைநின்ற அவரின் நண்பர்களுக்கும் என் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

(எ.வ.வேலு)

Koviloor Digital Library

வாழ்த்துரை

அரங்க. இராமலிங்கம்
தமிழ்ப்பேராசிரியர்
இயக்குநர் – பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

தமிழகத்தில் ஆட்சிப் பணியிலிருந்து சமயப்பணிக்கு வந்த அருளாளர்கள் மூவர். ஒருவர் மாணிக்கவாசகர். மற்றவர் தெய்வச் சேக்கிழார். பிறிதொருவர் தாயுமானவர். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய இப்பெருமகனார் வடமொழி தமிழ் ஆகிய இருமொழிகளையும் நன்கு கற்றவர். அத்வைதம் சைவசித்தாந்தம் ஆகிய இருநெறிகளுக்கும் ஒருவகைச் சமரசம் கண்டவர். உபநிடதக் கருத்துகளையும் முன்னோர் நூல்களையும் பொன்னேபோல் போற்றித் தம் பாடல்களில் புகழ்ந்தவர். வாசகஞானம் என்ற ஏட்டுப் படிப்பால் பலனில்லை என்று கண்டு உரைத்தவர்.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்;
கற்றும் அறிவில்லாத என்
கர்மத்தை என்சொல்கேன்? மதியை என் சொல்லுகேன்? – சித்தர்கணம் : 10

என்று பாடி உண்மை நிலையை உலகுக்கு உரைத்தவர்.

56 தலைப்புகளில் 1451 பாடல்களைப் பாடியருளியவர் தாயுமானவர். சித்தர்கணம் என்ற தலைப்பில் பத்துப் பாடல்கள் உள்ளன. இந்தப் பத்துப் பாடல்களைப் பற்றிய தம் கருத்துகளைப் புலவர் ஆ. ஆறுமுகம் நூலாக்கியுள்ளார்.

'சித்தர் கணம்' என்ற தலைப்பில் அமைந்துள்ள பத்துப் பாடல்களின் கருத்துகளை வகை தொகை செய்து வளம் கண்டிருக்கிறார் நூலாசிரியர். **முன்னோர் மொழிபொருளை, பொன்னேபோல் போற்றுவோம்** என்பதற்கிணங்க, அறிஞர் பலரின் கருத்துகளை நூலாசிரியர் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். புலவர் ஆ. ஆறுமுகனாரின் எழுத்துத் திறன் பன்முகப் பார்வையாகப் பரந்து விரிந்து ஓங்கிட வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகளுடன்,

அரங்க. இராமலிங்கம்

Koviloor Digital Library

'நாவுக்கரசர்'
புலவர் சு. நஞ்சப்பன்
மாநிலச் சிறப்புத் தலைவர்
தமிழகத் தமிழாசிரியர் கழகம்

6, எழில்மதி இல்லம்,
வன்னி நகர்,
வெள்ளக்கிணறு,
கோயம்புத்தூர்.

அணிந்துரை

சூரியனிலிருந்து தெறித்து விழுந்த அனற் பிழம்புதான் இவ்வுலகம். இவ்வுவலகில் தோன்றிய முதல் நாடு தமிழ்நாடு. மொழி தமிழ்மொழி, இனம் தமிழினம் என்ற வரலாற்று உண்மையைப் பாவாணர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஒரு நாடு வானுயர்ந்துள்ள மலைகண்டு மதிக்கப்படுவதில்லை. வற்றாத நீர்வளம் கண்டும் மதிக்கப்படுவதில்லை. குன்றாத செல்வ வளம் கண்டும் மதிக்கப்படுவதில்லை. அறிவு வளம் நிறைந்த மக்களைக் கண்டே மதிக்கப்படுகிறது. உலகில் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் பேசப்படும் ஒரே இந்திய மொழி தமிழ்மொழிதான். மேலும் 42 மொழிகளுக்குத் தாயாகத் திகழும் சிறப்புமிக்க மொழி தமிழ்மொழிதான். தொன்மை வளம் நிறைந்த தமிழ் மொழியில் பல்வேறு நூல்கள் படைக்கப்பட்டுள்ளன.

அத்தகு சிறப்புமிக்க நூல்களில் தாயுமானவரின் சித்தர்கணம் என்று நூலும் ஒன்று.

நூலாசிரியர்

நூலாசிரியர் புலவர் திரு. ஆ. ஆறுமுகம் அவர்கள் தாய்ப் பாலிடம் கொண்ட பற்றுதல் போலவே தாய்மொழியின்பாலும்

Koviloor Digital Library

பற்றுதல் கொண்டவர். தமிழால் வாழும் நாம் தமிழுக்காகவே வாழ வேண்டும் என்ற தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் கொள்கையை நெஞ்சில் நிறுத்திச் செயல்படுபவர். வேகமும் விவேகமும் நிறைந்த பண்பாளர். ஒன்றைச் செய்ய நினைத்தால் விரைந்து அதைச் செய்து முடிக்கும்வரை ஓய்வு கொள்ள மாட்டார். பேச்சாலும், எழுத்தாலும் தமிழ் வளர்க்கும் நல்ல தமிழ்த் தொண்டர், "நுண்மாண் நுழைபுலம்" மிக்கவர். வெள்ளுடை வேந்தர். அண்ணாமலையாரின் நினைவு நெஞ்சைவிட்டு அகலாதவர், அவர் தம் நூலுக்குத் தேர்வு செய்த தலைப்புதான். "தாயுமானவரின் சித்தர்கணம் – ஒரு பார்வை" மிகக் கனமான தலைப்பில் நூல் எழுதுவது சிங்கத்தை அதன் குகையில் சந்திப்பதற்கு ஒப்பாகும். நூற்றுக்கணக்கான நூல்களைக் கற்று படைக்கப்பட்டதுதான் இந்நூல்.

மலர்தோறும் சென்று தானுண்ட தேனைச் சேர்த்து வைக்கும் வண்டுபோல் புலவர் ஆ. ஆறுமுகம் பல நூல்களைக் கற்று, அவற்றில் தோய்ந்து தாயுமானவரின் பாடல்களில் மூழ்கி எடுத்த முத்துதான் இவ்வரிய படைப்பு. நூலாசிரியருடன் எனக்கு நெருங்கிய நட்பும், பல்லாண்டு பழக்கமும் உண்டு. என் உடன் பிறவாத் தம்பி. ஆனால் அவருள் இருக்கும் ஆற்றலை இந்நூலைக் கற்றபோதுதான் உணர்ந்தேன், வியந்தேன், மகிழ்ந்தேன், பாராட்டி மகிழ்கிறேன்.

இந்நூல் வழி தாயுமானவரின் வாழ்க்கையையும் அவர்தம் பண்பு நலன்களையும், அவர் காட்டும் வழியையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

"எந்தையாய் எம்பிரானாய் மற்றும் யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரான்" என்று போற்றப்பட்ட சிவபெருமானையே தாயுமானவர் என்று ஏற்றிப் போற்றும் சுவாமி தாயுமானவர். அவர் தாயுமான சிவபெருமான் திருவருளால் பிறந்தவர்.

நூலறிவு வாழ்க்கைக்கு உதவாது மெய்யறிவே உதவும் என்பதை நூலாசிரியர் பலவாறு விளக்கியுள்ளார். இறைவன், அறிவால் ஆய்வுக்கூடத்தில் ஆய்ந்து அறியக் கூடியவர் அல்லர். மெய்யறிவால் உணர்ந்து வணங்கத்தக்கவர். "உடல் உள்ளம்

Koviloor Digital Library

உயிர்'' இம்மூன்றும் இணைந்து இருப்பவன் மனிதன். உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக்கி, மெய்யறிவால் இறைவனை உணர்ந்து இன்புற்று பல்லாண்டு மரணமற்ற வாழ்க்கை வாழ்ந்தவர்களே சித்தர்கள்.

நாம் அனைவரும் தாயால் தந்தையை அறிந்து கொண்டோம். தந்தையால் குருவைக் கண்டோம். ஆனால் குருவால் தெய்வத்தைக் கண்டோமா? என்றால் இல்லை என்பதே விடையாகும்.

சித்தர்கள் சிவனைக் கண்டவர்கள்; சிவத்தையும் சக்தியையும் கண்டவர்கள். இயற்கையோடு இணைந்து, ஒழுக்கம் நிறைந்த மெய்யான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். மக்கள் நலம் காத்தவர்கள். எல்லாம் அறியவல்ல பேராற்றல் பெற்றவர்கள். மெய்ம்மையைப் போற்றியவர்கள் பதினெண் சித்தர்களின் சித்துக்களை நூலாசிரியர் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார்.

வரலாற்று நோக்கு, தத்துவ நோக்கு, விளக்கவியல் நோக்கு, பகுப்பாய்வு நோக்கு என்னும் அணுகுமுறைகளை இந்நூலில் நூலாசிரியர் பின்பற்றியுள்ளார். குடும்பப் பாசவலை என்னும் தளை அறுத்து, விழிதிறந்து காட்டும் அரிய நூலாகும். காமமும், மயக்கமும், வெகுளியும் நம்மைவிட்டு நீக்கும் முறைகளைக் கூறி, நீக்கினால் ஏற்படும் நன்மைகளை அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் துணை நிற்கும்.

சித்தர்கள்

அறிவர் என்று தொல்காப்பியரால் குறிக்கப்பெற்றவர்கள். மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள்; ஆசைகளுக்கு ஆசைக்கு அப்பாற்பட்டவர்கள்; தன்னலமற்றவர்கள்; இயற்கையை உணர்ந்து அதை அழிக்காது அதனோடு கலந்து வாழ்ந்தவர்கள்.

ஐந்தெழுத்தை நாளும் ஓதும் மெய்யன்பர்கள். கல்வியால் பெறமுடியாததைச் சிவபெருமானிடம் மாறா அன்பால் மட்டுமே பெறக்கூடிய எண்வகைச் சித்துக்களைப் பெற்றவர்கள்.

Koviloor Digital Library

எண்வகைச் சித்தர்கள்

பஞ்சினும் மென்மையாகுதல், விருப்பம்போல் உருவத்தைப் பெருக்கிக் கொள்ளுதல், உலக முழுவதும் காணும் ஆற்றல் பெறுதல், சிவனை நேரில் கண்டு தரிசனம் செய்தல், வேண்டுவன அடைதல், வீடுபேறு அடைதல், மேலேழ், கீழேழ் உலகங்களிலும் சென்று தங்கி நிற்கும் ஆற்றல் இவ்வெண் வகைச் சித்துக்களையும் நாம் அறிந்து கொள்ள, உணர்ந்து கொள்ள இந்நூல் நமக்குப் பெரிதும் துணைநிற்கிறது. பதினெண் சித்தர்களைப் பற்றியும், நூலாசிரியர் தாயுமானவரின் பாடல் வழிநின்று, பல்வேறு நூல்கள் வழிகண்டு நமக்களித்துள்ள ஒப்பற்ற நூலாகும்.

இந்தியத் தத்துவ ஞானம் உலகில் மிகத் தொன்மையானது; பின்பற்றத்தக்கது; மிக எளிமையானது. உலகத் துன்பங்களுக்குக் காரணம் உள்ளத் தூய்மையின்மையும், மென்மை இன்மையுமே காரணமாகும். மதம் மாற்றத்தை மையம் கொள்ளாது, மக்கள் மனம் மாற்றத்தையும், மனத்தூய்மையையும், மெய்யறிவையும், மெய்யான வாழ்க்கையையும் சித்தர் தத்துவம் நமக்குக் காட்டும். இதை உணர்ந்து வாழ்ந்தவர்கள் சித்தர்கள். நேர்பட மொழியும் ஆற்றல் பெற்றவர்கள். எதற்கும் தயங்காதவர்கள். எவருக்கும் மயங்காதவர்கள்.

மனதைப் பொறுத்தே எண்ணம் அமையும்.
எண்ணத்தைப் பொறுத்தே செயல்கள் அமையும்
செயல்களைப் பொறுத்தே வாழ்க்கை அமையும்
வாழ்க்கையைப் பொறுத்தே வெற்றி அமையும்
வெற்றியைப் பொறுத்தே உடல்நலம் அமையும்
உடல்நலத்தைப் பொறுத்தே மனம் அமையும்

எனவே மனமே அடித்தளம், அங்கு மாசு நீங்கினால் எல்லா வெற்றிகளும் உங்களை வந்து சேரும். இவ்வுயர்ந்த கருத்தை 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவரின் "சித்தர்கணம்" என்னும் கடலில் மூழ்கி, பிற தேசத்தார் பேசும் மொழி பிறக்கும் முன்னே பிறந்த தமிழ் மொழியில் 21ஆம் நூற்றாண்டில் வாழும் நமக்கு "தாயுமா்னவரின் சித்தர் கணம் ஒரு பார்வை" என்னும்

Koviloor Digital Library

அறிய ஆய்வு நூலைத் தம்பி ஆ. ஆறுமுகம் தந்துள்ளார். அவரது கருத்துகள் நூல் எங்கும் முத்துக்களாய் தெறித்துள்ளன. படிப்போர் முத்துக்களை எடுத்து மாலையாக அணிந்து மகிழலாம்.

புலவர் திரு. ஆ. ஆறுமுகம் எழுத்தாற்றல் பெற்றுள்ளமையால் மேலும் பல நூல்கள் படைக்க வாழ்த்துகிறேன். சித்தர்தம் வல்லமை விளக்கும் இந்நூல் உங்கள் கைகளிலும் மலரட்டும். தமிழ் மணம் வீசட்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்,

கோவை

சு. நஞ்சப்பன்

6.11.2007

Koviloor Digital Library

இரா. கருணாகரன்
கூடுதல் உறுப்பினர்,
ஆசிரியர் தேர்வு வாரியம்,
பள்ளிக் கல்வி இயக்கக வளாகம்,
சென்னை–6.
6.11.2007

பாராட்டுரை

தமிழ்நாடு சான்றோர்களால் சிறப்புற்ற நாடு. செந்தமிழ் மொழியால் செழிப்புற்ற நாடு. தமிழ்த்திரு நாடு தவக்கனல் வீசும் தனிப்பெரும் நாடு. ஆன்ம நேயமும் அமுதத் தமிழுமே தமிழ்நாட்டை உலக அரங்கில் உயர்த்திக்கொண்டுள்ளன.

இந்தியத் திருநாட்டில் மனிதர் மதம் தழுவி மயக்குற்று வேற்றுமைப் பாசியில் வழுக்கிக் கொண்டிருந்தபோது, தமிழ்நாடு இருஞானச் சுடரினை அளித்து பெருமை கொண்டது. ஒருவர் தாயுமானவர்; இவர் முன்னவர். பின்னவர், அருள் பிரகாச வள்ளலார்,

"சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்திய சுத்த சன்மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவன்"

என்றும்,

"சாதியும் சமயமும் காணா அருட்பெருஞ்சோதி"

என்றும் உரக்கக் கூவி உலகோர்க்கு உணர்த்தியவர் வள்ளலார்.

இத்திண்மை எப்படிப் பிறந்தது?

யாரால் உரமூட்டப் பட்டது?

இந்த வித்தினை விதைத்தவர் யார்?

என்று உற்றுநோக்கினால், 'தாயுமானவர்' என்ற பதிலே கிடைக்கும்.

Koviloor Digital Library

இவர் சமயங்களுக்கிடையே சமரசங் கண்டவர். வள்ளலார் சமயங் கடந்து சமரசங் கண்டவர். முன்னவர் அருள்தாகம் கொண்டு ஆன்ம விளக்கேற்றியவர். பின்னவர் ஆன்மநேய ஒருமைப்பாட்டை உலகிற்கு அளித்தவர்.

புலவர் பெருந்தகை தமிழ்த்திரு ஆ. ஆறுமுகம் அவர்கள் தாயுமானவரின் 'சித்தர் கணத்'தைத் தமது பருந்துப் பார்வையால் நுண்மையால் தோய்ந்து எழுதியுள்ளார்.

தமிழகத்தில் பல சமயக் கருத்துகள் காலந்தோறும், புகுந்து நிலைபெற்றுள்ளன. ஆயினும் அவற்றை உள்வாங்கித் தழுவிக் கொண்டு சமப்படுத்தி, மக்களை வளப்படுத்திய பெருமை இத்தமிழ் மண்ணுக்குண்டு.

எனினும், இத்தமிழ் மண்ணுக்கே உரிய தொலைநோக்குப் பார்வை **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற உறவு மனப் பாண்மையும்,

"தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"

என்ற துறவு மனப்பான்மையும் பெரிதும் போற்றுதலுக்குரியவை.

இந்தப் 'பார்வை' தொல்காப்பியர் காலத்தே முகிழ்த்த 'அறிவர்' பார்வை.

இந்த 'அறிவர்' பிற்காலத்தில் சித்தர்கள் என்று மக்களால் அடையாளம் காட்டப்பட்டவர்கள்.

சித்தர்கள் பதினெட்டு என்பர் தமிழர்.

நவசித்தர்கள் என்பர் வடவர்.

சித்தர்கள் 'சித்துகள்' எனும் ஆற்றல்கள் கைவரப் பெற்றவர் என்பர். ஆனால் வள்ளலார்,

"முத்தி என்பது முன்னுறு சாதனம்
சித்தி என்பது நிலைபெற்ற அனுபவம்"

என்பார்.

சித்தி என்பது பட்டறிவால் வளர்ந்த பயன் என்பது அவர் கருத்து. எனவே, சித்தி என்பது நிலைபெற்ற அனுபவத்தைக் குறிக்குமே தவிர, தந்திர வித்தைகளைக் குறிக்காது.

Koviloor Digital Library

"சினமிறக்கக் கற்றாலும் சித்திஎலாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லாதார்க்கு வாயேன் பராபரமே"

என்ற தாயுமானவர் கருத்து உன்னத்தக்கது.

அவ்வாறெனில், இங்குக் குறிப்பிடும் 'சித்து' என்பதன் பொருள் யாது?

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

என மொழிவார் மணிவாசகர்.

ஆக, சித்தமலம் நீக்கிச் சிவமாக்கிக் கொண்டவர்களே சித்தர்கள். "கூற்றம் குறித்தலும் கைகூடும்" என்ற வள்ளுவர் கருத்தும் இவர்தம் ஆற்றலைப் புலப்படுத்தும்.

எனவே, சித்த மலம் நீக்கி, சிவமாக்கிக் கொண்ட அனுபவமே நிலைபெற்ற அனுபவம்.

அவ்வனுபவம்தான் சாதிகுலம் தவிர்த்தது.

"சாதி பேதமில்லை அகப்பேய் தானாகி நின்றவர்க்கு"

"காணப்பா சாதி குலம் எங்கட் கில்லை"

"சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்"

என்ற சித்தர்கள் சித்தர் வரிகள், அனுபவ வரிகள். உண்மை முத்திரைகள் இக்கருத்தை நூலாசிரியர் நிலைநிறுத்துகிறார்.

திருக்குறள், 'எண்குணத்தான்' என்று ஆதிபகவன் பண்பை விளக்கும்.

1. தன்வயத்தன் ஆதல்
2. தூய உடம்பினன் ஆதல்
3. இயற்கை உணர்வினன் ஆதல்
4. முற்றுணர்வினன் ஆதல்
5. இயல்பாகவே பாசம் நீங்கினன் ஆதல்
6. பேரருள் உடைமை

Koviloor Digital Library

7. முடிவிலா ஆற்றல்

8. வரம்பிலா இன்பம்

இதன்கண்ணுள்ள முடிவிலா ஆற்றலும், வரம்பிலா இன்பமும் எண்வகை சித்திகளேயாயின. பேரருள் உடைமையே சமுதாய நலம் நாடியது. அருள் பண்பே உயிரிரக்கமாக மலர்ந்தது.

"அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

எனும் பராபரக் கண்ணி வரிகள் இதைத்தான் உணர்த்தும்.

"நடமாடும் கோவில்" பணியை உணர்த்திய மூலன் மரபில் வந்தவரல்லவா தாயுமானவர்.

சித்தர்கள் அறிவர்கள் அறிவின் எல்லையைக் கண்டவர்கள். மத மயக்கத்திலும் மன மயக்கத்திலும் அமிழாதவர்கள். தாங்கள் கண்டதை, அறிந்ததை, அனுபவித்ததை மக்களுக்கு, மருத்துவம், யோகம், ஒழுக்கம், மெய்யறிவு என்று பலவாறு பகுத்தளித்தவர்கள் அவர்தம் பெருமையைத்தான் 'சித்தர்கணம்' பேசுகிறது.

"........சாமி வேடம் பூண்டவர்
நித்தியம் வயிறு வளர்க்க நீதி ஞானம் பேசியே
பத்தியாய் பணப்பறித்து பாழ்நரகில் வீழ்வரே"

என்ற சிவவாக்கியர் பாடலும்,

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சிக்கில்
பேர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா நோயாம்"

என்ற திருமூலர் பாடலும் ஒப்புநோக்கத்தக்கது.

போலிக் கடவுள் கொள்கை பொருள் சேர்க்கவே உண்டானது என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது.

"தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்"

என்ற மூலர் வரிகள்.

"நீயென நானென வேறில்லை"

Koviloor Digital Library

என்ற தாயுமானவரின் வரிகளோடு ஒப்புநோக்க அத்துவித பேரின்ப நிலையை அஃது உணர்த்தும்.

> **"பிறப்பெனும் பேதைமை நீங்கச் சிறப்பெனும்**
> **செம்பொருள் காண்ப தறிவு"**

என்ற திருக்குறள் 'அறிவர்' அறிந்த அனுபவத்தை அறிவிக்கிறது எனலாம்.

எனவே,

மரணமிலாப் பெருவாழ்வை

ஆன்ம நேய ஒருமைப் பாட்டினைச்

உயிர் இரக்க உணர்வினை

சித்தர்கணம் அருளியதால்

தாயுமானவர் சித்தர் உறவைப் போற்றினார். மெய்யறிவுச் சுடரினை ஏற்றினார்.

'தாயுமானவரின் சித்தர்கணம் – ஒரு பார்வை' என்ற நூலைத் தமிழ் மாணவனாகிய யானும் ஒரு பார்வையாளனாகி பார்த்து, படித்து பாராட்டி மகிழ்கின்றேன். வளர்க அவர்தம் தமிழ்ப்பணி!

என்றும்,
மாறா இன்ப அன்புடன்,
இரா. கருணாகரன்

Koviloor Digital Library

என்னுரை

சித்தர்கள் தொடர்பான ஒரு நூல் எழுதிடவேண்டும் என்பது என்னுடைய நீண்டநாள் அவா. நான், 'தாயுமானவடிகள் திருப்பாடல்கள் சித்தாந்த சிறப்புரை' நூலைப் படித்தபொழுது, 'சித்தர்கணம்' என்ற பகுதியையும் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்நூலில் தாயுமானவர் சித்தர்களின் அளப்பரிய ஆற்றல்களையும், வியத்தகு செயல்களையும் குறிப்பிட்டிருந்தது என் உள்ளத்தை ஈர்த்தது. இதன் விளைவாக உருவானதே 'தாயுமானவரின் சித்தர்கணம் – ஒரு பார்வை' என்ற நூல்.

இந்நூல் 'சித்தர்கணம்' பகுதியில் உள்ளவற்றைப் படம்பிடித்துக் காட்டுவதோடு, தாயுமானவரே ஒரு சித்தர் என்பதும், சித்தர்கள் அளப்பரிய ஆற்றல்களையும், வியத்தகு செயல்களையும் செய்தவர்கள் என்பதையும் அனைவருக்கும் தெளிவாக விளங்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலுக்கு பாராட்டிய வழங்கிய தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் **மாண்புமிகு தங்கம் தென்னரசு** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

வாழ்த்துரை தந்து பாராட்டிய தமிழ்நாடு உணவு அமைச்சர் **மாண்புமிகு எ.வ. வேலு** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் அணிந்துரை எழுதிய தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலச் சிறப்புத் தலைவரும், தமிழாசிரியர்களின் வழிகாட்டியும், தம்பிமார்களைத் தலைமைப் பொறுப்பில் அமர வைத்துச் செயல்பாடுகளைச் செப்பனிடுகிற ஆற்றல் பெற்றவரும் என்

Koviloor Digital Library

கழகப் பணியின் உயர்வுக்குக் காரணமானவரும் ஆகிய நாவுக்கரசர், சொற்கோ, புலவர் **திரு. சு. நஞ்சப்பன்** அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றியை உரித்தாக்குகிறேன்.

வள்ளலார் வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றுபவரும் ஆன்மிக ஈடுபாடும், சைவ சித்தாந்தப் புலமையும் பெற்று நுண்மான் நுழைபுலம் மிக்கவருமாகிய பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (ஆ.தே.வா.) **திரு. இரா. கருணாகரன்** அவர்கள் இந்நூலினைப் படித்து கழிபேருவகை அடைந்து மிகச் சிறப்பான ஆய்வுரை எழுதிச் சிறப்பித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய சென்னைப் பல்கலைக்கழகம் – தொலைதூரக் கல்வி – தமிழ்த்துறைத் தலைவர் **பேராசிரியர் திரு. அரங்க. இராமலிங்கம்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் எழுத பெரிதும் உதவிய பேராசிரியர் **முனைவர் கு. முத்துராசன்** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் எழுதத் தொடங்கியபொழுது என்னுடைய ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் தோன்றாத் துணையாய் இருந்து உற்றுழி உதவிய என் வாழ்க்கைத் துணைவியார், முதுகலை ஆசிரியை **திருமதி ப. சோதிலட்சுமி** அவர்கட்கும், சோர்வு ஏற்பட்ட பொழுதெல்லாம் ஊக்கமூட்டி உற்சாகப்படுத்திய என்னுடைய மகன் செல்வன் **ஆ. எழில்மாறன்**, மகள் செல்வி **ஆ. கிருத்திகா** ஆகியோருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

அட்டைப்படத்திற்கு ஆலோசனை வழங்கிய என் அண்ணன் மகன், சென்னை, அரும்பாக்கம் து.கோ. வைணவக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் **திரு. ப. முருகன்** அவர்களுக்கு நன்றி.

இந்நூலை ஒப்புநோக்கி மெய்ப்புத் திருத்தி உதவிய என் இனிய நண்பரும் மாநிலத் தலைமை நிலையச் செயலாளருமான

Koviloor Digital Library

புலவர் திரு. மீ. முருகையன் அவர்களுக்கு நன்றி.

இந்நூலினை எழிலுற கணினியில் அச்சிட்டுக் குறுகிய காலத்தில் தவழவிட்ட பெருமைக்குரிய **கவிஞர் ஆசூர் க. தங்கதாசன்** அவர்களுக்கு என் நன்றி.

என் வளர்ச்சிக்கு துணைநின்று, ஊக்கப்படுத்தி மகிழும் **தமிழகத் தமிழாசிரியர் கழக** மாநில, மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்களுக்கும் தமிழாசிரியர் சான்றோர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

அன்னைத்தமிழின் மீதும் ஆன்மிகத்தின்மீதும் மிகுந்த பற்றினைக் கொண்ட தமிழுலகம் இம்முயற்சியைப் பெரிதும் வரவேற்கும் என நம்புகின்றேன்.

அன்புடன்,

ஆ. ஆறுமுகம்

மாநிலப்பொதுச்செயலாளர்,

தமிழகத் தமிழாசிரியர் கழகம்

திருவண்ணாமலை
6.11.2007

Koviloor Digital Library

அறிமுகம்

நூலின் தலைப்பு

தமிழ்நாட்டில் வழிவழியாகச் சமயச் சான்றோர்கள் பலர் தோன்றி நாட்டுக்கு நல்வழி காட்டியுள்ளார்கள். அச்சமயச் சான்றோர்களுள் ஒருவர் தாயுமானவர். அவர் தமக்கு முன்னே விளங்கிய திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரிநாதர் முதலானோரின் பாடல்களில் திளைத்தவர். தமிழ் இலக்கிய, இலக்கணங்களை அவர் கற்றதோடன்றி வடமொழி இலக்கிய இலக்கணங்களையெல்லாம் கற்றுத் தேர்ந்தவர். ஆனால் அவருடைய கல்வி, வெறும் உலக வாழ்வின் அளவிலே மட்டும் நின்றுவிடவில்லை. உலக வாழ்வின் உச்சியிலே விளங்குகின்ற உண்மைநாட்டம், மெய்யுணர்வின் நாட்டம் அவரை ஈர்த்தது. கற்று என்ன பலன் என்று உணர்கின்ற எல்லைக்கு அவர் சென்றுவிட்டார்.[1] கற்றிடும் நூன்முறை சொற்ற சொற்கள் தனக்குச் சுகத்தைத் தருமோ! என வினவுகின்றார். தாம் கற்ற நெறியில் நின்று நிருவிகற்பச் சுகத்தைப் பெற வேண்டும் என்றெல்லாம் பெருவிருப்பம் கொள்கின்றார்.

மூவருடைய தேவாரத்தை அருமையாகப் படித்துப் படித்து நன்றாகத் தம் உள்ளத்தைப் பறிகொடுக்க அந்தப் பெருமான் தம்முடைய தமிழால் இறைவனைப் பாடவேண்டுமென்று விரும்பிப் பாடும்பொழுது,

Koviloor Digital Library

**"தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கண்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பு ஆக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செவிக்கே
மூடனேன் புலம்பிய சொல் முற்று மோதான்"[2]**

எனக் கேட்கின்றார். மொழிக்குமொழி தித்திப்பாகத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் சுந்தரரும் பாடிய அந்தத் தமிழை எல்லாம் கேட்டுக் கேட்டு மகிழ்ந்த நின் திருச்செவிக்குள்ளே, தான் பாடுகின்ற பாடல் ஏற்குமோ! என்று இறைவனை வேண்டுகின்றார். இப்படி நூல்களைப் படித்து, அந்தப் பாடல்களில் ஈடுபாடு கொண்டு அந்த நெறியைப் போற்றித் தானும் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார்.[3] அவருடைய பாடல்கள் எல்லாம் தாயுமானவர் பாடல்கள் எனப் பெயர் பெற்று ஐம்பத்தாறு தலைப்புகளில் விளங்குகின்றன. அவற்றில் ஒன்றே சித்தர்கணம் என்பதாகிறது. **அதுவே இந்நூலுக்குரிய தலைப்பாகிறது.**

நூலின் தேவை

உலகிலுள்ள எண்ணில்லாப் பிறவிகளுள் மனிதப் பிறவி ஆற்றல் வாய்ந்ததாகிறது. அதனால்தான் மனிதன் நாளுக்கு நாள் பலதிறப் புதுமைகளைப் படைத்து வருகின்றான். இப்பொழுது மனிதன் ஆற்றிவரும் அருஞ்செயல்களைக் கொண்டு மனிதனின் ஆற்றலை அளவிடுதல் கூடாது. தற்காலத்தை, மனிதன் தன்பாலுள்ள பேராற்றலைக் காணாது வாழும் காலமென்று கூறலாம். மனிதன் தன்பாலுள்ள முழு ஆற்றலை அறிந்துணர்ந்து வாழ்ந்த காலமே சித்தர் காலமாகிறது.

மனிதனிடத்தில் எல்லாம் அறியவல்ல - எல்லாம் நிகழ்த்தவல்ல - ஓராற்றல் அமைந்திருக்கிறது. அவ்வாற்றல் கைவரப் பெற்றோரே சித்தர் ஆவர். அவர் வழிநின்று இயற்கையும் பணி செய்யும். அச்சித்தர் கூட்டத்தார் தாம்கண்ட உண்மைகளைப் பின்வருவோர்க்குப் பயன்படுமாறு எளிய நடையிலும் அரிய நடையிலும் நூல்களாக யாத்துப் போந்தனர். அவர்களுடைய கல்விமுறை வழிவழி வளர்ந்திருப்பின்,

Koviloor Digital Library

இவ்வுலகம் எப்பொழுதோ கடவுள் தன்மை எய்தியிருக்கும். உண்மையிலேயே உலகம் அமைதிப் பூங்காவாக மாறியிருக்கும். மனிதன் தன்பாலுள்ள நுண்மைக்கூறுகளை ஆராயாது, பருமைப் பாத்திகளை ஆராய்வதில் கருத்தைச் செலுத்தினமையால் சித்தர் கல்விமுறை இறந்து படலாயிற்று.

இப்பொழுது உலகம் பொய்ம்மைக்கு இரையாகி வருதல் கண்கூடு. எல்லாத் துறையிலும் பொய்ம்மை புகுந்துவிட்டது. அதனால் மெய்ம்மையை எங்கணும் காணமுடியவில்லை. மெய்ம்மையுடைய மனிதனால் மட்டுமே தன்பாலுள்ள பேராற்றலை அறியமுடிகிறது. சித்தர் நிலைக்கு அடிப்படை மெய்ம்மை. அம்மெய்ம்மை இந்நாளில் மறைதற்குரிய ஆட்சிமுறைகள் உலகில் நடைபெறுகின்றன. தற்கால அரசியல் முறையும், அம்முறை பற்றிப் பிரியும் அரசியல் கட்சிகளும் அக்கட்சிக்காரர்களின் பத்திரிகைகளும் பொய்ம்மையை ஈனும் தாய் தந்தையர்களாக இருப்பதால் உலகில் எம்மூலையிலும் மெய்ம்மை காண்டல் அரிதாகிவிட்டது. இக்காலத்து மனிதனுக்குச் 'சித்தர்' என்ற சொல்லே வேம்பாகத் தோன்றும். உலகம் அறநெறி விடுத்து மறநெறியில் வீழ்ந்து இடர்ப்படுங் காலம் இக்காலம். இக்கால நாகரிகம் மனிதனைப் பலவழி களிலும் இடர்ப்படுத்துகிறது.

சித்தர் நூல்களை ஆடவர், மகளிர் என இருபாலாரும் பயில்வது நலம்பயப்பதாகிறது. இருபாலார் உள்ளமும் சித்தர் பாடல்களில் சித்தர் வரலாற்றில் சித்தர் திருவடியில் பதிந்து கிடத்தல் வேண்டும். அத்தகைய உள்ளம் உடையவர்கள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகள் சித்தர்களாக உயர்ந்து விளங்கு வார்கள். உலகில் பெறற்கரிய மக்கட் பிறவி பெற்று, அதனை நோய்க்கு இரையாக்கிப் பெற வேண்டிய பேற்றினை இழப் பதினும் அறியாமை வேறொன்றுமில்லை. இவ்வறியாமைக்குக் காரணம், மனிதன் தன்னிடத்துள்ள ஆன்ம சக்தியை உணராது வாழ்வதும் அவன் வாழ்விடைப் பொய்ம்மை பரவி நிற்பது மாகிறது. பொய்ம்மை, தற்பெருமை, புறங்கூறல், பொறாமை, வகுப்புப் பூசல், சாதிச் சாண்டை, சமயப் போர் முதலியன இக்காலத்தில் மலிந்து விட்டன. இத்தீமைகளைப் போக்க வல்ல

Koviloor Digital Library

ஆற்றல் சித்தர்கள் பற்றிய கல்விக்கு உள்ளது. மனிதன் தன்பாலுள்ள ஆற்றலையும் ஆன்மசக்தியையும் காணவும் பெறவும் முயலும்போது இத்தீமைகளெல்லாம் இருந்த இடந்தெரியாமல் அகன்றுவிடக் கூடும். எனவே சித்தர் பற்றிய கல்வி இன்றைய நிலையில் தேவையாகின்றன.

தமிழிலக்கிய வரலாற்றில் சித்தர்களின் தமிழ்ச் சமயச் சிந்தனைகள் தனியிடத்தைப் பெற்றுள்ளன. சித்தர்கள் இறை நெறி சார்ந்த தம் பாடல்களில் புரட்சிகரமான புதுமைக் கருத்து களை வெளியிட்டவர்கள்; மேலும் மருத்துவம், இரசவாதம், சோதிடம், வானியல் முதலிய கலைகளிலும் மந்திரம், தந்திரம், குண்டலினி யோகம் முதலிய யோகப் பயிற்சிகளிலும் பேராற்றல் படைத்தவர்கள்; எவ்வகைச் சமய, சமூக அமைப்பு கட்கும் கட்டுப்படாது வாழ்ந்த தனிவகைச் சிந்தனையாளர்கள்.[5] மருத்துவம், இரசவாத வித்தை, நாடி சாத்திரம், சோதிடம் எனப் பல துறைகளில் அவர்கள் சிறந்து விளங்கினாலும் அவர்களது சமயச் சிந்தனைகளும் தத்துவங்களும் அவர்களது தனிப் பெருமைகளைப் பறைசாற்றுவதில் மேலோங்கி நிற்கின்றன. சித்தர்களின் சமயத் தத்துவங்களும் யோக நெறிகளும் அவற்றை வெளிப்படுத்தும் அவர்களது ஞானப் பாடல்களும் பொது மக்கள் அனைவருக்கும் உரியனவாகின்றன. ஆதலால் அவற்றை அறிவது அனைவருக்கும் பயன் அளிப்பவையா கின்றன.

சித்தர்கள் பற்றியும் அவர்களது அளப்பரிய ஆற்றல்கள் பற்றியும் பேசுவதில் தாயுமானவரே மிகவும் சிறந்தவராக விளங்குகின்றார். அவரே ஒரு சிறந்த சித்தராவார். அவரைப் போன்று சித்தர்களைப் பற்றி விரிவாகக் கூறியவர் வேறு எவருமிலர். சித்தர்களின் வல்லமைகளை எடுத்துரைப்பதற் கென்றே ‘சித்தர்கணம்’ என்ற தனித் தலைப்பிட்டுப் பாடிய பெருமை அவருக்கு உண்டு. மேலும் தமது பாடல்களில் வாய்ப்பு நேரிடும்பொழுதெல்லாம் ஆங்காங்குச் சித்தர்களின் சிறப்பியல்புகளைப் பாடியுள்ளார்.

உலகங்களெல்லாம் நிலைகெட்டு அழியுங்காலத்தும் சித்தர்கள் சிறிதும் அசையாது நிற்க வல்லவர்கள் என்று அவர் களது மகிமைகளைத் தாயுமானவர் விரிவாகப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

"உலகங்கள் கீழ்மேல தாகப் பெருங்காற்
றுலாவினற் றாரணையினால்
மேருவென வசையாம னிற்கவல்லீர் உமது
மேதக்க சித்தியெளிதோ?"[6]

எனத் தாயுமானவர் அண்டங்கள், எல்லாம் சிதையுங்காலத்தும் சித்தர்கள் சிதையாது நிற்க வல்லவர் என அவர்களது திறம் பேசியுள்ளார்.

அகத்தவம் என்று கூறப்படுகின்ற மனப் பயிற்சியால் அறிவின் பேரொளியையும் அந்தமில்லாத மகிழ்ச்சியையும் சித்தர்கள் அடைந்திருந்தார்கள். யோகப் பயிற்சியால் பரம்பொருளாகிய மெய்ப்பொருளை நன்குணர்ந்து அதனுடன் இரண்டறக் கலந்தவர்களாகவே இவர்கள் விளங்கினார்கள்; உயிரானது உடம்பிலிருந்து பிரியாவண்ணம் நிறுத்தி வைக்கும் ஆற்றலைப் பெற்ற சீவன் முத்தர்களாக விளங்கினார்கள். இத்தகைய சித்தர்கள் அடக்கமான இடங்களில் எழுப்பப்பட்ட ஆலயங்கள் அவர்களால் இன்றும் புகழ் கொண்டு இலங்கு கின்றன.

போகர் பழனியிலும் புலத்தியர் பாபநாசத்திலும் தன் வந்திரி வைத்தீஸ்வரன் கோயிலிலும் கோரக்கர் திருக்கழுக் குன்றத்திலும் கருவூரர் தஞ்சாவூரிலும் குதம்பையார் மயிலாடு துறையிலும் சுந்தரானந்தர் மதுரையிலும் பாம்பாட்டிச் சித்தர் திருக்கடையூரிலும் பதஞ்சலியார் இராமேசுவரத்திலும் கொங்கணவர் திருப்பதியிலும் மச்சமுனி திருப்பரங்குன்றத் திலும் கமலமுனி திருவாரூரிலும் சட்டமுனி சீர்காழியிலும் இடைக்காடர் திருவண்ணாமலையிலும் இராமதேவர் அழகர் மலையிலும் கும்பமுனி குடந்தையிலும் நந்தீசர் திருவாவடு துறையிலும் திருமூலர் சிதம்பரத்திலும் அகப்பேய் சித்தர் எட்டுக்குடியிலும் அகத்தியர் அனந்தசயனத்திலும் அடக்கமான தாக அறியமுடிகிறது.[7] இத்தலங்களெல்லாம் இன்றைக்கும் பெரும் புகழுடன் விளங்கி வருகின்றன. அன்பர்களின் பிரார்த்தனைகள் இத்தலங்களில் நிறைவேறி வருவதால் அவர்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

Koviloor Digital Library

சித்தர்கள் தெய்வநிலையில் இத்தலங்களில் இருந்த கொண்டு திருவருள் நல்குவதாக மக்கள் நம்பி வருகின்றனர். மேலும் இத்தலங்களில் சித்தர்களின் ஆற்றல்கள் அலைபாய்ந்து கொண்டிருப்பதால் இத்தலங்கள் பொலிவுடன் விளங்கி வருகின்றன என்றும் அறியமுடிகிறது. சீவன்முத்தர்களாகிய இவர்களின் பேராற்றல் என்றும் குறைவுபடாமல் அக்கோயில் களில் நின்றாண்டு வருகின்றது. உண்மையில் சித்தர்கள் உலக மக்களும் உயிரினங்களும் நலம்பெற வேண்டும் என்று எண்ணி உழைத்தவர்கள் ஆவர். ஆதலால் அவர்களின் தூய எண்ணங்கள் அலைகளின் இயக்கமாக நின்றாளுகின்றன என்பதில் ஐயமில்லை.[8]

இக்கருத்தின் அடிப்படையிலேயே தாயுமானவர்,

"சத்தாகி நின்றோர் சடங்கள் இலிங்கமென
வைத்தாரும் உண்டோ என்வாழ்வே பராபரமே"[9]

எனச் சீவன் முத்தர் திருமேனி, அவர்கள் முத்தி அடைந்தபின் இலிங்க வடிவாய் விளங்கும் எனப் பாடியுள்ளார்.

உடலுள்ளபோதே சீவன் முத்தியடையாமல், உடல்நீத்த பின் உயிர் முத்தியில் சேர்தல் என்பது பொருந்தாது என்பதைத் தாயுமானவர்,

"உலக நெறிபோற் சடலம்ஓய உயிர்முத்தி
இலகும் எனல் பந்தவியல்போ பராபரமே"[10]

எனப் பாடியுள்ளார். மேலும் அவர், தமக்கு மேற்பிறவி உண்டெனில், யோகநெறி நின்று காய சித்தி பெற்று முத்தி நாடும்படி உதவவேண்டும். பிறவி இல்லையெனில், அருட்சக்தி துணை கொண்டு உயிர் முத்தி எய்தவும் உடல் கற்பூர தீபம்போல வயங்கவும் இறைவன் அருள்புரியவேண்டும் என்கின்றார்.[11]

உலகில் தாம் உள்ளபொழுதே திருவருளாகிய வான் மண்டலத்தினின்றே நிலைத்த வரமாக இன்பமழையைப் பொழிகின்ற மேகத்தோடு சேர்ந்து தமது அறிவானது பரவசப் படும்படி செய்வது நன்று. அத்தகைய நிலையில் இறுதிவரை

Koviloor Digital Library

இந்த உடம்பின் கூத்துக்கலையாமல் குண்டலி சக்தி என்னும் அம்மையின் அருளினால் ஆகாயத்திலுள்ள மதியின் அமுதமானது இடையறாது பொழிய வேண்டும் எனத் தாயுமானவர் சித்தர்கணத்தில் வேண்டுகின்றார்.[12]

சித்தர்கள் அட்டாங்க யோகத்தில் வல்லவர்கள் என்பதைத் தாயுமானவர்,

"மெய்திகழும் அட்டாங்க யோக
பூமிக்குள் வளர்வேந்தரே"[13]

எனப் பாடியுள்ளார். யோகத்தில் ஆறு ஆதாரமும் மூன்று மண்டலமும் இன்றியமையாதவை என்பதை,

"கெடிகொண்ட தலம்ஆறும் மும்மண்டலத்தினும்
கிள்ளார்க்குச் செல்ல"[14]

எனத்தாயுமானவர் கூறியுள்ளார்.

ஆறு ஆதாரங்களுக்கு உயிரான மந்திரங்கள் பிரணவமும் ஐந்தெழுத்தாகு மென்பதைத் தாயுமானவர்,

"ஓங்கார மானமந் தெழுத்தாற்
புவனத்தை யுண்டு பண்ணிப்
பாங்கா நடத்தும் பொருளே
யகண்ட பரசிவமே"[15]

என நவின்றுள்ளார்.

யோகத்துடன் கூடிய சிவத்தியானம் என்பது சிவராசயோகமாகிறது. அதுவே மிகச்சிறந்தது என்பதை,

"என்றைக்கும் அழியாத சிவராச யோகமாய்"[16]

என அவர் பாடியுள்ளார்.

இங்ஙனம் தாயுமானவர் சித்தர் கணத்தில் பாடியுள்ள சித்தர்களின் அளப்பரிய ஆற்றல்களையும் சிறப்பியல்புகளையும் சித்தர்கணத்திடம் அவர் வேண்டுவதையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இந்நூலின் நோக்கமாகிறது.

Koviloor Digital Library

கருதுகோள்

"சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்"[17]

என்று அகத்தியரும்,

"காமம், வெகுளி, மயக்கம் இல்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோர் சித்தர்"[18] என்று தொல்காப்பியரும்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாம் செய்தவம்
ஈண்டு முயலப் படும்"[19]

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"[20]

எனத் திருவள்ளுவரும்,

"சித்தர் சிவஞானம் சென்றெய்து வோர்களே"[21]

"சேர்ந்த எண்யோகத்தர் சித்தர் சமாதியோர்"[22]

"யோகசமாதி உகந்தவர் சித்தரே"[23]

எனத் திருமூலரும்,

"திண்திறல் சித்தர்கள்"[22]

என்று மாணிக்கவாசகரும் எனச் சித்தர்கள் பற்றிப் பலரும் பாடியுள்ளனர். சித்தர்களுடைய சிறப்பியல்புகளையும் அளப்பரிய ஆற்றல்களையும் எண்வகைச் சித்திகளையும் ஆறு ஆதாரங்கள் பற்றியும் அவற்றிற்கு உயிரான மந்திரங்கள் பற்றியும் சிவராசயோகமே மிகச்சிறந்தது என்பது பற்றியும் தாயுமானவரே விரிவாகப் பாடியுள்ளார். அவரைப் போன்று பாடியவர் வேறு எவருமிலர் என்பதே இந்நூலின் கருதுகோளாகிறது.

Koviloor Digital Library

எல்லை

தாயுமானவர் சித்தர்கணத்தில் பாடியுள்ள சித்தர்களின் அளப்பரிய ஆற்றல்களும் சிறப்பியல்புகளும் அவர் சித்தர்கணத்திடம் வேண்டுவனவும் இந்நூலில் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் அவரது பாடல்களில் பிறவிடங்களில் காணப்படும் சித்தர் பற்றிய சிறப்புகளும் இங்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மூலங்கள்

உரையாசிரியர், கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர் ப. இராமநாதப் பிள்ளை அவர்களால் உரை எழுதப் பெற்று, கழக வெளியீடாக வந்துள்ள தாயுமானவடிகள் திருப்பாடல்கள் சித்தாந்தச் சிறப்புரை என்ற நூலிலுள்ள சித்தர் கணம் என்ற பகுதியும், உரையாசிரியர். பேராசிரியர் புலவர் அ. மாணிக்கனார் அவர்களால் உரை எழுதப் பெற்று, சென்னை தியாகராய நகர் வர்த்தமானன் பதிப்பக வெளியீடாக வந்துள்ள தாயுமானவரின் திருப்பாடல்கள் மூலமும் உரையும், முதல் தொகுதி என்ற நூலிலுள்ள அதே சித்தர்கணம் என்ற பகுதியும் இந்நூலுக் குரிய மூலங்கள் ஆகின்றன.

தாயுமானவர் பாடல்களில் சித்தர் கணம் தவிரவுள்ள பிற பாடல்கள், தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம், தேவாரம், திருவாசகம், பட்டினத்தார் பாடல்கள், திருவருட்பா, தமிழ்க் கலைக் களஞ்சியம், தமிழிலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் முதலியன இந்நூலுக்குரிய துணை ஆதாரங்கள் ஆகின்றன.

சி.ஆர். சகுந்தலா என்பவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தாயுமானவர் பாடல்கள் - ஓராய்வு என்ற தலைப்பில் பிஎச்.டி., ஆய்வு நிகழ்த்தியுள்ளார். தாயுமானவரின் காலமும் வரலாறும், சான்றோர் தாக்கம், தாயுமானவர் பாடல்களில் காணப்படும் சமுதாயம், தத்துவக் கொள்கை, இலக்கியத் தன்மைகள், செல்வாக்கு ஆகிய தலைப்புகளில் விளங்குகிறது.

Koviloor Digital Library

சி. சுப்பிரமணிய பிள்ளை என்பவர் ''தாயுமான சுவாமிகள் பாக்கள் விளக்கவியல் - மொழியியல் ஆய்வு'' என்ற தலைப்பில் கேரள பல்கலைக் கழகத்திலும் பி. சௌரிராசன் என்பவர் ''தாயுமானவ சுவாமிகள் - ஒரு திறனாய்வு'' என்ற தலைப்பில் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திலும் வசந்தா என்பவர் ''தாயுமானவர் பாடல்களில் மனிதநலம்'' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பிஎச்.டி. ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளனர்.

சி. சதாசிவப் பிள்ளை ''தாயுமானவ சுவாமிகள் சரித்திரமும் தோத்திரப் பாக்களும்'' என்றும் சுத்தானந்த பாரதியார் ''தாயுமானச் சுடர்'' என்றும் திரு.வி. கலியாண சுந்தரனார் ''கடவுள் காட்சியும் தாயுமானவரும்'' என்றும் சுவாமி சித்பவானந்தர், ''சின்மயானந்த குரு'' ''கருணாகரக் கடவுள்'' ''மௌன குரு வணக்கம்'' என்றும் கா. சுப்பிரமணிய பிள்ளை ''தாயுமான சுவாமிகள் சரித்திரமும் நூலாராய்ச்சியும்'' என்றும் டாக்டர் மு. வரதராசன் ''தாயுமானவர்'' என்றும் டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் ''தாயுமானவர்'' என்றும் டாக்டர் பி. சவுரிராசன் ''தாயுமானவர் வாழ்வும் வழியும்'' என்றும் தாயுமானவர் பற்றியும் அவரது பாடல்கள் பற்றியும் திறனாய்வு நூல்கள் எழுதியுள்ளனர். புலவர் செந்துறை முத்து ''தாயுமானவரும் பட்டினத்தாரும்'' என்ற தலைப்பில் இருவரது வாழ்க்கை வரலாற்றினையும் பாடல்களையும் ஒப்பிட்டு ஒப்பாய்வு நூல் எழுதியுள்ளார். இரா. முத்துக்குமாரசுவாமி என்பவர் ''தாயுமானவர்'' என்ற தலைப்பில் திறனாய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்.[25]

அணுகுமுறைகள்

ஒரே பொருளைப் பல்வேறு நோக்குகளில் நோக்க வேண்டிய தேவை இருக்கலாம். அவ்வாறு நோக்கும்பொழுது அந்தப் பொருளைப் பற்றிய முழுமையான அறிவு வெளிப்படுகிறது. தான் எடுத்துக் கொண்ட பொருள் பல வளர்ச்சிப் படிநிலைகளையுடையதாகிறது. அப்பொருளி

Koviloor Digital Library

னுடைய வளர்ச்சிப் படிநிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அந்த மாற்றங்களுக்குக் காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணத்தைச் சரியாகக் கண்டறிந்து இன்ன காரணத்தால் இன்ன விளைவு ஏற்பட்டது என்று விளக்குவது வரலாற்று நோக்கில் இன்றியமையாததாகிறது. இப்படி அமைகின்ற வரலாற்று நோக்கு அணுகுமுறை ஆகிறது.[26] இந்நூலில் தாயுமானவரின் வாழ்க்கை வரலாறும் படைப்புகளும் பற்றி தெரிந்து கொள்வதற்கு வரலாற்று நோக்கு அணுகுமுறை பின்பற்றப் பட்டுள்ளது. மேலும் தாயுமானவர் விளக்கியுள்ள சித்தர்களின் ஆற்றல், சிறப்பியல்புகளைக் கண்டறிவதற்குத் தத்துவ நோக்கு அணுகுமுறை, விளக்கவியல் நோக்கு அணுகுமுறை, உள்ளடக்க நோக்கு அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் இந்நூலில் பின்பற்றப் பட்டுள்ளன.

நூலின் அமைப்பு

இந்நூல் ஐந்து தலைப்புகளின்கீழ் பகுக்கப்பட்டுள்ளது. முதற்கண் தலைப்பு விளக்கப்படுகிறது. இதில் வினை மேற்கொள்ள வேண்டியதன் தேவைகள், நோக்கங்கள், கருதுகோள், ஆய்வின் எல்லை, மூலங்கள், தாயுமானவர் படைப்புகள் பற்றிய செய்திகள் இதில் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது தலைப்பில் தாயுமானவரின் வாழ்க்கை வரலாறும் படைப்புகளும் நோக்கப்பட்டுள்ளன. தாயுமான வரின் தோற்றம், அவர் கல்வி கற்றுப் புலமை பெற்ற பாங்கு, விசயரங்க சொக்கநாத நாயக்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணிபுரிதல், அப்பணியில் திறமையாகச் செயல்பட்டாலும் உயிருக்கு உறுதி பயக்கும் உயர் வழியிலேயே நாட்டம் செலுத்துதல், அதன் விளைவாக மௌன குருவைச் சந்தித்து ஆன்ம ஈடேற்றத்திற்குரிய வழிகளைக் கூறவேண்டுதல், அருணந்தி சிவாச்சாரியாருடைய சிவஞானசித்தியாரே இறைவனை அடையும் வழியைக் கூறும் சிறந்த சுத்தாத்துவைத சைவ சித்தாந்தம் என மௌனகுரு கூறுதல், அதனால் மனநிறைவு கொள்ளாத தாயுமானவர் தமக்குத் தீட்சை

Koviloor Digital Library

வழங்குமாறு மௌனகுருவிடம் வேண்டல், அவர், ''சிலகாலம் இல்லறத்தில் இருந்துவிட்டு வருமாறு கூறுதல், தாயுமானவர் சித்தாந்த நூல்களைக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என இருந்து வருதல், இராமேசுவரம் புறப்பட்டுச் செல்லுதல், செல்லும் வழியில் விராலி மலையில் சித்தர்கள் பலர் கூடியிருக்கும் இடத்திற்குச் சென்று அவர் களோடு சில நாட்கள் தங்கியிருந்து அளவளாவுதல், இராமேசு வரத்தில் வழிபாடு நிகழ்த்தி விட்டுத் திருமறைக் காட்டிற்கு வருதல், திருமணம் புரிந்து கொண்டு சிலகாலம் இல்வாழ்க்கை யில் இருந்துவிட்டுத் துறவினை மேற்கொள்ளுதல், மௌன குருவைச் சந்தித்து தீட்சை அளிக்க வேண்டல், மௌன குரு 'சும்மா இரு' என்று திருவாய் மலர்ந்தருளித் திருவடி தீட்சை அளித்தல், கூடுதல், பிரிதல் அற்று, முக்குணம் அற்று, நினைத்தலும் உணர்தலுமின்றி, ஐம்பூத முதலியன கடந்து, காட்சி உணர்வற்று, வாட்டம் ஏதுமின்றி, மனமொடுங்கி முழுமுதல் பேரின்பக் கடலில் திளைத்துச் சிவமயமாய் இருக்கும் நிலையே சும்மா இருத்தல் எனத் தாயுமானவர் உணர்ந்து பாடுதல், திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை எனப் பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபடுதல், இராமநாதபுரம் வந்தடைந்து அந்நகரின் கீழ்பாலுள்ள காட்டூரணி என்ற தனியிடத்தில் நிட்டை கூடியிருந்து சமாதியாதல், தாயுமானவரின் காலம் 18-ஆம் நூற்றாண்டாதல், அவருடைய பாடல்கள் 56 தலைப்புகளில் விளங்குதல் எனப் பல செய்திகளும் இதில் கூறப்பட்டுள்ளன.

மூன்றாவது தலைப்பில் தாயுமானவரின் சித்தர் கணத்தில் விளக்கமுறும் சித்தர்களின் சிறப்பியல்புகள் பற்றியதாகிறது. இத்தலைப்பில், தொல்காப்பியர் காலத்தில் சித்தர் 'அறிவர்' எனக்குறிக்கப்பட்டமை, நச்சினார்க்கினியர் அகத்தியரையும் திருமூலரையும் சித்தர் கணத்தலைவராகக் கூறுதல், சாத்திரங் களைச் சுட்டெரித்தவர் சித்தர் என்றும் அட்டாங்க யோகவழி நின்று ஞானம் பெற்றவர் சித்தர் என்றும் திருமூலர் கூறுதல், சித்தர்களை ஓர் அடியார் இனமாகச் சைவ சமயக் குரவர்கள் பாடியிருத்தல், சிவபெருமானும் முருகப் பெருமானும்

Koviloor Digital Library

சித்தர்களாக விளங்கிச் சித்துகள் புரிந்திருத்தல், சிவநெறியைச் சார்ந்து ஒழுகியவர்கள் சித்தர்கள், என்றாலும் சமயங்களில் கூறியுள்ள சமய விதிகளை விலக்கி விட்டு, ஆத்ம ஞானம் ஒன்றையே கடைப்பிடித்தவர்கள், உடம்பைப் பொய்யென்று சொல்வதற்கு மாறாக மெய் என்றுகூறி அச்சொல்லுக்குப் பொருள்கண்டு அணிமா, மகிமா, லகிமா என அட்டமா சித்திகளை அடைந்தவர்கள், உடம்பை மாத்திரம் தகுந்தபடி பலப்படுத்திக் கொண்டால் பிறப்பு, இறப்பினின்று நீங்கி விடலாம் என்றுணர்ந்து, அநேகக்காலம் உயிருடன் இருக்கக் கூடிய நித்திய வாழ்வைப் பெற்ற மிகப் பெரிய மகான்கள், கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் எனச் சித்தர்களுடைய இயல்புகள் பலவும் நோக்கப் பட்டுள்ளன. மேலும் தாயுமானவர் கூறியுள்ள சித்தர்களின் அளப்பரிய ஆற்றல்கள், சித்தர்களுடைய அட்டமா சித்திகள், இவ்வகைச் சித்திகளில் வல்ல சித்தர்கள் வானுலகக் கற்பக மரத்தின் நல்ல நிழலை இம்மண்ணுலகத்திற்கு வரவழைப்பார்கள். கேட்டார்க்குக் கேட்டவற்றை நல்கக் கூடிய வானுலகச் செல்வங்களான சங்கநிதி, பதும நிதி ஆகியவை இம்மண்ணுலகிற்கு வந்து அவர்கள் பக்கம் நின்று அவர்கள் கேட்டவற்றை வழங்குமாறு செய்வார்கள்! யுக முடிவில் தோன்றும் மிகப்பெரிய வெள்ளத்தை ஒருசிறிய கிணற்றில் வந்து அடங்குமாறு செய்வார்கள்! யுக முடிவில் அயன், மால், வானவர் கோன் முதலான தேவர்கள் அனைவரும் அழிந்தொழியும் காலத்திலும் இறைவன் திருவருளால் அவர்கள் உலாவிக் கொண்டிருப்பார்கள்! உலகங்கள் அனைத்தும் கீழ்மேலாகத் தடுமாறும்படி பெருங்காற்றெழுந்து வீசுங்காலத்தில் பொறைநிலை என்று சொல்லப்படும் நல்ல தாரணை முறையால் பொன்மலையாகிய மேருமலை என்னு மாறு அசையாமல் நிற்கும் பெருவல்லமை படைத்தவர்கள்! அவர்களுடைய வல்லமை அளவிடற்கரியன! அவர்கள் சிவராச யோகச் செல்வராய் விளங்குபவர்கள், தவராசச் சிங்கமாய்த் திகழ்பவர்கள் எனத் தாயுமானவர் அவர்களின் அளப்பரிய ஆற்றல்களை வியந்து பாடியிருத்தல் எனப் பலவும் இத்தலைப் பில் கூறப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

தாயுமானவர் சித்தர் கணத்திடம் வேண்டுவனவற்றை நோக்குவதாக நான்காம் தலைப்பு விளக்குகின்றது. தாயுமானவர் சிறந்த சித்தர். சித்தராகிய அவரே சித்தர்களுடைய அளப்பரிய ஆற்றல்களையும் வியத்தகு செயல்களையும் சிறப்பாகப் பாடியவர் ஆவர். சித்தர்களுடைய சிறப்பியல்புகளை எடுத்துரைப்பதற்கென்றே சித்தர்கணம் என்று தலைப்பிட்டுப் பாடியவர் தாயுமானவர் ஒருவரே ஆவர். சித்தர்கணத்திலுள்ள ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், ''வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம்'' என அவர் சித்தர்களைப் போற்றிப் பாடியிருத்தல், பொய் ஒழுக்கத்தைக் கைவிடுவதற்குத் தனக்கருள்புரிய வேண்டும், நாயைவிட இழிந்தவனான அடியேனுக்குக் காட்சியளித்தல் வேண்டும், தாம்கற்ற கல்வியால் தமக்குச் சிறிதும் பயன் இல்லை. மெய்யுணர்வுக் கல்வியே தமக்குப் பயன் அளிக்கவல்லது. அத்தகைய கல்வியைத் தமக்கு அருளல் வேண்டும், இப்பிறவி யிலேயே தமக்கு முத்தி கிட்டவேண்டும். தமது பாடல்கள் பற்றி யார் பாடினார்? என்று எவரேனும் வினவின் ''சிறிது தோய்ந்த குணசாந்தன் பாடினான்'' என்று கூற வேண்டும், அத்தகைய சொற்களை விரைவில் தமது காதால் கேட்க திருவருள் புரிதல் வேண்டும் எனத் தாயுமானவர் சித்தர்கணத்திடம் வேண்டுதல் என அனைத்தும் இத்தலைப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

குறிப்புகள்

1. வரதராசன், டாக்டர் மு., தாயுமானவர், ப.1.
2. தாயுமா. பொன்னை மாதரை, பா. 36.
3. தாயுமானவர், ப.2.
4. கலியாண சுந்தரனார், திரு.வி., சித்தர்கள் (கட்டுரை) தமிழ்ச்சோலை (நூல்) பக். 102-103.
5. மோசஸ் மைக்கேல் பாரடே, டாக்டர்., தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும் (கடவுட் கொள்கைகள்) ப.1.
6. தாயுமா. சித்தர்கணம், பா. 3.
7. இளங்கம்பன், டாக்டர்., தத்துவக் குயில்கள், பக். 123 - 124.
8. மேற்படி, ப. 125.
9. தாயுமா. பராபரக்கண்ணி, 245.
10. மேற்படி, 358.
11. தாயுமா. சித்தர்கணம், பா. 8.
12. மேற்படி, ப. 4.
13. மேற்படி, ப. 5.
14. மேற்படி, ப. 6.
15. தாயுமா. பாயப்புலி, பா. 6.
16. மேற்படி, சித்தர்கணம், பா. 6.
17. சித்தர் ஞானக் கோவை, அகத்தியர், பா.5.
18. தொல். புறத்திணையியல், நூற்பா. 20.

Koviloor Digital Library

19. திருக்குறள், 265.
20. மேற்படி, 269.
21. திருமந்திரம், பா. 1446.
22. மேற்படி, ப. 1447.
23. மேற்படி, ப. 1490.
24. திருவாசகம், திருப்படையெழுச்சி, பா.2.
25. முத்துக்குமார சுவாமி, இரா., தாயுமானவர், தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி - 2.
26. பொற்கோ, டாக்டர்., ஆராய்ச்சி நெறிமுறைகள், பக். 87-88

Koviloor Digital Library

தாயுமானவரின் வாழ்க்கை வரலாறும் படைப்புகளும்

தாயுமானவர் வாழ்க்கை வரலாறு

சோழ வளநாட்டில் வேதாரணியம் என்ற திருமறைக் காட்டில் வேளாளர் குலத்தில் தோன்றியவர் கேடிலியப்பப் பிள்ளை. அவரது துணைவியார் கஜவல்லி அம்மையார். கேடிலியப்பப் பிள்ளை கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் மிகச் சிறந்து விளங்கினார். அதனால் அக்காலத்தில் திருச்சியில் ஆட்சி புரிந்து வந்த விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கர் அவரை அழைத்துத் தமது அரசாங்கத்தில் பெருங்கணக்கராக அமர்த்திக் கொண்டார்.[1] அரசாங்கத்தின் கணக்கு வழக்குகளைக் கேடிலியப்பப் பிள்ளை செவ்வனே ஆற்றி வந்தார். அவரது இல்லறமும் நல்லறமாக விளங்கியது. அவருக்கு ஆண் மகவு ஒன்று தோன்றியது. சிவசிதம்பரம் என்ற பெயரிட்டு வளர்த்த அம்மகவினைக் கேடிலியப்பப் பிள்ளை மகப்பேறின்றி வருந்திய தமது தமையனாருக்குத் தத்தாகக் கொடுத்துவிட்டார்.

தமக்கொரு மகவு வேண்டும் என்ற பேரவாவில் கேடிலியப்பப் பிள்ளை திருச்சிராப்பள்ளி, மலைக் கோயிலில் வீற்றிருந்தருளும் தாயுமானவரை நாள்தோறும் வழிபட்டு வந்தார். அதன்பயனாக அவர்களுக்கு ஆண்மகவு ஒன்று 1705-இல் பிறந்தது. தாயுமானவர் திருவருளால் அம்மகவு தோன்றியதால் அதற்குத் தாயுமானவர் என்றே பெயரிட்டு வளர்த்து வந்தனர்.[2]

தாயுமானவர் தமது பாடல்கள் சிலவற்றில் அவ் விறைவனை,

Koviloor Digital Library

"அந்த மாதியு மளப்பருஞ்
சோதியே யடியார்தஞ்
சிந்தனை மேவிய தாயுமா
னவனெனுஞ் சிரகிரிப் பெருமானே"[3]

என்றும்,

"தடுத்த வாறும் புகலாய்
சிரகிரித்தாயுமான தயாபரமூர்த்தியே
தாயுந் தந்தையு மானோய்
சிரகிரித் தாயுமான தயாபர மூர்த்தியே"[4]

என்றும் போற்றிப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

கல்வி கற்றுப் புலமை பெறுதல்

தாயுமானவருக்கு ஐந்தாண்டு ஆனதும் அவரது தந்தையார் அவரைக் கல்வி கற்க பள்ளிக்கு அனுப்பி வைத்தார். தாயுமானவர் பள்ளிக்கல்வியில் சிறந்த தேர்ச்சி பெற்றார். பின்னர் சிற்றம்பல தேசிகரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் வடமொழியிலுள்ள வேதவேதாந்தங்களையும் பயின்று இருமொழிப் புலமை உடையவரானார். இதற்கு,

"... ... ... வடமொழியிலே
வல்லா னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்"[5]

என அவர் பாடியுள்ளது அகச்சான்றாகிறது

மேலும் தாயுமானவர் தமது இளமைப் பருவத்திலேயே தம் பெற்றோர் மரபு வழித் தேவார, திருவாசக, திருப்புகழ்ப் பாடல்களை இசையுடன் ஓதிப் பயிற்சி பெற்றார்.

Koviloor Digital Library

இதனை,

"... ... ... புலைநா யேனைத்
தொழும்புகொளச் சீகாழித்துரையே தூது
சென்றிடவே பொருளைவைத்த நாவ லோயநஞ்
சிவனப்பா என்றஅருட் செல்வத் தேவே"[6]

என்றும்,

"தேவர்தொழும் வாதவூர்த் தேவே என்பேன்"[7]

என்றும் வரும் அவர்தம் பாடலடிகளால் அறியமுடிகிறது.

அன்றியும் பட்டினத்தார், பத்திரகிரியார் முதலானோரின் பாடல்களையும் தாயுமானவர் ஆழ்ந்து கற்றார். வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்தார். இதனை,

"வேதமுடன் ஆகம புராணமிதி காச முதல்
வேறுமுள கலைகளெல்லாம்"[8]

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோனநலமே பராபரமே"[9]

என்றெல்லாம் அவர் பாடியுள்ள பாடலடிகளில் காணமுடிகிறது.

இவ்வாறெல்லாம் அவர் கல்வி கற்றிருந்தாலும் அக் கல்வியை அவர் பெரிதாக மதிக்கவில்லை. நூலறிவு இறைவனை அடைய உதவாது. நூலறிவுக்கும் மேலான மெய்யறிவே, ஞானநெறியே அதற்கு உதவும் என அவர் தெளிந்தார். இக்கருத்து,

"நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன்னூற் போதம் பராபரமே"[10]

என்ற கண்ணியால் விளங்குகிறது. வானத்திற்கு ஏறும்பொருட்டு ஒருவர் நூலேணி அமைக்க முற்படுகிறார். அந்நூலேணிக்குப் பருத்திச்செடி உண்டாக்கப் பருத்தி விதை விதைப்பதைப் போல உலகியல் நூல்களைக் கற்பதனால் இறைவன் திருவடியை

Koviloor Digital Library

அடையலாம் என்று முயல்வது இயலாது என அவர் கூறுவதை இக்கண்ணியில் அறியமுடிகிறது.

மேலும்,

"வாசக ஞானத்தால் வருமோ சுகம்"[11]

என்றும் தாயுமானவர் கேட்கின்றார். கேட்டதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல நூலும் நூலறி புலவரும் கூறுவதைக் கேட்டு அப்படியே திரும்பத் திரும்பக் கூறுவதால் பயன் ஒன்றுமில்லை. அஃது இறைவனை அடைவதற்கு உதவாது. இறையடி அடைவதற்கு நுகர்வுணர்வோடு மெய்ஞ்ஞான அனுபவ அறிவு வேண்டும் என்பதைத் தாயுமானவர்,

"கேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளின்
நாட்டமின்றி வாய்பேசல் நன்றோ பராபரமே"[12]

எனப் பாடியுள்ளார். இதனால் இறைவனை நூலறிவால் அறிய முடியாது; ஞான அறிவால் மட்டுமே அறியமுடியும் என்பதே அவர் கற்ற கல்வியால் தெளிந்த பயன் என்பது விளங்குகிறது.

தலைமைக் கணக்கர் பணிபுரிதல்

விசயரங்க சொக்கநாத நாயக்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணிபுரிந்து வந்த கேடிலியப்பப் பிள்ளை காலமாகி விட்டார். அதனால் நாயக்க மன்னர் தாயுமானவரின் திறமையினை அறிந்து அவரை அழைத்து அப்பணியில் அமர்த்தினார். தாயுமானவர் அப்பணியில் மிகவும் திறமையுடன் செயல்பட்டு வந்தார். என்றாலும், தாமரை இலையில் தண்ணீர் போலப் பதவியில் பற்று இல்லாமல் இருந்தார்; உயிருக்கு உறுதியைத் தரும்படியான உயர்வழியில் செல்லும் நாளையே எதிர்நோக்கி இருந்தார்.[12]

மௌன குருவைச் சந்தித்தல்

தாயுமானவர் பெருங்கணக்கர் பதவியில் இருந்து கொண்டே தம்மைச் சந்திக்கும் எல்லாரிடமும் தத்துவ

Koviloor Digital Library

விசாரணையைச் செய்து வந்தார். அவரது ஆன்ம ஈடேற்றத்துக் குரியவாறு ஞானாசிரியர் ஒருவரின் தரிசனம் அவருக்குக் கிடைத்தது.

திருச்சிராப்பள்ளிக் குன்றின் படிவழியின் பக்கத்தில் திருசாரமா முனிவர் மடாலயம் ஒன்றிருக்கிறது. அச்சாரமா முனிவர் திருமூலரின் மரபில் வந்தவர். அவரால் அம்மடம் நிறுவப் பெற்றது. அம்மடத்தின் பதினேழாவது மடாதிபதியாக விளங்கியவர் மௌனகுரு அடிகள். தாயுமானவர் திருச்சிராப் பள்ளி இறைவனை வழிபட்டுவிட்டுத் திரும்பி வரும்போது தற்செயலாக மௌன குருவைக் கண்டார்; அக்கணமே அவருடைய சீடராகித் தீட்சை அருளுமாறு வேண்டினார். மௌன குருவோ எதுவும் கூறாமல் மௌனமாகவே இருந்தார். தாயுமானவர் அவர் போகுமிடமெல்லாம் கூடவே சென்றார். இறுதியில் மௌனகுரு அருணந்தி சிவாச்சாரியாருடைய சிவஞான சித்தியாரே இறைவனை அடையும் வழியைக் கூறும் சிறந்த சுத்தாத்துவைத சைவ சித்தாந்தம் எனவும் அதன் பொருளைத் தெளிந்து கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.[13]

என்றாலும் தாயுமானவர் மௌன குருவை விடாமல் தொடர்ந்து சென்று தீட்சை அருளுமாறு வேண்டினார். மௌனகுரு, ''இறைவனைப் பற்றிய உபதேசம் பெறுவதற்குப் பக்குவம் வேண்டும். நீர் இளைஞர். உலகம் என்ற மலையில் கடக்க வேண்டிய படிகள் நினக்கு இன்னும் பல உள்ளன. அவற்றைக் கடந்தால்தான் இறைவன் என்ற ஒளியைக் காணமுடியும்; அவ்வொளியில் கலக்க முடியும். நினக்குத் திருமணம் நடக்கும். சில காலம் இல்லறத்தில் இருந்து விட்டுப் பின்னர் துறவினை மேற்கொள்க. அப்போது நினக்குத் தீட்சை அளிப்பேன்'' எனத் தாயுமானவரிடம் கூறினார். அதைக் கேட்டுத் தாயுமானவர் பெருமகிழ்ச்சி அடைந்தார். தாம் நினைத்தபடியே தமக்கு ஞானகுரு வாய்த்துவிட்டார் எனப் பெருமிதம் கொண்டார்.[14]

திருமூலர் மரபில் வந்தவர் மௌனகுரு என்பதனைத் தாயுமானவர் தமது மௌனகுரு வணக்கத்தில்,

Koviloor Digital Library

“மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில் வரு மௌன குருவே”

எனப் பத்துப் பாடல்களிலும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இப்பாடல்கள் அவர் குருவிடம் கொண்ட பக்தியை வெளிப்படுத்துவனவாகவும் அவர் குரு உபதேசம் கேட்டு உய்ந்த பான்மையை விளக்குவனவாகவும் விளங்குகின்றன.

அன்றியும் தாயுமானவர் சிவஞான சித்தியார் பற்றி மௌனகுரு தமக்கு உபதேசித்ததை,

“வென்றடியார் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென் னவே
வந்த குருவே வீறு சிவஞான சித்தநெறி
மௌனோப தேச குருவே”[15]

என்றும் குறிப்பிட்டுப் பாடியுள்ளதை அறியமுடிகிறது.

விராலிமலையில் சித்தர்களைச் சந்தித்தல்

மௌனகுருவைச் சந்தித்த பிறகு தாயுமானவரின் மனம் சிவபெருமானைச் சிந்திப்பதிலே ஈடுபட்டிருந்தது. சித்தாந்த நூல்களைக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நிலைகளிலேயே அவர் இருந்து வந்தார். இவ்வேளையில் நாயக்க மன்னர் காலமானார். மன்னருக்கு மக்கட்பேறு இல்லை. அவருக்குச் செய்ய வேண்டிய கடன்களையெல்லாம் அரசி மீனாட்சியே செய்து முடித்தாள். அவளே ஆட்சிப் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டாள்.

அரசிக்கும் தாயுமானவருக்கும் கருத்து வேறுபாடுகள் உண்டாயின. அதனால் தொடர்ந்து அங்குப் பணியாற்ற தாயுமானவர் விரும்பவில்லை. எனவே, திருச்சிராப்பள்ளியை விட்டு வெளியேறித் தமது சிறிய தாயாரின் மகனான அருளைய பிள்ளை என்பவருடன் நல்லூரில் தங்கியிருந்தார். பின்னர் இருவரும் விராலிமலைக்குச் சென்று தங்கினர். தாயுமான வருக்குச் சித்தர்களின் தொடர்பு அங்குதான் கிட்டியது. சித்தர் ஒருவர் தாயுமானவரின் உயர்ந்த மனநிலையை அறிந்து சித்தர்கள்

Koviloor Digital Library

பலர் இருக்குமிடத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். தாயுமானவர் அவர்களோடு அளவளாவி சிலநாட்கள் தங்கியிருந்தார். அதன் விளைவாக அவரால் பாடப்பட்டதே சித்தர்கணம் என்ற பாடற்பகுதியாகிறது.

கபிலையில் அற்புதம் நிகழ்த்துதல்

தாயுமானவர் விராலிமலையிலிருந்து புறப்பட்டுப் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள கபிலைப் பதியில் தங்கினார். அப்பகுதியில் எழுந்தருளியுள்ள பெரியநாகியம்மைமீது பெரியநாயகி விருத்தம் பாடினார்.

கபிலைப் பதியில் மழை இல்லாமல் மக்களை வறட்சி பெரிதும் வாட்டியது. அதுகண்ட தாயுமானவர்,

> ***"சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்***
> ***தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில் - ஐவரைவென்று***
> ***ஆனந்த இன்பில் அழுந்துவது முத்திஎனில்***
> ***வானங்காண் பெய்ம்மின் மழை"***[16]

என்ற வெண்பாவைப் பாடினார். பின்னர் மழை பொழிந்து அப்பகுதி செழித்ததாகக் கூறப்படுகிறது.

இராமேசுவரம் அடைதல்

கபிலையிருந்து புறப்பட்ட தாயுமானவர் இராமேசுவரம் சென்று இராமநாதரை வழிபட்டார். அத்தலத்து இறைவி பருவதவர்த்தினியம்மைமீது மலைவளர் காதலி என்ற திருப்பதிகம் பாடிப்போற்றினார்; அத்தலத்தில் தங்கியிருந்தார்.

தாயுமானவர் திருச்சிராப்பள்ளியில் வகித்து வந்த பெருங்கணக்கர் பதவியைத் துறந்து இராமேசுவரம் சென்றதற்குக் காரணம் நாயக்க மன்னரை இழந்த அரசி மீனாட்சி இவர்மீது காதல் கொண்டதே ஆகும் என்ற கருத்து நிலவுகின்றது.[17] இதற்கு இவர்தம் பாடல்களில் அகச்சான்றுகள் ஏதுமில்லை. எனவே தாயுமானவர் திருச்சிராப்பள்ளியைவிட்டுச் சில தலங்களைத் தரிசித்துக் கொண்டு இராமேசுவரம் வந்து சேர்ந்தது, ஞானமார்க்க

Koviloor Digital Library

வேட்கையாலும் தத்துவ ஆராய்ச்சியாலுமே ஆகிறது. ஏனெனில் அரசியின் காதலுக்கு அஞ்சி இவர் திருச்சிராப்பள்ளியை விட்டு வந்திருப்பின் நேராகத் தாயாரும் தமையனாரும் வாழும் திருமறைக்காட்டினை அடைந்திருப்பர். ஆனால் தாயுமானவர் அவ்வாறு சென்றடையவில்லை. அக்காலத்தில் தத்துவ விசாரணையில் ஈடுபாடு கொண்டோர் வந்து கூடும் தலமாக இராமேசுவரம் விளங்கியது. அதன் பொருட்டே தாயுமானவர் இராமேசுவரத்தை வந்தடைந்தார் என்பதே பொருத்த முடைத்தாகிறது.

தாயுமானவர் இராமேசுவரம் வந்ததற்கு இன்னொரு காரணமும் கூறப்படுகிறது. திருச்சி நாயக்கர் ஆட்சி நிகழ்ந்த காலத்தில் அவர்தம் ஆட்சிக்கு உட்படாது இராமநாதபுரம் உரிமை பெற்றிருந்தது. எனவே தான் அரசியின் ஆட்சியிலிருந்து தப்ப வேண்டித் தாயுமானவர் இராமநாதபுரத்தை அடைந்தார் என்பதே அக்காரணமாகிறது. அப்படியிருப்பின் ஒருசில திங்களிலேயே தாயாரின் அழைப்பினை ஏற்று இராமநாதபுரத் தினை விட்டுத் திருமறைக் காட்டுக்கு மீண்டும் வந்திருக்க வழியில்லை. ஆண்டுகள் பலவற்றிற்குப் பிறகு தமது மனைவியை இழந்தபின் மீண்டும் அங்கேயே சென்றிருக்க வேண்டும். எனவே, தத்துவ ஆராய்ச்சி வேட்கையே தாயுமான வரை இராமேசுவரத்திற்குச் செல்லுமாறு தூண்டியிருக்க வேண்டும்[18] என்பது ஏற்புடைத்தாகிறது.

திருமணமும் இல்வாழ்க்கையும்

திருச்சிராப்பள்ளியில் நடந்த செயல்களையெல்லாம் அவரது தாயாரும் தமையனாரும் அறிந்தனர். தமையனார் சிவசிதம்பரம் இராமேசுவரம் சென்று தாயுமானவரைக் கண்டார். ''நம்குலம் தழைக்கத் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையில் ஈடுபட வேண்டும். அதுவே தமது விருப்பமும் தாயாரின் விருப்பமுமாகும்'' எனக் கூறினார். தாயுமானவரும் அதற்கு இசைந்து திருமறைக்காட்டிற்கு வந்து சேர்ந்தார். அவ்வூரிலேயே பிறந்து வளர்ந்த மட்டுவார் குழலி

Koviloor Digital Library

என்ற மங்கை நல்லாளைத் தேர்ந்து தாயுமானவருக்குத் திருமணம் முடித்து வைத்தனர்.

மட்டுவார் குழலி நற்பண்புகள் நிறைந்த நங்கையாவர்; அன்பும் அடக்கமும் மிக்கவர்; பண்பின் உருவமாகத் திகழ்ந்தவர். தாயுமானவரின் அன்புக்கேற்ற மனைவியாகக் குடும்பம் நடத்தி வந்தார். தாயுமானவரும் நல்ல கணவராகவும் சிறந்த குடும்பத் தலைவராகவும் விளங்கினார். நிறைந்த கடவுள் பக்தியும் சிறந்த அன்புள்ளமும் கொண்ட அவர்களுக்கு ஆண்மகவு ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்குக் கனகசபாபதி என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

ஆண்டுகள் சில சென்றதும் மட்டுவார் குழலியம்மையார் இயற்கை எய்தினார். தாயுமானவருக்கு ஏற்பட்டிருந்த இல்லறத் தொடர்பு அவர்தம் துணைவியார் மறைவினால் படிப்படியாக மாறத் தொடங்கியது. குழந்தை கனகசபாபதியைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தார். தக்க பருவம் வந்ததும் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பிக் கல்வி கற்கச் செய்தார்.

இதற்கிடையில் தாயுமானவருடைய அன்னையாரும் காலமானார். தாயுமானவர் இல்லறத்தில் ஈடுபட்ட காலம் சிறிதேயானாலும் இன்பம், துன்பம் என இரண்டினையும் மாறி மாறிக் கண்டவரானார். அதனால் அவர் உள்ளம் மேலும் பக்குவம் அடைந்தது. அனுபவ முத்திரைகள் அவரது வாழ்வினைச் செம்மைப்படுத்தி விட்டன. அந்நிலையில் தத்துவ ஆராய்ச்சி வேட்கை தலைதூக்கியது. பக்தியார்வம் வெள்ளம் போல் பெருக்கெடுத்தது. உள்ளம் பரம்பொருளையே தேடிப் போயிற்று. அதனால் அவர் தமது பிள்ளை கனகசபாபதியைத் தம் தமையனார் சிவசிதம்பரம் பிள்ளையிடம் ஒப்படைத்தார். சிவசிதம்பரமும் அப்பொறுப்பினை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

தாயுமானவரின் தூய துறவும் இறையனுபவமும்

தாயுமானவர் இல்லறத்திலிருந்து முழுமையாக விடுபட்ட வுடன் அவரது உள்ளத்தில் தூய துறவறம் குடிகொண்டது.

Koviloor Digital Library

அதனால் அவர் கடுந்துறவு பூண்டு கோவண ஆடையோடு புறம் போந்தார். அருளைய பிள்ளையும் அவரைப் பின்தொடர்ந்தார்.

தானாக வந்த பாசவலை தானாகவே விலகியது. தளை அறுந்தது; வழி திறந்தது; இறையருள் சுரந்தது. அலைகடல் போன்ற பெருஞ்செல்வம் அல்லல் விளைக்குமாதலின் அதனை நல்காது, ஒருவர் பின் சென்று வருந்தாமலும் கேட்பார்க்கில்லை என்னாமலும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதற்கு வேண்டும் செல்வம் உதவி நோயற்ற சுகவாழ்க்கை அளித்து, யோக ஞானநெறி நிற்கும் நிலையும் உள்நின்று உணர்த்தியதோடு மோனகுருவாக நிலமிசைத் தோன்றி அருள்புரிந்த நின்சிறந்த கருணையை அடியேன் என்னென்று கூறுவேன்! இவன் சிறியன்; அறிவிலி. ஆயினும் தமது அடிமை என்ற கருத்து நினது திருவுள் ளத்தில் இருந்தது போலும்! எனத் தாயுமானவர் இறைவன் தனக்குப் புரிந்த இறையருளை வியந்து போற்றியுள்ளார்.

திருவருள் தமக்குப் பல நலங்கள் அளித்தது போலவே இடைவிடா மோன நிட்டையும் நல்க வேண்டும் என்பார், ''வருவன வருக; வராதன போக'' என்று பற்று விடுத்து மனச்சான்றிற்கு மாறின்றி ஒழுகும் நிலை அருளியதும் வேதாந்த சித்தாந்த உண்மைக் கருத்தொருமையை முற்றிலுமுணர அறிவு உதவியதும் உடல் நிலையாமை உணர்ந்து ஞானநெறி நிற்றலை அளித்ததும் என்றும் நிலைத்த பேரின்ப நுகர்ச்சியே வீடென்று தெளிந்து புனல்போல உள்ளம் உருக அன்பு நல்கியதும் நின்னுடைய அருளே என்றும் தாயுமானவர் இறைவனைப் போற்றிப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.[19]

தாயுமானவர் தம்மை இறைவனுக்கே ஒப்படைத்து விட்டாராதலின்,

> ***''தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்கு***
> ***என்னைக் கொண் டென்னபலன் ஏந்தாய்''[20]***

என்றும்,

Koviloor Digital Library

"சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்ன உன்னைத்
தந்தஉனக் கென்னையுநான் தந்தேன"[21]

என்றும்,

"தன்ன தென்றுரை சாற்று வனவெலாம்
நின்ன தென்றெனை நின்னிடத்தே தந்தேன்"[22]

என்றும் பாடியுள்ளார். மாணிக்கவாசகர்,

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்"[23]

என இறையருளை வியந்து பாடியிருப்பது மேற்சுட்டிய தாயுமானவ பாடலடிகளோடு ஒப்புநோக்கத் தக்கதாகிறது.

மெய்யுணர்ந்தும் இடையிடையே தோன்றும் வாசனா மலத்தை அறவே ஒழிக்க விரும்பிய தாயுமானவர்.

"வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்தன் நான்அருள் பெற்றுந் திடமிலேன்"[24]

என இறைவனிடம் வேண்டிப் பாடியுள்ளார்.

தாயுமானவர் முடிந்த மோனநிலையை எய்துமுன் தன் நிலையினை,

"ஒன்றைப் பெற்றவனு மல்லேன் பெறாதவனு மல்லேன்
பெருக்கத் தவித்து ளறியே
பெண்ணீர்மை யென்னஇரு கண்ணீர் இறைத்துநான்
பேய்போ லிருக்க உலகஞ்
சுற்றிநகை செய்யவே உலைவிட் டாயெனிற்
சொல்லவினி வாயுமுண்டோ"[25]

எனப் பாடியுள்ளார். இறைவன் மெய்யன்பையும் இன்ப நிட்டையையும் தராவிடின் உயிர்துறப்பேன் என்கின்றார்.[26] மோன நிட்டையில் பழகியபின் தாயுமானவர் தன் நிலையினை,

Koviloor Digital Library

"நடக்கினு மோடினு நிற்கினும்
வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினும் செவ்வி திருக்கினும்
நல்லருட் கேள்வியிலே
தொடக்கும் என்னெஞ்சம் மனமற்ற
பூரணத் தொட்டிக்குள்ளே
முடக்குவன் யான்பர மானந்த
நித்திரை மூடிடுமே"[27]

எனப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

இறைவனது பூரணம் தன்னை விழுங்கியவிடத்து ஒன்றும் கூடவொண்ணாத தனது நிலையினைத் தாயுமானவர்,

"வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்
பாரிற் கண்டவை யாவும் பருகினை
ஓரிற் கண்டிடும் ஊமன் கனவென
யாருக் குஞ்சொல வாயிலை ஐயனே"[28]

என விளக்கியுள்ளதை அறியமுடிகிறது.

மௌனகுருவிடம் தீட்சை பெறுதல்

தாயுமானவர் மௌன குருவைச் சந்தித்துத் தீட்சை பெற விரும்பினார். அவ்வேளையில் மௌனகுரு திருமறைக் காட்டிற்கு வந்திருந்தார். அச்செய்தி அறிந்த தாயுமானவர் பெரிதும் மகிழ்ச்சியடைந்து காந்தத்தை நோக்கிச் செல்லும் இரும்பைப் போல விரைந்து சென்று மௌன குருவைக் கண்டு வணங்கினார். மௌனகுரு தாயுமானவரை உற்று நோக்கினார். அவரது அதி தீவிர பக்குவநிலை கண்டு மௌனகுரு 'சும்மா இரு' என்று திருவாய் மலர்ந்தருளித் திருவடி தீட்சை அருளினார்.

இறைவனை அடைவதற்கு ஆடிப்பாடிப் பூசனை செய்வதால் பயனில்லை. அவனை நினைந்து மோன நிலையில் இருப்பதே பயன்தரும். அந்நிலையே 'சும்மா இருத்தல்' ஆகிறது.

Koviloor Digital Library

கட்டுத்தறியை முறிக்கும் மதமிக்க யானையையும் நம் வயப்படுமாறு செய்து நடத்தலாம். கரடி வாயையும் கொடிய புலி வாயையும் திறக்கவொட்டாது கட்டக் கூடும். சிங்கமொன் றின் முதுகில் அமர்ந்து செல்லலாம். நஞ்சினையுடைய பாம்பு களைப் புற்றினின்று எடுத்து ஆட்டவும் செய்யலாம். கொடிய நெருப்பில் பாதரசத்தை விட்டு ஐந்து வகைப்பட்ட உலோகங்களையும் உயர்ந்த பொன்னாய் மாற்றி விற்று உண்ணவும் செய்யலாம். வேறொருவர் காணாத வகையில் உலகத்தில் உலாவலாம். தேவர்கள் நம் ஏவலைச் செய்யுமாறு செய்யலாம். எப்போதும் இளமையுடனே இருக்கலாம். வேறொரு உடலிலும் புகலாம். நீரின்மீது நடக்கலாம். தீயின்மீது தங்கியிருக்கலாம். தமக்கு ஒப்பில்லாத சித்திகளையெல்லாம் பெறலாம். ஆனால் உள்ளத்தை அடக்கி நல்வழிப்படுத்திச் சும்மா இருக்கின்ற திறத்தினைப் புரிவது அரிது எனத் தாயுமான வர் சும்மா இருத்தலின் அருமைப்பாட்டினையும் ஆற்றலையும் விளக்கிப் பாடியுள்ளார்.[29] கூடுதல், பிரிதல் அற்று, முக்குணம் அற்று, நினைத்தலும் உணர்தலுமின்றி, ஐம்பூதங்கள் முதலிய வற்றைக் கடந்து காட்சி உணர்வற்று, வாட்டம் ஏதுமின்றி மனமொடுங்கி முழுமுதல் பேரின்பக் கடலில் திளைத்துச் சிவ மயமாய் இருக்கும் நிலையே அந்நிலையாகிறது. தாயுமானவர்,

> **"மற்றெனக் கையநீ சொன்னவொரு வார்த்தையினை**
> **மலைஇலக் கெனநம்பினேன்"[30]**

என்றும்,

> **"மௌனியாய்ச் சொன்னவொரு சொற்கொண்டதே"[31]**

என்றும்,

> **"பரமவெளி யாகவொருசொல்**
> **திட்டமுடன் மௌனியாய் அருள்செய் திருக்கவும்"[32]**

என்றும் பல பாடல்களில் மௌனகுருவின் உபதேசம் குறித்துப் பாடியுள்ளார்.

இச் 'சும்மா இருத்தல்': மௌனம் கடைப்பிடித்தல் என்னும் உபதேசம் சுருதி கண்ட உண்மை என்பதைத் தாயுமானவர்,

Koviloor Digital Library

***"சும்மா இருக்கச் சுகங்சுகமென்று கருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதமையால்
வெம்மாயக் காட்டிலலைந்தே னந்தோவென் விதிவசமே"[33]***

எனப் பாடியுள்ளார். மேலும் கல்லாலின் கீழ் சிவபெருமான் உபதேசித்த நிலையிலும்,

***"ஆரா வமுதென மோனம்
வகித்துக் கல்லா னிழற்கீழ்ப்
பேராது நால்வருடன் வாழ்
முக்கணுடைப் பேரரசே"[34]***

என நினைத்துப் பாடியுள்ளார். இதனால்தான் தாயுமானவர், சிவபெருமானை, 'மோன சிவன்' என்றும் 'வைதிகமாம் சைவ மவுனி'[36] என்றும் குறித்துப் பாடியுள்ளார்.

***"தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த்
தாயனைய கருணை காட்டித்
தாளிணையென் முடிசூட்டி"[37]***

என்றும்,

***"அறிவினின்று குருவா யுணர்த்தியதுவு
மன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீரருளை
யைய வையவினி யென்சொல்கேன்"[38]***

என்றும் தாயுமானவர் இறைவனைக் குருவாகக் கொண்டதையும் பாடியுள்ளார். ஆயின், உலக நிலைக்கேற்ப இறைவன் குருவுருவில் வந்தார் என்ற எண்ணமும் அவர்தம் பாடல்களில் தென்படுகிறது. குருவழியாக இறைவன் அருள்புரிந்தார் என்பது பொருத்த முடைத்தாகிறது.

***"பிரியாத தன்னருட் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசி யாலே
பேரின்ப உண்மையை அளித்தனை"[39]***

என்றும்,

Koviloor Digital Library

"குருவுரு வாகி மௌனியாய் மௌனக்
கொள்கையை யுணர்த்தினை"[40]

என்றும் தாயுமானவர் குருவையே தெய்வமாகக் குறிப்பிட்டும் பாடியுள்ளார்.

"வடிவனைத்துந் தந்த வடிவில்லாச் சுத்த
வான்பொருளே யெளியனேன் மனமா மாயைக்
குடிகெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோனி
குருவேயென் றெய்வமே"[41]

எனத் தாயுமானவர் இறைவனையே மௌனத்தின் உருவாகக் கொள்ளும் நிலையினாலும் மௌனத்தையே உபதேசித்த குருவின் ஒருமுகக் கோட்பாட்டாலும் இத்தகு கருத்தினை அமைந்ததாகக் கொள்ளமுடிகிறது. தாயுமானவர்,

"படிமிசை மௌனியாகி நீ ஆளப் ... ...
நீயென நானென வேறில்லை யென்னு நினைவருளத்
தாயென மோன குருவாகி வந்துதடுத் தடிமைச்
சேயென காத்தனையே பரமே"[42]

என்றும்,

"வாயென்றும் பேசா மவுனியாய் வந்தாண்ட
தேயொன்றும் போதாதோ"[43]

என்றும் இறைவன் தம்மைத் தடுத்தாண்டத்தைப் பாடியுள்ளார்.

இறைவன் தம்மைத் தடுத்தாண்ட பின்னர் தாயுமானவர் தமது நிலையை,

"அன்பருக் கன்பான மெய்யன் - ஐயன்
ஆனந்த மோன வருட்குரு நாதன்
தன்பாதஞ் சென்னியில் வைத்தான் - என்னைத்
தானறிந்தேன் மனந்தானிறந் தேனே"[44]

எனப் பாடியுள்ளார். தன்னையறிதலே தலைவனை அடைதலின் முன்படி என்ற தத்துவமும் இங்கே விளக்கம் பெறுகிறது.[45]

Koviloor Digital Library

சமாதிநிலை அடைதல்

இவ்விதம் இறையருள் பெற்று விளங்கிய தாயுமானவர் திருச்சிராப்பள்ளி மௌன குருமடத்தினை அடைந்து அம்மடத் திற்குச் சிலகாலம் தலைவராய் இருந்து வந்தார். பின்னர் திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை முதலிய தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்தார்; இறைவன்மீது பலவகையான தோத்திரப் பாடல்களைப் பாடினார். இறுதியில் இராமநாதபுரம் வந்தடைந்தார். அந்நகரின் கீழ்ப்பாலுள்ள காட்டூரணி என்ற தனியிடத்தில், புளியமரம் ஒன்றின் நிழலில் நிட்டை இருந்து வந்தார். அவருடன் அருளைய பிள்ளை, கோடிக்கரை ஞானி மற்றும் பலரும் சீடர்களாக இருந்து வந்தனர்.

புளிய மரநிழலில் நிட்டை கூடியிருந்த தாயுமானவரைத் தரிசிக்க நாள்தோறும் அன்பர்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். அவர்களுள் மூதாட்டி ஒருவர் தாயுமானவர் புளியமரத்தடியில் நிட்டை இருப்பது கண்டு மனம்பொறாது நறுமலர்த் தோட்டம் ஒன்றும் அங்கேயே நன்னீர்க் குளம் ஒன்றும் அமைத்துக் கொடுத்தார். அம்மூதாட்டியின் விருப்பத்திற் கிணங்கத் தாயுமானவர் அப்பூந்தோட்டத்தில் சென்று தங்கலானார்; கடவுளை நினைத்து இரவு பகல் தெரியாமல் நாளும் மாதமும் அறியாமல் மனம் ஒன்றிய நிலையில் ஆழ்ந்த நிட்டையில் இருந்து வந்தார். தாயுமானவரின் தவ நிலையைக் கண்ட பக்தர்கள் வியப்படைந்தனர். அவரது பேராற்றலைப் புகழ்ந்து போற்றி வணங்கி வந்தனர். எல்லாருடைய உள்ளங் களிலும் தமது தவ உருவினையும் ஆற்றலையும் ஏற்படுத்திய தாயுமானவர் அப்பூந்தோட்டத்திலேயே 1742இல் சமாதி நிலை அடைந்தார். அவ்விடத்தில் திருக்கோயில் ஒன்று விளங்குகிறது.

தாயுமானவர் வாழ்ந்த காலம்

தாயுமானவர் அண்மைக் காலத்தில் வாழ்ந்தவராக விளங்கினாலும் அவருடைய காலம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. தாயுமானவர் சமாதி நிலை அடைந்தபோது அவருடன் இருந்த அவரது சீடர்களின்

Koviloor Digital Library

முக்கியமானவர்களாக விளங்கும் அருளையர், கோடிக்கரை ஞானியர் ஆகியோர் அவர்மீது சில பாடல்களைப் பாடியுள்ளனர். அப்பாடல்களில் ஒன்றினை[46] அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தாயுமானவர் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு என்பர். டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்களும் இவ்வாறே கூறுவர்.[47]

கலைக்களஞ்சியத்தில் தாயுமானவர்காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு என்று குறிக்கப்பட்டுள்ளது.[48] தாயுமானவர் பாடல்களின் திருச்சி, திருப்பராய்த்துறை தபோவனப் பதிப்பும் கி.பி. 18ஆம் நூற்றாண்டு என்று கூறுகின்றது. சுத்தானந்த பாரதியாரும் 18ஆம் நூற்றாண்டே என்கின்றார்.[50]

இதனால், அண்மையில் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய டாக்டர் கமீல் சுவலபில் அவர்கள், ''தாயுமானவர் காலம் கி.பி. 1704 – 1742 அல்லது கி.பி. 1608 - 1664 என்பது இன்னும் குழப்பமாகவே உள்ளது'' எனக் கூறியுள்ளார்.[51] என்றாலும் டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள், ''அரசர் விசயரங்க சொக்கநாதர் அரசி மீனாட்சி என்போர் காலமே இவர் காலம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். வரலாற்றாசிரியர்கள் விசயரங்க சொக்கநாதர் காலம் கி.பி. 1704 - 1731 எனக் கூறுகின்றனர். அம்மன்னர் காலமாகிய 18ஆம் நூற்றாண்டே தாயுமானவரின் காலமுமாகிறது[52] எனக் கூறுவது ஏற்புடைத்தாகிறது.

தாயுமானவரின் படைப்புகள்

தாயுமானவரின் படைப்புகள் அவரது பெயரால் தாயுமானவர் பாடல்கள் என வழங்குகின்றன. பல பதிப்புகளையும் ஒப்பிட்டுக் காணும்போது அவரது பாடல்கள் மொத்தம் 1452 ஆகின்றன. இப்பாடல்களில் 23 பகுதிகள் முடிப்பாலும் 28 பகுதிகள் எடுப்பாலும் 2 பகுதிகள் பொருளாலும் 3 பகுதிகள் யாப்பாலும் பெயர் பெற்று ஆக 56 பகுதிகள் விளங்குகின்றன. முடிப்பு, எடுப்பு முதலிய

Koviloor Digital Library

தலைப்புகள் பல பாடல்களின் பொருளையோ, மையக் கருத்தையோ பெரும்பாலும் குறிக்காது. பாடல் தொகுதிக்கு ஒரு பெயரால் அமைந்து செல்கிறது. சித்தர்கணம், மலைவளர் காதலி, அகிலாண்ட நாயகி, பெரிய நாயகி (விருத்தம்) ஆகியன இறுதித் தொடர்களே ஆயினும் அவை பாடல் பொருள் முழுவதும் தழுவி அமைந்துள்ளன. எந்நாட்கண்ணி 15 உட்பகுதி களைக் கொண்டமைந்துள்ளது. ஒவ்வொரு உட்பகுதித் தலைப்பும் பாடல் கூறும்பொருளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.[53]

தாயுமானவரின் பாடல்கள் பக்திச் சுவை ஊட்டுபவை; பரம்பொருளின் தன்மைகளை நன்கு உணர்த்துபவை; படிப்போர் உள்ளத்தில் தெளிவினையும் வாழ்வில் ஒளியையும் ஊட்டவல்லவை. தமிழ்ப் பக்தி இலக்கியத்தில் தாயுமானவரின் பாடல்கள் குறிப்பிடத்தக்க இடம்பெற்றுள்ளன.

''தாயுமானவர் பாடல்கள் முற்றும் அழகும் அருளும் அறிவுப் பொருளும் பொலியும் மந்திரமணிகள், காட்சியன்றிக் கற்றறிவைக் கொண்டு சொற்களைக் கசக்கிப் பிழிந்து இயலழகைக் கெடுக்கும் பண்டித விரிவுரைகள் வேண்டாத கற்பக வாழ்வின் அற்புத மலர்கள்''[54] எனப் பாராட்டப் படுகின்றன. இவரது பாடல்கள் சிறுநெறியில் செல்லும் மனத்தை உந்தி இழுத்து அருள் நெறியில் செலுத்தும் அறிவொளிக் காந்தமாகிறது. அவை நெஞ்சைத் துடிப்பித்துத் தட்டியெழுப்பும் வீறுடையனவாகின்றன.[55]

தாயுமானவர் பாடல்கள் பற்றி அவரே,

''பன்மாலைத் திரளிருக்க தமையு ணர்ந்தோர்
பாமாலைக்கே நீதான் பட்சமென்று
நன்மாலை யாலெடுத்துச் சொன்னார் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானும் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்''[56]

எனப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

சைவ சித்தாந்தம், அத்துவைதம் இரண்டிற்கும் சமரசம் கண்ட பெருமை இவருக்கு உண்டு. சைவசித்தாந்தம் கற்பார் முதலில் தாயுமானவர் பாடல்களையே படிக்கத் தொடங்குவர். இவருடைய பராபரக்கண்ணி அரிய தத்துவங்களை எளிய நடையில் சொல்லுபவையாக விளங்குகின்றன.[57]

''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பது திருநாவுக்கரசரின் திருத்தொண்டின் வெளிப்பாடாகிறது. அக்குலத்தில் தோன்றிய தாயுமானவர்,

> **''அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்**
> **இன்பநிலை தானேவந் தெய்தும்''[58]**

எனப் பொதுநலப் பணியையே இறைஇன்பமாகக் கருதியதை அறியமுடிகிறது. சிவானுபவம் என்கின்ற பேரின்ப வெள்ளம் பொங்கி வழிந்து நிறைந்திருக்கின்றது.

> **''தேகம் விழுமுன் புசிப்பதற்குச்**
> **சேரவாரும் செகத்தீரே''[59]**

எனத் தாயுமானவர் உலகினரை ஒருசேர அழைப்பதை அவருடைய பாடல்களில் காணமுடிகிறது.

சோழவள நாட்டில் திருமறைக் காட்டில் வேளாளர் குலத்தில் கேடிலியப்பப் பிள்ளைக்கும் கஜவல்லியம்மையாருக்கும் தாயுமானவர் மகவாய்த் தோன்றுதல்; திருச்சிராப் பள்ளி மலைக்கோயிலில் எழுந்தருளியுள்ள தாயுமானவர் திருவருளால் அவர் தோன்றியதால் அவ்விறைவன் நாமத்தையே அவருக்குப் பெயராகச் சூட்டியிருத்தல்; இளமையிலேயே தமிழ், வடமொழிகளில் பெரும்புலமை பெற்று விளங்குதல்; என்றாலும் நூலறிவால் இறைவனைக் காணமுடியாது; அவ்வறிவுக்கும் மேலான மெய்யறிவே, ஞானநெறியே இறைவனைக் காண உதவும் எனத் தெளிதல்; தந்தையார் இயற்கை எய்தவே அவர் வகித்து வந்த பெருங்கணக்கர் பதவியில் தாம் அமர்ந்து திறமையாகச் செயல்படுதல்; என்றாலும் ஆன்ம ஈடேற்றத்தையே அவருடைய உள்ளம் விரும்புதல்; அதன் விளைவாக மௌன

Koviloor Digital Library

குருவைச் சந்தித்து அக்கணமே அவருடைய சீடராகித் தீட்சை யருளுமாறு வேண்டுதல்; அருணந்தி சிவாச்சாரியாருடைய சிவஞான சித்தியாரே இறைவனை அடையும் வழியைக் கூறும் சிறந்த சுத்தாத்து வைத சைவ சித்தாந்தம் என மௌன குரு கூறுதல்; தாயுமானவர் அதில் மனநிறைவு கொள்ளாமல் தமக்குத் தீட்சையருளுமாறு வேண்டுதல்; அவர் சில காலம் இல்லறத்தில் இருந்துவிட்டுப் பின்னர் வருமாறு கூறுதல்; சித்தாந்த நூல்களைக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் எனத் தாயுமானவர் இருந்து வருதல்; பின்னர் இராமேசுவரம் புறப்பட்டுச் செல்லுதல்; செல்லும் வழியில் விராலிமலையில் சித்தர்கள் பலர் கூடியிருக்கும் இடத்திற்குச் சென்று சில நாட்கள் தங்கியிருந்து அவர்களோடு அளவளாவுதல்; இராமேசுவரம் சென்று வழிபட்டுவிட்டு மீண்டும் திருமறைக் காட்டிற்கு வருதல்; உறவினர் விருப்பதிற்கிணங்கத் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபடுதல்; இல்லறத்தினைத் துறந்து துறவறத்தை மேற்கொள்ளுதல்; மௌன குருவைச் சந்தித்து தீட்சை அளிக்குமாறு வேண்டல்; அவர் 'சும்மா இரு' என்று திருவாய் மலர்ந்தருளித் திருவடி தீட்சை அளித்தல்; கூடுதல், பிரிதல் அற்ற, முக்குணம் அற்று, நினைத்தலும் உணர்தலுமின்றி ஐம்பூத முதலியன கடந்து, காட்சி உணர்வற்று, வாட்டம் ஏதுமின்றி, மனம் ஒடுங்கி முழுமுதல் பேரின்பக் கடலில் திளைத்துச் சிவமயமாய் இருக்கும் நிலையே சும்மா இருத்தல் என உணர்ந்து தாயுமானவர் அவ்வாறே இருத்தல்; மௌனகுரு மடத்திற்குச் சிலகாலம் தலைவராய் விளங்குதல்; திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை எனப் பல தலங்களையும் வழிபட்டுவிட்டு இராமநாதபுரம் செல்லுதல்; அந்நகரின் கீழ்ப்பாலுள்ள காட்டூரணி என்ற தனியிடத்தில் நிட்டை கூடியிருந்து சமாதியாதல்; தாயுமானவரின் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாதல்; மெய்யறிவு கைவரப்பெற்று அவர் பாடியுள்ள பாடல்கள் ஐம்பத்தாறு தலைப்புகளில் விளங்குதல் எனப் பல செய்திகளும் இத்தலைப்பில் விரிவாக கூறப் பட்டுள்ளன.

Koviloor Digital Library

குறிப்புகள்

1. பரமசிவானந்தம், பேராசிரியர் அ.மு., சான்றோர் வாக்கு, ப. 127.
2. கலைக்களஞ்சியம், தொகுதி - 5. ப. 581.
3. தாயுமா. ஆசையெனும். 10.
4. மேற்படி, எடுத்த தேகம். 12.
5. மேற்படி, சித்தர்கணம். 10.
6. மேற்படி, ஆகாரபுவனம். 30.
7. மேற்படி. 31.
8. மேற்படி, எங்கும். 3.
9. மேற்படி, பராபரக்கண்ணி. 206.
10. மேற்படி, 186.
11. மேற்படி, 189.
12. சிவநேசன், செங்கை, தமிழ் வளர்த்த முனிவர்கதைகள், ப. 36.
13. சேட்டு, ஏ., தாயுமானவர், பட்டினத்தார் - ஓர் ஒப்பாய்வு, எ.ப.ஆ., ப. 12.
14. புலவர் நாக சண்முகம், , தாயுமானவர் கதை, ப. 43.
15. தாயுமா. மௌனகுரு வணக்கம்: 3.
16. புலவர் மாணிக்கனார், அ., (உ.ஆ.) தாயுமானவரின் திருப்பாடல்கள் மூலமும் உரையும், முதல் தொகுதி, ப. 12.
17. (1) ரசபதி, குகஸ்ரீ., சைவ மெய்ஞ்ஞானிகள், பக். 127, 131.

    (2) சுந்தரம், வெள்ளையாம்பட்டு., தாயுமானவர் கதை, பக். 58-59.

Koviloor Digital Library

(3) புலவர் நாகசண்முகம், தாயுமானவர் கதை, பக். 52-54.

(4) சுப்பிரமணிய பிள்ளை, கா., தாயுமான சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், பக். 11-12.

18. சௌரிராசன், டாக்டர் பொன்., தாயுமானவர் வாழ்வும் வழியும், பக். 6-7.

19. தாயுமான சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், பக். 15-16.

20. தாயுமா. பராபரக்கண்ணி. 127.

21. மேற்படி, 329.

22. தாயுமா. பொன்னைமாதரை, 2.

23. திருவாசகம், கோயில் திருப்பதிகம், 10.

24. தாயுமா. பொன்னை மாதரை, 10.

25. மேற்படி, சுகவாரி. 6.

26. மேற்படி, பாயப்புலி, 20.

27. மேற்படி, 20.

28. மேற்படி, பொன்னை மாதரை, 30.

29. தாயுமா. தேசோ மயானந்தம், 8.

30. மேற்படி, மௌனகுரு வணக்கம், 10.

31. மேற்படி, கருணாகரக் கடவுள், 2.

32. மேற்படி, 4.

33. தாயுமா. பாயப்புலி: 36.

34. மேற்படி, 20.

35. தாயுமா. உடல் பொய்யறவு, 46, 50.

36. தாயுமா. எந்நாட்கண்ணி, 12.

37. மேற்படி, சின்மயானந்த குரு, 9.

38. மேற்படி, சிற்சுகோதய விலாசகம், 7.

39. மேற்படி, தேசோமயானந்தம், 16.

Koviloor Digital Library

40. மேற்படி, ஆரணம், 9.
41. மேற்படி, பன்மாலை, 3.
42. மேற்படி, பாயப்புலி, 58.
43. மேற்படி, பராபரக்கண்ணி, 131.
44. மேற்படி, ஆனந்தக்களிப்பு, 10.
45. சுப்பிரமணியன், டாக்டர் ச.வே., தாயுமானவர், சொருணாம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள், பக். 11-12.
46. "துகளறு சாலி வருடமா யிரத்தைஞ்சு
நூற்றொடென் பத்தொன்று தொடரு
மிகுசுப கிருதாம் வருடந்தை மாதம்
வெண்மதி வாரநாள் விசாக
மகிமைசேர் பூரணத் திதியினி லருத்த
மண்டல சமையத்திற் கங்கை
திகழ்கரை யதனிற் றாயுமா னவனார்
சிவத்தினிற் கலந்தநற் றினமே"

கோடிக்கரை ஞானியர் பாடியது. சுப்பிரமணியபிள்ளை, கா., தாயுமான சுவாமிகள் சரித்திரமும் நூலாராய்ச்சியும், ப. 18.
47. மாணிக்கம், டாக்டர் வ.சுப., சிந்தனைக் களங்கள், ப. 351.
48. கலைக்களஞ்சியம், தொகுதி - 5, ப. 581.
49. சித்பவானந்தர், ஸ்ரீமத் சுவாமி, தாயுமான சுவாமிகள் பாடல்கள், ப.14.
50. சுத்தானந்த பாரதியார் சிவயோகி, தாயுமானவச் சுடர், ப. 38.
51. Kamil Zvelebil., Tamil Literature, p. 111.
52. தாயுமானவர், சொருணாம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள், ப. 4.
53. தாயுமானவர் வாழ்வும் வழியும், ப.ள். 29-30.
54. தாயுமானச் சுடர், ப. 14.

Koviloor Digital Library

55. முத்துக்குமாரசாமி, இரா., தாயுமானவர், இலக்கியக் கொள்கை, தொகுதி - 2, ப. 328.

56. தாயுமா. பன்மாலை : 1.

57. தமிழண்ணல், டாக்டர்., புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, ப. 384.

58. தாயுமா. பராபரக்கண்ணி, 155.

59. மேற்படி, எடுத்ததேகம், பா. 3.

Koviloor Digital Library

தாயுமானவரின் சித்தர்கணத்தில் விளக்கமுறும் சித்தர்களின் சிறப்புகள்

1. சித்தர்கள் பொதுப்பார்வை

சித்தர்கள் பற்றிப் பலரும் பலவிதக் கருத்துகளை வழங்கியுள்ளதைக் காணமுடிகிறது.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்"[1]

என்பது தொல்காப்பிய நூற்பாவாகிறது. "காமம், வெகுளி, மயக்கம் இல்லாத ஒழுகலாற்றினை இறப்பும், நிகழ்வும் எதிர்வும் என்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோன் அறிவன்" என்பது இதன் பொருளாகிறது. "கலசயோனியாகிய அகத்தியர் முதலியோரும் அறிவர் என்றுணர்க" என்றும் "யோகிகளாய் உபாயங்களான் முக்காலம் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் தேயத்து அவனறியன் வகையராவர்" என்றும் வருவன நச்சினார்க்கினியர் உரைத் தொடர்களாகின்றன. இதனால் முக்காலமும் உணர்ந்த யோக ஞானிகளைத் தொல்காப்பியரும் நச்சினார்க்கினியரும் அறிவர்எனக்குறிப்பிட்டுள்ளதைஅறிய முடிகிறது. தொல்காப்பியர் காலத்து வாழ்ந்த சித்தர்கள் ஞானயோக நெறிகளால் பெற்ற வெற்றித்திறம் அறிவன்வாகை எனச் சிறப்பிக்கப்பட்டது.

அக்காலத்தில் அறிவர் எனப் போற்றப்பெற்ற மரபினராகிய சித்தர்கள் நாட்டு மக்கள் எல்லோரும் தம் அறிவுரைகளை உணர்ந்து பயன்பெறுதல் வேண்டும் என்ற விரிந்த நோக்குடன்.

Koviloor Digital Library

எளிய மக்களும் புரிந்து கொள்ளுதற்கேற்ற பேச்சுமொழி நடையிலேயே தம் நூல்களை இயற்றியுள்ளனர். தமிழ்நாட்டின் தவப் பேறாகத் தோன்றிய சித்தர்கள் உலகமெங்கும் உலவித் திரிந்து மனிதகுலத்தினர் அனைவரையும் தம் மகவெனப் பேணிக் காக்கும் பேருளாளர்களாகத் திகழ்ந்துள்ளார்கள்.[2]

நச்சினார்க்கினியர் அகத்தியரையும், திருமூலரையும் தமிழகச் சித்தர்கணத் தலைவர்களாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழகச் சித்தர்களுள் தொன்மையானவராகக் கருதப்படும் அகத்தியர்,

> ***"சாத்திரத்தைச் சுட்டு எரித்தால்***
> ***அவனே சித்தன்"[3]***

எனச் சமுதாயத்திற்கு உதவாத சாத்திரங்களைப் பின்பற்றாதவர்கள் சித்தர்கள் என்கின்றனர்.

திருமூலர்,

> ***"பத்தர் சரியை பாடுவோர் கிரியையோர்***
> ***அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்***
> ***சுத்த வியமாதி சாதகர் தூயோகர்***
> ***சித்தர் சிவஞானம் சென்றெய்து வோர்களே"[4]***

எனப் பாடியுள்ளார். அவர் சரியை, கிரியை, யோகங்களைக் கடந்து ஞானநிலை அடைந்தவர்களைச் சித்தர்கள் என்கின்றார். பக்தர், தொண்டர், யோகியர், சித்தர் இவர்கள் ஒருவரின் ஒருவர் உயர்ந்தவராகக் கூறப்படும் நிலையில் ஞானியர்களையே சித்தர்கள் என்கிறார் என்பது தெளிவாகிறது.

மேலும் திருமூலர், அட்டாங்க யோக வழி நின்று ஞானம் பெற்றவர்களையே சித்தர்கள் என்கின்றனர்.

> ***"சேர்ந்த எண்யோகத்தர் சித்தர் சமாதியோர்"[5]***

என்றும்,

> ***'யோக சமாதி உகந்தவர் சித்தரே'[6]***

என்றும் அவர் கூறியுள்ளார். இவ்வாறு அவர் கூறும்போது,

Koviloor Digital Library

சித்தர்கள் சிவஞானம் சென்றெய்துவோர்களே என முற்கூறிய அடிக்கும், இயமமாதி எண்வகை யோகத்தை மேற்கொள்ளும் போது யோகராகவும் அவரே சிவஞானம் கைக்கூடிய நிலையில் சித்தராகவும் உள்ளார் எனக் கூறலே தக்கதாகிறது. திருமூலரை யும் சித்தர் எனக் கூறும்போது, யோக சாதகராகவிருந்து சித்தி பெற்றவர், ஞானம் பெற்றவர் எனக் கோடலே பொருத்த மாகிறது. திருமந்திரத்தில் பலவிடங்களிலும் யோக அனுபவமே பரவலாகப் பேசப்படுவதும் கருதத்தக்கது. பாயிரம் கூறும் திருமூலர் வாழ்க்கை வரலாறும் திருமூலரை ஒருயோக சாதகராக வளர்ந்த சித்தராகவே நமக்குக் காட்டுகிறது.[7]

தேவாரத்தில் வரும் சில குறிப்புகள், சித்தர்களைக் குறிப்பிட்ட ஓர் அடியவர் இனம் என்றே தெரிவிக்கின்றன.

> **''ஏத்துயர் பத்தர்கள் சித்தர் இறைஞ்ச**
> **அவரிடம் எல்லாம் காத்தர்''**[8]

என்று திருஞானசம்பந்தரும்,

> **''சித்தராய் வந்து தன்னைத்**
> **திருவடி வணங்குவார்கள்''**[9]

என்று திருநாவுக்கரசரும்,

> **''பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன்''**[10]

என்று சுந்தரரும் பாடியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கன.

சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள். சித்தம் என்பது அந்தகரணங்களுள் ஒன்று. சித்தத்தின் அசைவுகளாலேயே அனைத்துத் தத்துவங்களும் தோன்றுகின்றன. எனவே, இச்சித்தத்தை அடக்குவதில் சான்றோர் ஆர்வம் காட்டுவர்.

> **''சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட**
> **அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே''**[11]

என்று மாணிக்கவாசகர் இதனைப் பாடியுள்ளதை அறிய முடிகிறது. மேலும் அவர், சரியை, கிரியையாளர்கள் அளவில் வேறுபாடு காணப்படினும், ஞானியர்களையே சித்தர்கள் எனப் பாடியுள்ளார்[12]

Koviloor Digital Library

எல்லாம்வல்ல இறைவன் 'சித்து ரூபன்' எனப் போற்றப்பெறுகின்றான். மேலும் அவ்விறைவன் சித்தனாகத் திருவிளையாடல்களைப் புரிகின்றான் எனப் புராணங்கள் கூறுகின்றன.[13] அன்றியும் தந்திரி, வைரவன், வியாழன், முருகன் ஆகியோரும் சித்தர் என்று குறிக்கப்பட்டுள்ளனர்.[14]

இறைவனைக் குறிப்பிடும் சச்சிதானந்தம் என்னும் பெயரில் சித்து என்பது பேரறிவைக் குறிக்கின்றது[15] எனவே பேரறிவு படைத்தவர்கள் சித்தர்கள் ஆகின்றனர்.

சித்தர்களின் வல்லமை அளப்பரியது. சித்தத்தில் சிந்தித்தபடியே உடலும் உண்பனவும் அடைந்து, அனுபவிக்கின்றவர்களே சித்தர்கள். இவர்கள் சிவநெறியைச் சார்ந்து ஒழுகியவர்கள் என்றாலும் சமயங்களில் கூறியுள்ள சமய விதிகளை விலக்கிவிட்டு, ஆத்மஞானம் ஒன்றையே கடைப்பிடித்தவர்கள். இவர்கள் காரண காரிய வகைகளால் உடம்பைச் சோதித்து, எவ்வெவ்வகைப் பொருள்களால் உடல் வளர்ந்து அழிகிறதென்பதை ஊக்கத்தாலும் முயற்சியாலும் கண்டறிந்து, உடம்பைப் பொய்யென்று சொல்வதற்கு மாறாக மெய்யென்று கூறி அச்சொல்லுக்குப் பொருள் கண்டு, அணிமா, மகிமா, லகிமா முதலிய அட்டமா சித்திகளை அடைந்தவர்கள். மேலும் தங்களுடைய உடம்பை மாத்திரம் தகுந்தபடி பலப்படுத்திக் கொண்டால் பிறப்பு, இறப்பினின்று நீங்கி விடலாம் என்றுணர்ந்து, அநேகக் காலம் உயிருடன் இருக்கக் கூடிய நித்திய வாழ்வைப் பெற்ற மிகப்பெரிய மகான்கள். இவர்கள் காய கல்ப வழியாலும், யோக சாதனையாலும் தங்களிடத்தில் மிகுதிறன் வாய்ந்தவர்கள். அழியக்கூடிய உடம்பைக் கொண்டே, ஞானசக்தியால் வீடுபேறு வழியைத் தேடக் கூடியவர்கள் ஆவர்.[16]

சித்தர்கள் சித்தத்தில் சிந்தித்தவாறே கால்பிடித்து மூலக் கனலை எழுப்பி மணிமருந்து மந்திரங்களின் துணையால் மாறாத மணியமுதுண்டு நரை, மரண, மூப்பறியா நல்லுடம்பு பெற்றவர்கள்.[17]

Koviloor Digital Library

சித்தர்கள் யோகம் பயின்று, விரிந்த காட்சியுற்று பொருள் களின் உண்மையியல்புகளையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிந்து, அவர்கள் தமிழில் மருத்துவநூல், மந்திர நூல், இரசவாத நூல், யோக நூல், ஞானநூல் என்னும் பல்வகை நூல்களைப் படைத்தவர்கள்[18] என்றும், சித்தர்கள் சித்தி எய்தியவர்கள்; பேரின்பம் சித்திக்கப்பட்டவர்கள்; கடவுளைக் காணமுடியுமென்று கண்டு அல்லது அறிந்து தெளிந்தவர்கள்[19] என்றும் சித்தர்கள் சாதி வேறுபாடுகளைக் கடந்தவர்கள்; மூடநம்பிக்கைகளுக்கு இடமளிக்காதவர்கள்; சடங்குகளோடு ஒட்டிய வழிபாடுகளைக் காண முயல்பவன் பக்தன்; கண்டு தெளிந்தவன் சித்தன்[21] என்றும் இக்காலத்தில் தமிழறிஞர்கள் பலரும் சித்தர்களின் பெருமைகளை எடுத்துரைத்துள்ளனர். இங்ஙனம் தொல்காப்பியர் காலந்தொட்டு இக்காலம் வரை சித்தர்களுடைய சிறப்பியல்புகளையும் ஆற்றல்களையும் பெருமைகளையும் பலரும் போற்றியுள்ளதை அறியமுடிகிறது.

இவர்களையெல்லாம் விஞ்சும் வகையில் தாயுமானவர் சித்தர்களின் வல்லமைகளை விளக்கிப் பாடியுள்ளதை அறிய முடிகிறது. சித்தர்கள் காடுகளிலும் மலைகளிலும் மலைகளின் குகைகளிலும் தங்கியிருந்து தவமியற்றியவர்கள். இவர்கள் தாங்கள் ஆற்றிய தவத்திற்கு இடையூறுகள் வராமலிருக்க, தக்க பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

சித்தர்கள் நிறைந்து வாழ்ந்த கொல்லிமலையில் 'கொல்லியம்பாவை' என்ற அழகுமிக்க சிலையை நிறுவி, அச்சிலைக்குத் தம் தவத்தில்பெற்ற சித்தியை ஊட்டினர். தம் அரிய தவத்திற்கு இடையூறு செய்ய வரும் தீயவர்களின் வாடை பட்டதும் அந்தக் கொல்லியம்பாவை குறுநகை புரியும். அந்த நகையில் நாட்டம் செலுத்தியவர்களின் உள்ளத்தையும் உணர்வையும் அப்பாவை ஈர்த்து, அவர்களை அருகில் அழைத்துக் கொன்றுவிடும் என அறிய முடிகிறது.[22]

தவத்தின் வலிமையால் தனிப்புகழ் ஈட்டிய இத்தகைய சித்தர்களுக்குத் தெரியாத கலை உலகில் இல்லை. உலகில் அரியவை யாவும் அவர்களுக்கு எளிமையாகின்றன இதனைத் தாயுமானவர்,

Koviloor Digital Library

"கந்தக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாம் ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாஞ்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாஞ்
சலமேல் நடக்கலாங் கனல்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாம்."[24]

எனப் பாடியுள்ளதால் அறியமுடிகிறது.

சித்தர்கள் இத்தகைய ஆற்றல்களை எவ்வழியில் பெற்றவர்கள் என்பதை அவர்களே அழகாக உணர்த்தியுள்ளார்கள். சித்தம் என்னும் மனம் மனிதனுக்கு வாய்த்துள்ளது. இந்த மனமாகிய சித்தம் இயல்நிலையில் மிகவும் பக்குவப் படாததாக உள்ளது. எனவேதான் மனம் குரங்கென்றும் பேய் என்றும் மூடம் நிறைந்தது என்றும் கூறப்படுகின்றது. இத்தகைய அடங்கா மனத்தை அடக்கிச் செம்மையுறச் செய்து அதனாலேயே சித்திகளை எய்தியவர்கள் சித்தர்கள் ஆவர்.

சித்தர்கள் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் எளிய வாழ்க்கையாகிறது. சித்தர்களின் தேவைகள் மிகமிக அற்பமாகவே இருந்திருக்கின்றன. அதனால்தான் "சித்தன் போக்கு சிவன் போக்கு" எனக் கூறப்பட்டது. பட்டினத்தார்,

"உடைகோ வணமுண்டு உறங்கப் புறந்திண்ணை உண்டுணவிங்கு
அடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறும் ஈசர் திருநாம முண்டிந்த மேதினியில்
வடகோடுயர்ந்தென்னதென்கோடு சாய்ந்தென்னவாண்பிறைக்கே"[24]

எனப் பாடியுள்ளார். இதுவே சித்தர்களின் போக்காகிறது. ஓடுண்டு, கந்தையுண்டு, ஓது ஐந்தெழுத்துண்டு என்று நிறைந்த

Koviloor Digital Library

நிலையில் வாழ்ந்த அவர்கள் தெளிந்த நிலையில் தேடிய தெல்லாம் பரம்பொருளையே ஆகிறது. தன்னுள்ளே இருக்கும் பரம்பொருளைக் கண்ட அவர்களால் எதையும் செய்ய முடிகிறது.

2. சித்தர்களின் அளப்பரிய ஆற்றல்கள்

தாயுமானவர்,

"திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி யாடிவருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவளாவி
உக்ரமிகு சக்ரதர னென்னநிற் பீர்கையில்
உழுந்தமிழும் ஆசமனமா
வோரெழு கடலையும் பருகவல்லீர் ந்த்ரன்
உலகும்அயி ராவதமுமே
கைக்கெளிய பந்தா எடுத்து விளையாடுவீர்
ககனவட் டத்தையெல்லாம்
கடுகிடை யிருத்தியே அட்டகுல வெற்பையும்
காட்டுவீர் மேலும் மேலும்
மிக்கசித் திகளெலாம் வல்லநீர்"[25]

எனச் சித்தர்களின் ஆற்றல்களையெல்லாம் பாடியுள்ளார்.

சித்தர்கள் திக்குகளிலும் திக்குகளின் எல்லைகளிலும் மனத்தின் வேகத்தினைப் போன்று விரைவாகச் சென்று ஓடியும் விளையாடியும் வருவார்கள்; செம்பொன்மயமான பெரிய மேருமலையுடன் நல்ல குணமான மேருமலை போன்று விளங்கும் துருவ மண்டலம் (வடமீன்) வரை சென்று பொருந்தி வேகமிக்க ஆழிப்படையையுடைய திரிவிக்கிரமன் போன்று விளங்குவார்கள். கையகத்தே கொண்ட உழுந்தின் அளவாய் ஆழமான ஏழுகடல்களையும் குடிக்கும் நீராய்க் குடிக்க வல்லவர்கள்; வான் உலகத்தையும் அதிலுள்ள ஐராவதம் என்ற யானையையும் கைகளுக்கு எளிதாகப் பந்து போல் எடுத்து விளையாடுவார்கள்; வான மண்டலங்களையெல்லாம் கடுகைத்

Koviloor Digital Library

துளைத்து அதில் புகுத்தி எட்டுக்குல மலைகளையும் காண்பிப் பார்கள் எனத் தாயுமானவர் சித்தர்களின் அளப்பரிய ஆற்றல் களை இப்பாடலில் விளக்கியிருப்பதைக் காண முடிகிறது.

சித்தர்கள் மனோ சக்தியால் மருந்து கொள்ளாமலே உடம்பின் அணுவாதி தத்துவங்களை மாற்றிப் பிணி, சாக்காட்டை அகற்ற வல்லவர்கள். அன்றியும் மனவலிமையால் மின்சாரத்தின் ஆற்றலைப் போன்று உலகத்தில் அண்டங்கள் முழுவதிலும் திசைகள் பலவற்றின் செய்திகளை இருந்த இடத்திலிருந்தே தெரிந்து கொள்ளவும் எங்கேனும் யாருடனேனும் உரையாடக் கூடிய வல்லமையும் பெற்றவர்கள் ஆவர். இவ்வகையிலேயே தாயுமானவர் அளப்பரிய ஆற்றல்கள் படைத்தவர்கள் சித்தர்கள் எனக் கூறுவதை அறிய முடிகிறது.

3. அட்டமா சித்திகள்

சித்தர்களின் அளப்பரிய ஆற்றல்களை வியந்துரைத்த தாயுமானவர் அவர்கள் அட்டமாசித்திகளிலும் வல்லவர் என மேற்குறிப்பிட்ட பாடலில் கூறியுள்ளதை அறிய முடிகிறது.

பிங்கல நிகண்டு சித்தர்களின் அட்டமா சித்திகளை,

"அணிமா மகிமா கரிமா விலகிமா
பிராத்தி பிராகாமிய மீசத்துவம் வசித்துவமென்
றோதற் கரிய அட்டமாசித்தி"[26]

என வரிசைப்படுத்தியுள்ளது.

திருமூலர், யோகநெறி நின்று குற்றமற்ற மனத்தால் இறைவனை நினைத்தால் அட்டமா சித்திகள் கைக்கூடும் என்கிறார்.[27] மேலும் அவர், சந்திரகலையாகிய இடப்பக்க மூக்கின் வழியும், சூரியகலையாகிய வலப்பக்க மூக்கின் வழியும் விடுத்தலாகிய உயிர்ப்பு பன்னிரண்டு விரலளவு வெளியிற்செல்லும். அதில் நான்கு விரலளவு வீணாகிறது. எஞ்சிய எட்டு விரலளவே அகத்துள் தங்குகிறது. அவ்வாறன்றிப் பன்னிரண்டு விரலளவு உயிர்ப்பும் அகத்தில் தங்கச் செய்ய வேண்டும். இப்பயிற்சியைப் பன்னிரண்டு ஆண்டுகள்

Koviloor Digital Library

செய்தால் அட்டமா சித்திகளைப் பெறலாம் என்கின்றார்.[28] அன்றியும் அவர் கல்வி, கலைகளினால் இச்சித்திகளைப் பெற இயலாது. சிவபெருமானிடம் மாறா அன்புடையவர்களுக்கே இவை கிட்டும் என்றும் கூறியுள்ளார்.[29]

இவ்வெண்வகைச் சித்திகளையும் திருமூலர் பின்வருமாறு விளக்குவர். அணிமா சித்தி என்பது நுண்மையானது. விந்து நீக்கமின்றிச் சேமித்து வைத்து ஓராண்டு யோக முயற்சியில் ஈடுபடுவார்க்கு அணிமா சித்தி வாய்க்கப்பெறுகிறது. அணுவினைப் போன்று சூக்குமமாகும் அவர் பஞ்சினும் மென்மையானவர் ஆகின்றார்.[30]

மகிமா சித்தி என்பது பருமையாகிறது. விந்து மயமான பரையும் நாதமயமான சிவமும் ஒன்றாய் நின்றபோது நாதாந்தம் ஆகிறது. இச்சித்தி பெற்றவர் தமது விருப்பம்போல உருவத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்.[31]

கரிமா சித்தி என்பது ஒன்றையொன்றாக்கல் ஆகிறது. இச்சித்தி பெற்றோருக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. அவர்கள் சக்தியுடன் ஓராண்டு இருந்தால் பரகாயப் பிரவேசம் செய்ய முடியும். இருந்த இடத்திலிருந்து இவர்களால் உலகப் பரப்பு முழுவதையும் காணமுடிகிறது.[32]

இலகிமா சித்தி என்பது எளிமையாக்கலாகிறது. இறையருளால் பராசக்தியுடன் மூலாதாரத்திலிருந்து மேலே செல்லும் எல்லாத் தத்துவங்களிலும் அச்சக்தியே ஆதாரமாய்ச் செல்ல வேண்டிய காலங்கள் தன் வழிப்பட்டு நிற்பின் அணிமா சித்தி பெற்ற ஐந்தாண்டுகளுக்குப் பின் இலகிமா சித்திக்கும். இச்சித்தி பெற்றோரது ஆன்மா பால்போன்று பரந்து நின்று எல்லாவற்றிற்கும் மேலான சிவனைத் தரிசிக்கும் என்பர்.[33]

பிராப்தி சித்தி என்பது விரும்பியது எய்தலாகிறது. சக்தியுடன் தூலமாய்க் காணப்பட்ட உலகப் பொருள்களெல்லாம் சூக்குமமாய் ஒடுங்கும். இதனை ஓராண்டு தாரணை செய்யின் வேண்டுவன அடையும் சித்தி கிட்டும்.[34]

Koviloor Digital Library

பிரகாமியம் என்பது நிறைவுண்மையாகிறது. மூலாதாரத்திலுள்ள மூலக்கனலை ஒளி, ஒலியாகக் கண்டவர்களுக்குச் சிரசுக்கு மேல் விளங்கும் சிவஒளியும் அதனால் வீடுபேறும் பத்தாம் ஆண்டில் எளிதில் கிட்டும் என்பர்.[35]

ஈசத்துவம் என்பது ஆட்சியனாதல் ஆகிறது. அதாவது தத்துவங்களை விருப்பப்படி நடத்தலாகிறது. சீவர்களிடம் என்றும் நிலைபெற்றுள்ள சிவசக்தியுடன் சூக்கும திருட்டிக்குப் புலப்படும் ஒளி அணுக்கள் எல்லாவற்றையும் சிரசுக்கு மேலுள்ள விந்து மண்டிலத்தில் வெவ்வேறு வகை ஒளி பாய்வதை ஓராண்டு சேர்த்திருந்தால் அவனுக்குச் சதாசிவ தத்துவம் தோன்றும். அவன் தானே சந்திரனாய் விளங்குவான்; மேலும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் ஆற்ற வல்லவனாய்த் தானே சிவனாக விளங்குவான் என அறிய முடிகிறது.

வகித்துவச் சித்தி என்பது அற்புதம் காட்டலாகிறது. இது தத்துவங்களில் இரண்டறக் கலந்திருத்தல் ஆகிறது. சிறப்பு மிகுந்த மேலேழ் உலகங்களிலும் கீழேழ் உலகங்களிலும் சென்று அழகுடன் தங்கிநிற்கும் இத்தகுதி பன்னிரண்டாம் ஆண்டில் சாதகனுக்குக் கிட்டுகிறது.[37]

அணிமா முதலாமாண்டிலும் இலகிமா ஆறாம் ஆண்டிலும் மகிமா ஏழாமாண்டிலும் பிராத்தி எட்டாமாண்டிலும் கரிமா ஒன்பதாமாண்டிலும் பிரகாமியம் பத்தாமாண்டிலும் ஈசத்துவம் பதினோராம் ஆண்டிலும் வசித்துவம் பன்னிரண்டா மாண்டிலும் முறையான யோகப் பயனாலும் இறைவன் அருளாலும் சாதகனுக்குக் கிட்டுவதாகிறது.[38]

சித்தர்களால் நிகழ்த்தப்பெறும் அற்புதச் செயல்களாகிய இந்த அட்டமா சித்திகளை இடைக்காடச்சித்தர்,

''மெய்வாய் கண் மூக்குச் செவியெனும் ஐந்தாட்டை
வீருஞ் சுவையொளி யூறோசை யாங்காட்டை
எய்யாமல் ஓட்டினேன் வாட்டினேன் ஆட்டினேன்
ஏகவெளிக்குளே யோக வெளிக்குளே''[39]

எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

இந்த அட்டமா சித்தி பெற்றோரின் வல்லமைகளைப் பாம்பாட்டிச்சித்தர்,

"தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச் செய்வோம்
துரும்பைப் பெருந்தூணாகத் தோன்றச் செய்குவோம்
ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் ஆகச் செய்வோம்
ஆரவாரித் தெதிராய் நின்று ஆடுபாம்பே"[40]

என்றும்,

"எட்டு மலைகளைப் பந்தாய் எடுத்தெறிகுவோம்
ஏழு கடல்களையும் குடித்து ஏப்பம் இடுவோம்
மட்டுப்படா மணலையும் மதித்து விடுவோம்
மகராசன் முன்பு நீநின்று ஆடுபாம்பே"[41]

என்றும் பாடியுள்ளதை அறியமுடிகிறது.

4. சித்தர்களின் வியத்தகு செயல்கள்

அட்டமா சித்திகள் கைவரப் பெற்ற சித்தர்களின் வியத்தகு செயல்களைத் தாயுமானவர் தமது சித்தர் கணத்தில், பலவாறு பாராட்டிப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது. அட்டமா சித்திகளில் வல்ல சித்தர்கள், இசைப் பாட்டினையுடைய வண்டுகள் நெருங்கி, மொய்க்கின்ற வானுலகக் கற்பக மரத்தின் நல்ல நிழலை இம்மண் உலகத்தில் வரவழைப்பார்கள்! தாமரை வடிவாகவும் சங்கின் வடிவாகவும் கேட்டார்க்குக் கேட்டவற்றைக் கேட்ட வண்ணம் அளிக்கும் வானுலகச் செல்வங்களான சங்கநிதி, பதுமநிதி ஆகிய இரண்டும் இம்மண்ணுலகிற்கு வந்து அவர்கள் பக்கம் நின்று அவர்கள் கேட்டவற்றைக் கேட்டவாறே தரச் செல்வர்! பிச்சை எடுத்து உண்டு வாழ்கின்ற மிக்க வறுமையுடையோரையும் மணிமுடி அணிந்து ஆளும் மன்னராய் ஆக்குவார்கள்! யுகமுடிவில் தோன்றும் பெரிய வெள்ளத்தை ஒரு சிறிய கிணற்றில் வந்து அடங்குமாறு செய்வர்! உடைந்த மண்பாண்ட ஓட்டைக் கையினால் எடுத்து ஆயிரத்தெட்டு மாற்றையடைய ஒளிரும் பொன்னாய் ஆக்கி வைப்பார்கள்! இம்மண்ணுலகத்தைச் சுமக்கும் ஆதிசேடனும் இளைப்பாறும் பொருட்டு அவர்கள் யோக தண்டமான

Koviloor Digital Library

முக்கோலில் அந்த உலகச் சுமையை மீட்டிட வல்லவர்கள்![42] எனத் தாயுமானவர் சித்தர்களின் வியத்தகு செயல்களைப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

5. சித்தர்களின் சித்திகள் அளவிடற்கரியன

சித்தர்கள் நிலம், நீர் முதலாகச் சொல்லப்படுகின்ற ஐம்பெரும் பூதங்களும் ஒன்றுடன் ஒன்று பற்றித் தொடர்ந்து ஒடுங்கும் காலத்தில் மேலான அருள்வெளியில் தங்கி யிருப்பார்கள்! ஊழிக்காலத்தில் தோன்றும் பெருவெள்ளம் பொங்கிப் பரந்து எங்கணும் நிற்கும்போது, அந்நீரின்மீது தங்கும் வண்டுகள் என்னும்படி அசைந்து அந்நீரின்மீது மிதந்து சிவயோக நிலையில் இருப்பார்கள்! பெரிய மேகங்கள் ஏழும் வேறுபாடெய்தி எங்கணும் பரந்துவிடாது மழைபொழிந்தால், நிலவுபொழிகின்ற திங்கள் மண்டிலத்தின் மேலிடமே தாங்கள் தங்கும் ஊராகக் கொண்டு அங்குத் தங்கியிருப்பார்கள்! அயன், மால், வானவர்கோன் முதலான தேவர்கள் அனைவரும் இறந் தொழியும் காலத்திலும் ஆனேற்றினைத் தானேற்று ஊரும் அம்மையப்பராம் சிவபெருமான் திருவருளால் உயிருடன் உலாவிக் கொண்டிருப்பார்கள்! உலகங்கள் அனைத்தும் கீழ்மேலாகத் தடுமாறும்படி பெருங்காற்றெழுந்து வீசுங்காலத் தில் பொறைநிலை என்று சொல்லப்படும் நல்லதாரணை முறையால் பொன்மலையாகிய மேருமலை என்னுமாறு அசையாமல் நிற்கும் பெருவன்மையையுடையவர்கள்! அவர் களுடைய வல்லமை அளவிடற்கரியன[43] எனத் தாயுமானவர் சித்தர்களின் பெருமைகளைக் கூறுவதைக் காண முடிகிறது.

6. வித்தகச் சித்தர் கணம் எனப் போற்றுதல்

சித்தர்கள் மிகவும் தொன்மையானவர்கள். அனாதிக் காலந்தொட்டு இருந்து வருபவர்கள். தொன்மைக் கடவுளாகிய சிவபெருமானே சித்துகள் பலவற்றை நிகழ்த்தியுள்ளான். சித்தர்கள் அட்டமா சித்திகள் கைவந்தவர்கள்; இரசவாத வித்தை வல்லவர்கள்; யோகசித்தி பெற்றவர்கள். மதுரையில் சோம சுந்தரக் கடவுள் எல்லாம்வல்ல சித்தராக வந்து கல்லானைக்குக்

Koviloor Digital Library

கரும்பு அருத்தியது இங்குக் கூறிய மூன்றனுள் முதல்வகை. திருப்பூவணத்தில் பொன்னனையாளுக்காகச் சிவபெருமான் வந்து இரசவாதம் செய்த திருவிளையாடல் இரண்டாவது வகையின்பாற்படுகிறது.

முருகப் பெருமான் சித்தர்களின் தலைவன் என்ற பொருளில் சித்தநாதன் என்ற திருநாமந் தாங்கி இப்புவியைத் தமது சித்தாடல்களால் ஈர்த்தாளுகின்றான். அவனது அறுபடை வீடுகளில் வீறுபுகழ் கொண்ட பழனியம்பதி 'சித்தன் வாழ்வு' என்றே சிறப்பிக்கப்படுகிறது.

தொல்காப்பியருக்கு முன்பு அகத்தியரும் பின்பு திருமூலரும் சித்தர்கணத் தலைவர்களாக விளங்கியுள்ளனர். சித்தர்களின் தொகையினை அறுதியிட்டுக் கூறமுடியாது. அதனால்தான் தாயுமானவர் சித்தர் கூட்டத்தை,

> "வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
> வித்தகச் சித்தர்கணமே"[44]

எனச் சித்தர்கணம் என்ற தலைப்பிலுள்ள பத்துப் பாடல்களிலும் போற்றிப் பாடியுள்ளார். மேலும் அவர் நவநாத சித்தர்கள் என்றும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இவர்கள் சித்தர் மரபுகளை விளக்கவந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவ்விதம் சித்தர்கள் கோடிக்கணக்கில் உள்ளனர். ஆகவே, சித்தர்களின் எண்ணிக்கை நவகோடி என்று கூறப்படுகிறது. சித்தர்களின் தொகை கணக்கில் அடங்காது என்பதையே இதுகாட்டுகிறது.

> "ஆடையிலே விண்ணுக்குள் சித்தர் கோடி
> அந்தந்த மலைகளினால் தாக்க வோடி
> ஊடையிலே அண்டத்தில் முனிவர் கோடி
> உற்றுநின்ற பதமளவும் ரிடிகள் கோடி"[45]

என்பன சட்டை முனி சித்தரின் பாடலடிகளாகின்றன. என்றாலும் திருமூலர் காலத்தில் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிர பாதர், திருமூலர் ஆகிய எண்மர் விளங்கியதாக அறியமுடிகிறது.[46]

Koviloor Digital Library

பதினெண் சித்தர் என்ற வழக்கு மிகவும் பழமையுடையதாகிறது. அகத்தியர் முதல் இந்தச் சித்தர்பட்டியல் தொடங்குகிறது. இவர்கள் அகத்தியர், இடைக்காடர், உரோமாமுனி, கமலமுனி, கூன்கண்ணர், கூர்மமுனி, கயிலாய நாதர், கொங்கணர், கோரக்கர், சட்டைமுனி, சுந்தரானந்தர், திருமூலர், நந்தி, பிரமமுனி, பிண்ணாக்கீசர், போகர், மச்சமுனி, வாசமுனி என்போர் என்று சொல்வது ஒரு பட்டியல்.

இப்பட்டியலில் பல பெயர்களை, நீக்கிச் சண்டேசர், கருவூர்ச் சித்தர், திருவள்ளுவர், சிவவாக்கியர், மார்க்கண்டர், வால்மீகி, இராமதேவர், காகபுசுண்டர், சுப்பிரமணியர், சூரியானந்தர், பட்டினத்தார், பத்திரகிரியார், சகதீசர், தேரையர், யூகி, தருமமுனி முதலான பலபெயர்கள் சொல்வதுண்டு. மேலும் ஏனாதிச்சித்தர், காளைச்சித்தர், கம்பளிச்சித்தர், சடாதாரச் சித்தர் என்றெல்லாம் சித்தர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.[47] அதனால்தான் தாயுமானவர் வித்தகச் சித்தர் கணம் எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார் என்பது புலப்படுகிறது.

7. சித்தர்கள் சிவராச யோகச் செல்வராய் விளங்குபவர்கள்

யானைப்படை, குதிரைப் படை எனக் கூறப்படும் மன்னருக்குரிய நான்கு வகைப்பட்ட படைகள் போல், தவ வேந்தரான சித்தர்களுக்கு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் பணிவிடைகளுக்கு இணங்கி நிற்கவும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை[48] என்னும் ஆதாரங்கள் ஆறிலும் அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்னும் மண்டலங்கள் மூன்றிலும் அதிகாரம் செல்லவும் சிணிநாதம், சிணி சிணீநாதம், கண்டநாதம், மிருதங்க நாதம், முரளீநாதம், பேரீநாதம், மேகநாதம் எனப் பத்துவகைப்பட்ட நாதங்களும் முழங்கவும், பூரண சந்திரனாகிய குடை பிரகாசிக்கவும் வசந்த காலத்து மலரிலிருக்கும் மணம் போல இதயத்தில் இன்பம் குடிகொள்ளவும், இந்திரன் முதலிய தேவர்கள் மங்களமொழி கூறவும் எப்பொழுதும் கெடாத

Koviloor Digital Library

சிவராச யோகத்தை உடையவர்களாக, சிங்காசனாதிபதிகளாகச் சித்தர்கள் கொலுவீற்றிருப்பார்கள்![49]

தாயுமானவர் சித்தரை மன்னருடன் ஒப்பிட்டு இங்குப் பாடியுள்ளார்.[50] மன்னர்க்கு யானை முதலிய நான்கு வகைப் படைகள் இருப்பதைப் போன்று சித்தர்க்கு அந்தக்கரணங்கள் நான்கு உள்ளன. மன்னர்க்கு ஆணை மூன்று உலகங்களிலும் செல்வதைப் போன்று சித்தர்க்கு மூன்று மண்டலங்களிலும் ஆணை செல்கின்றது. மன்னர்க்குரிய காகளம் முதலிய கருவிகள் உள்ளன போன்று சித்தர்க்குப் பத்து ஒலிகள் வாத்தியங்களாக உள்ளன. மன்னர்க்கு வெண்கொற்றைக்குடை உள்ளதைப் போன்று சித்தர்க்கு மதியான குடை உள்ளது. மன்னர்க்குக் கட்டியம் கூறும் மக்கள் இருக்கக் கொலுவீற்றிருப்பதைப் போன்று இந்திரர் முதலிய தேவர்கள் சித்தர்க்கு வாழ்த்து கூறக் கொலுவீற்றிருக்கின்றார்கள் எனத் தாயுமானவர் சித்தரை மன்னருடன் ஒப்பிட்டுப் பாடியுள்ளதை அறிய முடிகிறது.

சிவராச யோகம் என்பது யோகத்தைக் கருவியாகக் கொண்டு சிவத்தியானம், சமாதி ஆகியவற்றை முயன்று அடைதலாகிறது. புருவ நடுவிலிருந்து ஆறு விரற்கிடைப்பால், தலை நடுவில் - பிரமாந்திரத்தில் இருக்கின்ற ஆயிரம் இதழ் தாமரையைச் சிவசூரியனால் விரியச் செய்து அத்தாமரைப் பூந்தாதுவில் உள்ள சந்திர மண்டலத்தை மூலாக்கினியால் இளகச் செய்து, அதன் அமிர்தத்தை எல்லா நாடிகளிலும் பரவச் செய்வதே சிவராச யோக முறையாகிறது. யோகத்துடன் கூடிய சிவத்தியானத்தைச் சிவராசயோகம் என்பர். வெறும் யோகத்தை விடச் சிவயோகமே சிறந்தது. இதனைத் தாயுமானவர்,

''என்றைக்கும் அழியாத சிவராச யோகமாய்''[51]

எனப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

சித்தர்க்குரிய பூமிகள் ஏழாகின்றன. அவை யோக பூமிகள் எனக் கூறப்படுகின்றன. ஆறு ஆதாரங்கள், பிரமமந்திரவை ஆகியவையே அப்பூமிகள். பிரமமந்திரம் என்பது தலைநடு விலதாகிறது. இந்தப் பூமிக்குப் பன்னிரண்டு அங்குலத்திற்கு அப்பால் உள்ள பெருவெளியில் பரம்பொருளாகிய

Koviloor Digital Library

சிவபெருமானைக் கண்டு களிக்கும் பெரும்பேறு பெற்றவர்களே சிறந்த சித்தர்கள் ஆவர். இத்தகைய ஏழு பூமிகளையும் கடந்தவர் துவாத சாந்தப் பெருவெளியில் இறைவனைக் காண்போராவர். இவர்களைத் தாயுமானவர்,

"ஏழாம் யோக நின்று தெளிந்தவர்"[52]

எனப் பாடியுள்ளார்.

8. சித்தர்கள் தவராச சிங்கமாய்த் திகழ்பவர்கள்

சித்தர்கள் அழகுடைய கைகால்களில் கூரிய நகங்களைப் பெற்றிருத்தலாலும் இடுப்பானது சுருங்கிக் காணப்படுவதாலும் அழகுடைய வெண்ணீற்றைப் பூசித் திருவருள் பெற்று இறுமாந்துள்ள மதிக்கத்தக்க குணத்தாலும், ஒளியுண்டாக விளங்குமாறு அறிவுவெளியில் இமை கூடாமல் மேல்நோக்கி யிருத்தலாலும், இரவிலும் பகலிலும் உயிர்களின் அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் ஆணவம் என்ற பெரிய யானை இறக்கும்படி செய்து மனம் களிப்படைந்திருத்தாலும் பற்பல விதமான புலித் தோலையும், மான்தோலையும் இருக்கையாகப் பெற்று மிக்க புகழைப் பெற்றிருத்தலாலும் வெயில் முதலானவை நுழையப் பெறாமல் அகன்ற வானத்தை அளாவிய உயர்ந்த பருத்தமரங்கள் நெருங்கப் பெற்ற காடுகள் நிறைந்த மலையிடை வாழ்தலாலும் அவர்கள் தவராச சிங்கங்கள் ஆவர்.[53] கூரிய நகங்களைப் பெற்றிருத்தல், சுருங்கிய இடை, வெண்ணிறம், மேல் நோக்கிய விழிகள், யானையைக் கொல்லல், புலி, மான், தோல்களை வைத்திருத்தல், காட்டில் வாழ்தல் என்பவை சித்தர்க்கும் சிங்கத்துக்கும் பொதுவான பண்புகளாகின்றன. எனவே, தாயுமானவர் சித்தர்களைத் தவராச சிங்கங்கள்எனப் போற்றுவதை அறியமுடிகிறது.

தொல்காப்பியர் சித்தரை 'அறிவர்' எனக் கூறியிருத்தல், நச்சினார்க்கினியர் அகத்தியரையும் திருமூலரையும் சித்தர் கணத் தலைவராகக் கூறுதல், சாத்திரங்களைச் சுட்டெரித்தவர், அட்டாங்கயோக வழிநின்று ஞானம் பெற்றவர் சித்தர் எனத்

Koviloor Digital Library

திருமூலர் கூறுதல், சித்தர்களை ஓர் அடியார் இனமாகச் சைவ சமயக் குரவர்கள் பாடியிருத்தல், சிவபெருமானும் முருகப் பெருமானும் சித்தர்களாக விளங்கிச் சித்துகள் பல புரிந்திருத்தல், சிவநெறியைச் சார்ந்தொழுகியவர்கள் சித்தர்கள் என்றாலும் சமயங்களில் கூறியுள்ள சமய விதிகளை விலக்கிவிட்டு, ஆத்மஞானம் ஒன்றையே கடைப்பிடித்தவர்களாக அவர்கள் விளங்குதல், சித்தர்கள் உடம்பினைப் பொய் என்று சொல்வதற்கு மாறாக மெய் என்று கூறி அதற்குரிய பொருள் கண்டு, அணிமா, மகிமா, இலகிமா என அட்டமா சித்திகளை அடைந்தவர்கள், உடம்பினை மாத்திரம் தகுந்தபடி பலப்படுத்திக் கொண்டால் பிறப்பு, இறப்புகளினின்றும் நீங்கிவிடலாம் என்றுணர்ந்து, அநேகக் காலம் உயிருடன் இருக்கக் கூடிய நித்திய வாழ்க்கையைப் பெற்ற மிகப்பெரிய மகான்கள், கடவுளைக் கண்டு தெரிந்தவர்கள் எனத் தொல்காப்பியர் காலந்தொட்டு இக்காலம் வரை சித்தர்களுடைய சிறப்பியல்புகள் பற்றிப் பலரும் கூறியுள்ளவை இத்தலைப்பில் கூறப்பட்டன.

சித்தர்களுடைய அளப்பரிய ஆற்றல்களையும் வியத்தகு செயல்களையும் சிறப்பியல்புகளையும் விரிவாகப் பாடிய பெருமை தாயுமானவர்க்கே உண்டு. சித்தர்கணம் என்று தனியாகத் தலைப்பிட்டுச் சித்தர்களுடைய மகிமைகளைப் பாடியதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், ''வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்றவித்தகச் சித்தர் கணம்'' என அவர் போற்றிப் பாடியிருத்தல், அட்டமா சித்திகள் கைவரப் பெற்ற சித்தர்கள் திக்குகளிலும் திக்குகளின் எல்லைகளிலும் மனத்தின் வேகத்தினைப் போன்று விரைவாகச் சென்று ஓடியும் விளையாடியும் வருவார்கள்! செம்பொன் மலையான பெரிய மேருமலையுடன் அம்மலை போன்று விளங்கும் துருவ மண்டலம் வரை சென்று பொருந்தி வேகமிக்க ஆழிப்படையையுடைய திரிவிக்கிரமன் போன்று விளங்குவார்கள்! வான் உலகத்தையும் அதிலுள்ள ஐராவதம் என்ற யானையையும் கைகளுக்கு எளிதாகப் பந்துபோல் எடுத்து

Koviloor Digital Library

விளையாடுவார்கள்! வானுலகிலுள்ள கற்பக மரத்தின் நல்ல நிழலினை இம்மண்ணுலகிற்குக் கொண்டு வருவார்கள்! வானுலகச் செல்வங்களாகிய சங்கநிதி, பதுமநிதி ஆகியவற்றை மண்ணுலகிற்குக் கொண்டு வந்து கேட்டதைக் கேட்டவாறே வழங்குமாறு செய்வார்கள்! யுக முடிவில் தோன்றும் மிகப்பெரிய வெள்ளத்தை ஒரு சிறிய கிணற்றில் அடக்குவார்கள்! அவர்கள் சிவராசயோகச் செல்வர்களாகவும் தவராசச் சிங்கங்களாகவும் விளங்குவார்கள்! அவர்களின் வல்லமை அளவிடற்கரியன எனச் சித்தர்களின் அளப்பரிய ஆற்றலைத் தாயுமானவர் வியந்து பாடியிருத்தல் எனப் பலவும் இத்தலைப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 15332
LIBRARY, KOVILOOR

குறிப்புகள்

1. தொல். புறத்திணையியல்: 20.
2. பேராசிரியர் க. வெள்ளைவாரணர், அணிந்துரை, சித்தர் சிந்தனைகள், ப. 3
3. சித்தர் ஞானக் கோவை. அகத்தியர், பா: 5.
4. திருமந்திரம், பா: 1446.
5. மேற்படி, பா. 1447.
6. மேற்படி, பா. 1490
7. அருணாசலம், டாக்டர் பா., திருமந்திரக் கோட்பாடு, பக். 10-11
8. திருஞானசம்பந்தர் தேவராம். 463.
9. திருநாவுக்கரசர் தேவாரம். 584.
10. சுந்தரர் தேவாரம். 539.
11. திருவாசகம், அச்சோ பதிகம், பா.1.
12. மேற்படி, திருப்படையெழுச்சி, பா.2.
13. கலைக்களஞ்சியம், தொகுதி - 4, ப. 643.
14. கழகத் தமிழகராதி, ப. 251.
15. பேரா. பெருமாள், வ., 2-ஆம் உலகத்தமிழ் மாநாடு, சித்த மருத்துவக் கருத்தரங்கு, மலர், ப. 69.
16. வே. இரா., மாதவன், சித்தர் பாடல்கள், இலக்கியத்தின் நோக்கமும் பயனும், தொகுதி - 1.
17. சண்முகானந்த சுவாமிகள், திருமூலர் வைத்தியம், ப.4.
18. கா. சுப்பிரமணியப் பிள்ளை, இலக்கிய வரலாறு, தொகுதி - 2. பக். 139 - 140.

Koviloor Digital Library

19. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 15ஆம் நூற்றாண்டு, ப. 330.
20. வரதராசன், டாக்டர் மு., தமிழ் இலக்கிய வரலாறு, ப. 190.
21. கலைக் களஞ்சியம், தொகுதி - 4. ப. 643.
22. இளங்கம்பன், டாக்டர்., தத்துவக் குயில்கள், ப. 4.
23. தாயுமா. தேசோமயானந்தம். 8.
24. பட்டினத்தார் பாடல்கள். திருத்தில்லை, பா.42.
25. தாயுமா. சித்தர்கணம், பா. 1.
26. பிங்கல நிகண்டு. 148.
27. திருமந்திரம், ப. 640.
28. மேற்படி, பா. 645.
29. மேற்படி, பா.646.
30. மேற்படி, பா. 673.
31. மேற்படி, பா.677.
32. மேற்படி, பாக். 681-683.
33. மேற்படி, பாக். 674-675.
34. மேற்படி, பா. 679.
35. மேற்படி, பா.683.
36. மேற்படி, பா.ள். 684-686.
37. மேற்படி, பா. 690.
38. கௌசல்யா விஜயன், டாக்டர் ஜி., திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள், ப. 55.
39. இடைக்காடச்சித்தர், பா.27.
40. பாம்பாட்டிச்சித்தர், பா. 27.
41. மேற்படி, பா.28.
42. தாயுமா. சித்தர்கணம், பா. 2.
43. மேற்படி, பா. 3.
44. மேற்படி, சித்தர்கணம், பா.ள். 1-10.

Koviloor Digital Library

45. சட்டைமுனி சித்தர், பா. 91.
46. திருமந்திரம், குரு பாரம்பரியம், பா. 67.
47. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 14ஆம் நூற்றாண்டு, பக். 341-342.
48. இவற்றிற்குரிய இடங்கள் முறையே குதம், குய்யம், நாவி, இதயம், அடிநா, நெற்றி என்பர் தத்துவ நூலார்.
49. செந்துறைமுத்து, புலவர்., தாயுமானவரும் பட்டினத்தாரும், ப. 65.
50. தாயுமா. சித்தர்கணம், பா. 6.
51. மேற்படி, பா. 6.
52. தாயுமா. மண்டலத்தின், பா. 2.
53. மேற்படி, சித்தர்கணம், பா. 9.

Koviloor Digital Library

தாயுமானவர் சித்தர்கணத்திடம் வேண்டுவன

1. சித்தர்கள் கடவுள் நிலைக்கு உயர்ந்தவர்கள்

சிவபெருமான், முருகன் எனச் சைவப் பெருங்கடவுளர்களெல்லாம் சித்தர்களாக விளங்கிச் சித்துகள் புரிந்துள்ளனர். இத்தகைய கடவுளர்கள் நிலைக்கு உயர்ந்தவர்களாகச் சித்தர்கள் விளங்கி வருகின்றனர். இந்தியத் தத்துவஞானம் மிகவும் தொன்மையானதாகிறது. கிறித்துவுக்குச் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சித்தர்களின் சிந்தனை கோட்பாடுகள் காசினியைக் கவர்ந்திருக்கின்றன. அறிவியல் வல்லார்களின் கோட்பாடுகளில் பழமையாகவுள்ள பகுப்புகள் இரண்டாகின்றன. அவை பொருள் (Matter) சக்தி (Energy) பற்றியனவாகின்றன. இவற்றையே சித்தர் தத்துவம் சிவம் என்ற பகுப்பாலும் சக்தி என்ற பகுப்பாலும் குறிக்கின்றது. பொருளுக்குச் சக்தியும் சக்திக்குப் பொருளும் இன்றி உலகின் இயக்கம் தொடர முடியாது. உலகில் உதித்த வெவ்வேறு கோட்பாடுகளுக்கும் முந்தியதாக அயலவர்களால் குறிக்கப்பெறும் டாவோயிசத்திற்கு இக்கருத்தே அடிப்படை என்றாலும் மிகமிக முந்திய காலத்தே இந்தச் செவ்விய சிந்தனைக் கோட்பாட்டை இவ்வுலகிற்கு வழங்கியவர்கள் சித்தர்கள் ஆவர்.[1]

சித்தர்கள் பெரும் வித்தகர்கள்; தூய நற்சிந்தனையாளர்கள்; நெஞ்சம் உணர்ந்ததை வஞ்சமின்றி அஞ்சாது நேர்பட மொழியும் நல்லோர்; எதற்கும் தயங்கார்; எவருக்கும் மயங்கார்; உலகத் துன்பங்கட்கெல்லாம் காரணம் உள்ளத்தின் வன்மை இன்மையே

Koviloor Digital Library

என உணர்ந்து உணர்த்தியவர்; தங்கு தடையின்றிச் சிங்கமென எங்கும் எவ்விடத்தும் உலவி, உள்ளத்தில் பட்டதைப்பட்டாங்கு பகர்ந்தவர் ஆவர்.

சித்தர்கள், நைந்து நலியும் உடலினைக் காயகல்பத்தின் மூலம் வலுப்படுத்தி உலகில் நெடுங்காலம் வாழச் செய்யலாம்; உடம்பினை ஆன்மாவாகவே மாற்றுவதன் மூலம், மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம்; பிறர் கண்ணுக்குப் புலப்படாது வெட்ட வெளிதனில் கலந்து மறையலாம்; தூல உடலினைச் சூக்கும உடலாக மாற்றுவதன் மூலம் உடலும் உயிரும் பிரிதலின்றி ஒன்றச் செய்யலாம் எனச் செய்தவர்கள் ஆவர்.

சித்தர்கள் சிவானுபூதிச் செல்வர்கள்; சமயங் கடந்த சால்பினர்; மோனநிலையில் மூழ்கியவர்கள்; காற்றிலுள்ள பிராணவாயுவை உட்கொண்டு யோகத்தில் நிலைப்பவர்கள். வாசி மூச்சடக்கி ரேசகப் பூரக கும்பத்தால் குண்டலினி சக்தியை எழுப்பி மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களினும் சித்தத்தை நிறுத்திச் சித்தி பெற்றவர்கள்; முத்தி அடைந்தவர்கள் ஆவர்.[2]

2. ஓங்கார, நமசிவாய மந்திரங்கள்

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தத்தமக்குரிய கடவுளரை உள்ளத்தில் கொண்டு உணர்வினால் பூசிக்கும் யோக நெறிக்கு ஆதாரமாகவும் உடலினுள் இயங்கும் சக்திகளின் ஒலி வடிவமாகவும் உள்ள ஒலிகளைத் தம்மெய்யுணர்வில் கண்டு அதனை இயக்கும் ஒலியெழுத்துகளை உருவாக்கித் தெரிவித்தனர். அத்தகைய எழுத்துகளில் வல்லமை பெற்றதாய் உலகத்தின் தோற்றமும் இயக்கமும், ஒடுக்கமும் உள்ளடக்கி நின்றது 'ஓம்' என்ற பிரணவ ஒலியாகிய ஓங்காரமேயாகிறது. எல்லா மந்திரங்களையும் ஏற்று நிற்கும் மூலமந்திரமும் இதுவேயாகிறது. இவ்வோங்காரத்தினுள் அடங்கியே மந்திரச் சக்கரங்கள் அமைகின்றன. சிவபெருமானுக்கு முருகப் பெருமான் விளக்கிய அரும்பொருளுக்குரிய சொல்லும் பிரணவமாகிய ஓங்காரமே ஆகிறது.

Koviloor Digital Library

இத்தகைய ஆற்றல் படைத்த ஐந்தெழுத்து மந்திரத்தை வாசியுடன் இயக்கி, அதனைக் கொண்டு உடலையும் உயிரையும் ஓம்பியதோடு, தெய்வீகத்தை உடலினுள்ளேயே கண்டு களித்ததாகச் சித்தர்கள் எத்தனையோ வழிகளில் கூறியுள்ளனர்.[3] இவ்வைந்து மூல மந்திர எழுத்துகளுடன் அ,உ,ம,சி என்ற நான்கெழுத்தும் சத்து சித்தாகக் கூடி நின்றதை,

> **"அகாரம் இத்தனையும் அங்கென் றெழுந்தபடி**
> **உகாரம் கூடியடி உருவாகி வந்ததடி**
> **மகார மாயையடி மலமது சொன்னேனே**
> **சிகார மூலமடி சிந்தித்துக் கொள்வாயே"[4]**

என்று அகப்பேய் சித்தர் அருமறையாகக் கூறியுள்ளதைக் காண முடிகிறது.

3. ஆனந்த நடனம்

வாசியறிந்து, யோகம் கூடி, உள்ளே வழி நடத்தி, மூலாதாரத்தில் கனலெழுப்பி, முறையே மூண்டெழுந்த சோதியை ஆதாரங்கள் வழியே செலுத்தி, புருவமத்தியாம், சுழுமுனையுள் நிறுத்தி ஞானசோதியைத் தோற்றுவிப்பர் ஞானியர். அதுபோழ்து பொறி புலன்களோடு மனமும் ஒடுங்க, ஞானம் ஞானக் கண்ணுள் பார்வையிடும், அதில் அண்ட சராசரங்கள் எல்லாம் அற்புதமாகத் தோன்றும். அந்த அற்புத நிலையை அப்படியே நிறுத்திச் சீவனை முத்திபுரக்க, நெற்றி நடுவிலிருந்து ஞான வாசியை உச்சிக்கு எழுப்புவர். அப்போது நெற்றி நடுவிற்கும் தலை உச்சிக்கும் இடைப்பட்ட வெளியில் வாசி நின்றும் எழுந்தும் வளைந்தும் நெளிந்தும் வலமும் இடமும் சுழன்றும் சோதியுள் சோதியாய் நடமிடும். ஈசன் உருவினை அதனுள் அணைப்பாக்கி அந்த ஆனந்த நடனம் கண்டு, அசைவற்று ஞானியர் நித்திய ஆனந்தமாக நிலைத்திருப்பர். இதுவே சித்தர்கள் கண்ட ஆனந்தக் கூத்தாகிறது. இதனை,

Koviloor Digital Library

"உள்ளத்துக் குள்ளேயே உணரவேண்டும்
உள்ளும் புறம்பையும் அறிய வேண்டும்
மெள்ளக் கனலை எழுப்ப வேண்டும்
வீதிப் புனலிலே செலுத்த வேண்டும்
கள்ளப் புனலைக் கடிந்துவிட்டு
கண்ணுக்கு மூக்குமேற் காண நின்று
தெள்ளு பரஞ்சோதி தன்னைத் தேடிச்
சீர்பாதம் கண்டோம் என்று ஆடுபாம்பே"[5]

எனப் பாம்பாட்டிச் சித்தர் பாடியுள்ளதை அறிய முடிகிறது.

4. சித்தர்கள் உத்தமர்கள்

திருநாவுக்கரசர் சித்தர்களின் நிலையினைப் பற்றிப்பாடும் போது,

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்
... ...
ஒருவனுக் காட்பட்ட வுத்த மர்க்கே"[6]

என அவர்களை உத்தமர்களாகப் போற்றிப் பாடியுள்ளார். சித்தர் சிவனருள் கைவரப் பெற்ற ஞானியாரானதாலும், சிவனிடம் சேர்தலாகிய முத்தியை எய்துபவராதலாலும் சித்தர் எனக் குறியாது. உத்தமர் எனக் குறித்தது மிகவும் சிறப்புடையதாகிறது. சித்தர் பெருமை மிக்கோரானதால் உத்தமர் என உரைத்தது பொருத்தமுடைத்தாகிறது. வானம் அசைந்து வீழ்ந்தாலும் மண்ணுலகம் நடுங்கி அழிந்தாலும் சிவனுக்கு ஆட்பட்ட உத்தமராகிய சித்தர் நிலைகுலையாது நிற்க வல்லவர் ஆவர் எனச் சித்தர் பெருமையைத் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். இப் பாடலில் 'ஒருவன்' என அவர் குறித்துள்ளதால் அநாதியாக நிற்கும் முழுமுதற் கடவுளாகிய சிவபரம்பொருளைக் குறித்துள்ளார் என அறியமுடிகிறது. உலகங்கள் தட்டழியும் காலத்திலும் அசையாமல் நிற்க வல்லவர் உத்தமராகிய சித்தர் என அவர் போற்றியுள்ளது இங்கு வெளிப்படுகிறது.

Koviloor Digital Library

5. பொய் ஒழுக்கத்தைக் கைவிட வேண்டும்

சித்தர்களுடைய சிறப்பியல்புகளைப் பாடியவர்களில் தாயுமானவரே மிகவும் சிறந்து விளங்குகின்றார். சித்தர்களுடைய அளப்பரிய பெருமைகளையும் ஆற்றல்களையும் இவரைப் போன்று பாடியவர் வேறு யாருமிலர். சித்தர்களுக்கென்றே 'சித்தர்கணம்' என்று தனியாகத் தலைப்பிட்டு விரிவாகவும் சிறப்பாகவும் பாடியுள்ளவர் தாயுமானவரே ஆவர். அன்றியும் அவர் தமது பாடல்களில் ஆங்காங்குச் சித்தர்களின் சிறப்புகளைக் குறிப்பிட்டும் பாடியுள்ளார். இத்தகைய சித்தர்களிடம் தாயுமானவர் மக்கள் பொய்யான ஒழுக்கத்தைக் கைவிட வேண்டும் என அவர் வேண்டுவதைக் காண முடிகிறது.

அறியாமையில் உழன்ற மக்களை அறிவியல் வழியில் ஆளாக்க முயன்ற சான்றோர்கள் ஒழுக்க நெறிகளை உருவாக்கி வைத்தனர். ஒழுக்க நெறியைப் பரப்பும் தொண்டு நெறி காலப் போக்கில் சமய நெறிகளாயின. அதனால் சமுதாயத்தில் சாதி, சமய, சடங்காசாரங்கள் மிகுந்தன. சமயப் பூசல்களும் தோன்றின. அவ்வேளையில் தத்துவக் கோளரிகளாய் நின்று, சமுதாயம் உய்ய, பொய் வழக்கைப் புலப்படுத்தி மெய்யுணர்வைப் புகட்டியவர்கள் சித்தர்கள் ஆவர். சித்தர்களின் மரபுவழி தொடர்ந்த வழக்கும் சொல்லும் மக்கள் வாழ்வாங்குவாழ வழிகாட்டியது. அவர்களின் அறிவியல் அறவுரைகள் சமயக் குப்பைகளைச் சாடி நின்றன; பொய்ம்மதங்களைப் புறக்கணித்தன,[6] நல்லறங்களை நிலைப்படுத்தின.

> **“முத்திசேரச் சித்திஇங்கு முன்னளிப்பேன் பாரெனச்**
> **சத்தியங்கள் சொல்லிஎங்கும் சாமிவேடம் பூண்டவர்**
> **நித்தியம் வயிறுவளர்க்க நீதிஞானம் பேசியே**
> **பத்தியாய்ப் பணம் பறித்துப் பாழ்நரகில் வீழ்வரே”[7]**

என வரும் சித்தர் சிவவாக்கியர் பாடல் வேடதாரிகளின் புரட்டினைச் சாடி, நல்லறத்தினையும் உண்மைத் தெய்வத்தினையும் உணர்த்துவதை அறிய முடிகிறது.

இவ்வகையிலேயே தாயுமானவர் மக்களிடம் பொய் ஒழுக்கம் நீங்கி மெய்யுணர்வு தோன்ற வேண்டும் எனச் சித்தர்

Koviloor Digital Library

கணத்திடம் வேண்டுகின்றார். ''பொய்யே மிக்கு விளங்கும் மக்களின் ஒழுக்கத்தினை என்னவென்று கூறுவது! அம்மக்களின் பொழுதுபோக்கு, நிலைக்காத பொய்யான உடலின் பொருட்டாய் உண்ண வேண்டிய உணவுக்காக அலைந்து திரிந்து இரந்து உண்ணுதல்; உண்டபின் கண்மூடி உறங்குதல் என்னும் நிலைகளிலேயே உள்ளது. இவை உயிருக்கு உறுதி பயக்கும் தவநெறி அன்று. கண்பார்வை இல்லாத குருடர்க்கும் வெளிப் படையாய்க் காணப்பட்டது இந்த ஒழுக்கமே ஆகிறது. மக்கள் இவ்வொழுக்கத்தைக் கைவிடுதல் எக்காலமோ! அதை உணரும் ஆற்றல் தனக்கில்லையே! கருமையுடைய மேகக் கூட்டம் குடை போன்ற நிழலைச் செய்திட எட்டு மலைகளுடன் செம்பொன் மேருவான பெரியமலையின் பக்கத்தும் யோக தண்டான கோலை எழுதிப் பெறற்கரிய வெற்றியின் பேரடையாளமாய்க் காட்டி மெய்யுணர்வு நன்கு விளங்கும் அட்டாங்கயோக நிலத் தில் வளர்கின்ற அரசர்களாகிய சித்தர்கணமே இம்மக்களுக்கு மெய்யுணர்வை ஊட்ட வேண்டும்''[8] எனத் தாயுமானவர் சித்தர்கணத்தில் வேண்டுவதை அறிய முடிகிறது.

6. நாயைவிட இழிந்தவனான அடியேனுக்குக் காட்சியளித்தல் வேண்டும்

இறையருள் பெறவிழையும் சமயச்சான்றோர்கள் தாங்கள் வேண்டும் அருளினைத் தமது நூல்களில் தன்னிரக்கப் பாடல் களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்கள். தன்னிரக்கம் என்பது தற்சிறுமை காட்டி, இச்சிறுமையில் சிக்குண்டு தவிக்கும் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்பதாகிறது.[9] காதலிலும் வீரத்திலும் தற்பெருமை பேசும் இலக்கிய மரபும் அருள் நூல்களில் தற்சிறுமை பேசும் இலக்கிய மரபும் தமிழிலக்கிய வரலாற்றில் பரக்கக் காணப்படுகின்றன. அருளாளர்கள் தம் நூல்களில் தற்சிறுமை பேசினாலும் மிகுதியாகத் தம்மைச் சிறுமைப்படுத்திப் பேசியவர்கள் மாணிக்கவாசகரும் அவரைக் குருவாக ஏற்றுக் கொண்ட இராமலிங்க வள்ளலாருமே ஆவர்.[10]

Koviloor Digital Library

மாணிக்கவாசகர்,

“கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை”[11]

என்றும்,

“கடையவ னேனைக் கருணையினால்”[12]

என்றும்,

“ஊர்நாயிற் கடையானேன்”[13]

என்றும்,

“கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை”[14]

என்றும் பல பாடல்களிலும் தன்னிரக்கத்தோடு இறையருளை வேண்டலைக் காணமுடிகிறது.

தன்னிரக்கத்தின் சிறப்புத் தன்மை தன்னைத் தாழ்வுபடுத்தி வேண்டலாகிறது. உண்மைத் துறவினை மேற்கொண்டொழுகு பவர்கள் துறவினை மேற்கொள்வதற்கு முன்னர் உலகியலில் ஈடுபட்டுப் பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை கொண்டு ஒழுகியவர் ஆவர். பின்னர் இவர்கள் துறவினை மேற்கொண்டபோது தமது முன்னைய வாழ்க்கை நிலையினை உணர்த்தும் பொருட்டுத் தம்மை தாழ்த்திக் கூறுதல் மரபாக இருந்து வருகிறது.

தாயுமானவர் உலகியல் வாழ்வில் ஈடுபட்டவர் என்றாலும் இத்தகைய பற்றுகளில் அதிகமாக உழன்றவர் அல்லர். உலக வாழ்க்கையிலுள்ள அந்நிலைகளைத் தாயுமானவர் உணர்ந்தவர். ஆதலின், அந்நிலைகளை மக்களுக்காகத் தம்மீது கொண்டு, தம்மை அறிவற்றவனாகவும் நாயைவிட இழிந்த வனாகவும் பாடியுள்ளார். மேலும் இறைவன் ‘தான்’ என்ற ஆணவத்தினருக்கு அப்பாற்பட்டவன்; அரிதானவன். அகந்தை நீங்கிய நல்லடியார்களுக்கும் அன்பர்களுக்கும் எளிதானவன். அதனால் சமயச் சான்றோர்கள் தம்மைத் தாழ்வுப்படுத்தியே இறையருளை வேண்டி நிற்கின்றனர்.

Koviloor Digital Library

வேதாந்த சித்தாந்த உண்மைகளைச் சமரசமாய் நினைத்தலால் நன்னிலை பெற்ற நல்ஞானச்சித்தர்களே! உலகத்திலுள்ள ஆண்களிலும் பெண்களிலும் தன்னைப் போன்ற அறிவற்றவர் யாருமிலர். வானில் சுழல்கின்ற காற்றாடியைப் போன்று புலன்களில் விரைவாய் ஓடி வருந்தித்திரியும் உள்ளத்தை அங்ஙனம் செல்லாமல் தடுத்து ஒருகணப்பொழுதேனும் திருவருளை யான் காணவில்லை. அதுவே அல்லாமலும் மௌன நிலையுடைவனாகிக் கண்களை மூடி இயல்பாய் ஓடும் மூச்சைத் தடுத்துக் கலைகளையுடைய மதியைத் தொடுமாறு மூலாக்கினியை எழுப்புவதற்குரிய எண்ணத்தையும் கொண்டுள்ளேன். இந்நாள் வரையிலும் யான் கற்றதையும் கேட்டதையும் அவை செல்லும் வழியிலேயே விட்டுவிட்டேன். அதனால் பொய்யான உலக வாழ்க்கையை உடையவனானேன். நாயைவிட இழிந்தவனான தான் இனிமேலும் வீணான செயல்களில் புகுந்து திரியாமல் மலைக்குறி போன்று வெளிப்படக் காட்சி அளித்துக் காத்தருள வேண்டும்[15] எனத் தாயுமானவர் வேண்டுவதை அறியமுடிகிறது.

தாயுமானவருக்குப் பின் தோன்றிய இராமலிங்க வள்ளலாரும்,

"நன்மைஎலாம் தீமைஎனக் குரைத்தோடித் திரியும்
நாய்க்குலத்தில் கடையான நாயடினேன் இயற்றும்
புன்மைஎலாம் பெருமைஎனப் பொறுத்தருளிப் புலையேன்
பொய்யுரைமெய் உரையாகப் புரிந்து மகிழ்ந்தருளித்
தன்மைஎலாம் உடையபெருந் தவிசேற்றி முடியும்
தரித்தருளி ஐந்தொழில்செய் சதுர்அளித்தபதியே
இன்மைஎலாம் தவிர்ந்தடியார் இன்பமுறப் பொதுவில்
இலங்குநடத் தரசேஎன் இசையும் அணிந்தருளே"[16]

எனத் தம்மைத் தாழ்த்திக் கொண்டு திருவருள் வேண்டுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும் அவர் தம்மை,

"விழுக்குலத்தார் அருவருக்கும் புழுக்குலத்தில் கடையேன்"[17]

எனப் புழுவினும் கீழானவராகத் தாழ்த்திப் பாடியுள்ளதும் அறியத்தக்கது.

Koviloor Digital Library

7. யான் பெற்ற கல்வி முக்தி தருமோ!

தாயுமானவர் தமிழ்மொழியிலுள்ள இலக்கிய, இலக்கணங்கள், வடமொழியிலுள்ள வேத - வேதாந்தங்கள் என அனைத்தையும் கற்றவர் என்பது அவர்தம் பாடல்கள் வாயிலாக விளங்குகிறது. தாயுமானவரின் வடமொழிப் புலமைத்திறத்தினை அவருடைய சீடர் அருளையர்,

"வடமொழி இயற்கையின் மகிமையை உணர்ந்து"[18]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

தாயுமானவர் திருமந்திர, தேவார, திருவாசக, திருப்புகழ்ப் பாடல்களையெல்லாம் கற்றுத் தெளிந்தவர் ஆவார். இதனை,

"... ... ... இப்போ தேதான்
துன்றுமனக் கவலைகெடப் புலைநா யேனைத்
தொழும்புகொளச் சீகாழித் துரையே தூது
சென்றிடவே பொருளைவைத்த நாவ லோய் நம்
சிவனப்பா என்றஅருட் செல்வத் தேவே"[19]

என்றும்,

"தேவர்தொழும் வாதவூர்த் தேவே என்பேன்
திருமூலத் தேவேஇச் செகத்தோர் முத்திக்
காவலுறச் சிவஎன்வாக் குடனே வந்த
அரசே சும்மாஇருந்துன் அருளைச் சாரப்
பூவுலகில் வளர்அருண கிரியே மற்றைப்
புண்ணியர்கா ளோஎன்பேன் புரையொன் றில்லா
ஓவியம்போல் அசைவறவும் தானே நிற்பேன்
ஓதரிய துயர்கெடவே உரைக்கும் முன்னே"[20]

என்றும் பாடியுள்ளதால் அறியமுடிகிறது.

தாயுமானவர் மௌன குருவிடம் தீட்சை பெற்ற பின்னர் சிவஞான சித்தியார், சிவஞான போதம் எனச் சாத்திர நூல்களையெல்லாம் கற்றுத் தெளிந்தார். என்றாலும் தாம் கற்ற கல்வியை அவர் பெரிதாக மதிக்கவில்லை. அக்கல்வியால் இறைவனை

Koviloor Digital Library

அடையமுடியாது என்பதே அவர் கருத்தாகிறது. நூலறிவுக்கும் மேலான மெய்யறிவே, ஞான நெறியே இறையருளைப் பெற உதவும் என்பதே அவர்தம் உறுதியாகிறது.

''அறிவு என்பது ஏட்டில் பிறந்து பின் மனிதர் மதியில் புகுவதன்று. மாறாக மனிதர் மதியில் பிறந்து பின் ஏட்டில் ஏறுவதாகிறது. ஓதுவித்து உணர்ந்தவர்களை விட ஓதுவிக்காமல் உணர்ந்தவர்களே மெய்ப்பொருளை அணுகும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர்[21] என்பது சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானத்தின் கூற்றாகிறது. இக்கூற்று, தாயுமானவருக்கு மிகப்பொருத்தமுடைத்தாகிறது.

எவ்வளவோ இலக்கண, இலக்கிய, சமய, சாத்திர நூல்களையெல்லாம் அவர் கற்றிருந்தாலும் தம்மைக் கல்லாத வராகவே கூறுகின்றார். பல்வகை வண்ணமலர்களாலான மாலைகள் இருக்க, இறைவன் பாமாலைக்குத்தான் இரங்குவான் என்று இறைவுணர்வு பெற்றோர் கூறியதைத் தலைமேற் கொண்டு கல்லாத தாமும் கண்ணீர் கண்களினின்றும் உகப் பாமாலைகளைப் பாடியதாகக் கூறியுள்ளார். இதனை,

''பன்மாலைத் திரளிருக்க தமையு ணர்ந்தோர்
பாமாலைக்கே நீதான் பட்சமென்று
நன்மாலை யாலெடுத்துச் சொன்னார் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்''[22]

எனத் தாயுமானவர் பாடியுள்ளதால் அறிய முடிகின்றது.

இவ்விதம் தம்மைக் கல்லாதவர் எனக் கூறிக் கொள்ளும் தாயுமானவர், கல்லாத பேர்களே நல்லவர்கள். கல்வி கற்றும் ஞானம் பெற்றிராத தன் ஊழ்வினைப் பலனை என்னென்று கூறுவேன்! வீடுபேற்றை அளிக்கும் மெய்யுணர்வு நீதிகளை நல்லவர் எடுத்துக் கூறினால், அந்தவுணர்வைவிடச் செய்யும் வினையே முதன்மையானது என்று நிலைநாட்டுவேன்! வேறொருவன் வினையே முதன்மையானது என்று பலவாறு

Koviloor Digital Library

கூறுவானாயின் தொன்றுதொட்டு வருகின்ற ஞானமே முக்கியமானது எனக் கூறுவேன்! வடமொழியில் வல்லவன் ஒருவன் வந்து வாதிட்டால், அவன் உரைப்பவை திராவிடமான தமிழ்மொழியிலிருந்து வந்தவை என்று வாதிடுவேன்! தமிழில் வல்ல அறிஞர் வரின் வடமொழியிலிருந்து சில சொற்களைக் கூறுவேன்! இங்ஙனமாக, எவரையும் முறைப்படி வெல்லாமல், அவர்களை மயக்கி ஓட்டிவிடும்படியாய்த் தனக்கு வாய்த்த கல்வியால் பயன் ஒன்றும் இல்லை! அத்தகைய கல்வி தனக்கு வீடுபேற்றினை வழங்காது[23] எனத் தாயுமானவர் சித்தர்கணத்தில் கூறுவதை அறிய முடிகிறது.

மேலும், அவர்,

"எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்என்
இதயமும் ஒடுங்கவில்லை
யானெனும் அகந்தைதான் எள்ளளவு மாறவில்லை"[24]

என்று கவலையுறுகின்றார். அன்றியும்,

"பாகத்தி னாற்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லைவேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையு மில்லை"[25]

என்று அவர் புலம்புவதைக் காண முடிகிறது.

கருப்பஞ் சாற்றின் இனிப்பினைப் போலவும், முக்கனி களின் சுவை போலவும் நாவில் நீர் ஊர்வதற்குக் காரணமான கற்கண்டைப் போலவும் தாம் பாடிய பாடல்கள் இறைவனால் அடியெடுத்துத் தந்து பாடியவையல்ல. அவை பலகாலும் அழுது அழுது பேய்போல் தமது உள்ளத்தில் எழுந்த எண்ணங் களைக் கொண்டு அறிவு, அறியாமை என்னும் இரண்டும் பொருந்தப் பாடப்பட்டவையாகின்றன. அங்ஙனம் தம்மால் பாடப்பட்ட தமிழ் மாலைக்கு மிக்க அன்பு அதிகப் பட்டிருத் தலால் இவ்வுலகமானது இவற்றிற்குக் குற்றத்தைக் கூறாது. அதுபோக, முத்தி, சித்திகள் எல்லாம் பொருந்திய நெறியையே கற்ற சித்தர்களே! இத்தமிழ் மாலையைப் பாடியவர் யாரென்று

Koviloor Digital Library

இவ்வுலகத்தவர் வினவுவர். அப்போது அதற்கு விடையாகச் ''சிறிது தோய்ந்த குணசாந்தன் பாடினான்'' என்று கூற அதைத் தாம்கேட்டு மகிழ்வது எந்நாளோ![26] எனத் தாயுமானவர் சித்தர் கணத்திடம் வேண்டுவதை அறியமுடிகிறது.

8. இப்பிறவியிலேயே முத்தியடைதல் வேண்டும்

பிறவியைப் பற்றிச் சான்றோர்களாகிய அருளாளர்கள் பேசுவதும் பாடுவதும் பண்டு தொட்டு இயல்பாகவே இருந்து வருகின்றது. திருவள்ளுவர் 'பிறவிப் பெருங்கடல்' எனப் பிறவியைக் கடலாகக் கூறியுள்ளார். தாயுமானவர் பிறவியைக் கடலாகக் கூறுவதோடு அமையாது பிறவி பற்றி விரிவாகவும் பாடியுள்ளார்.

உலகத்தில் மனமானது ஒவ்வொரு கணந்தோறும் ஒரு பொருளைப் பற்றுதலும் உடனே மறத்தலுமாகிய நிலைகளைக் கொள்கின்றது. அம்மனத்தின் நிலைகளை வைத்து இறப்பையும் பிறப்பையும் தாயுமானவர் விளக்குகின்றார்.

ஆன்மாக்கள் மறக்கின்ற தன்மை இறத்தலுக்கு ஒப்பா கிறது. மனமானது ஒரு பொருளினிடத்துப் பற்றுந் தன்மை பிறந்தவர்க்கு ஒப்பாகிறது. பேய்த்தன்மையுடைய இப்பிறவிகள் இறக்கின்ற அளவிற்கு எல்லையே இல்லை எனத் தாயுமானவர் கூறுகின்றார்.

மனத்தின்வழி நிகழ்கின்ற வினைகளே பிறவிக்குக் காரணம் என்பதைத் தாயுமானவர்,

''எண்ணிய எண்ண மெல்லாம்
இறப்புமேற் பிறப்புக் காசை
பண்ணிஎன் னறிவை யெல்லாம்
பாழாக்கி எனைப்பா ழாக்குந்
திண்ணிய வினையைக் கொன்று
சிறியனை உய்யக் கொண்டால்
புண்ணிய நினக்கே யன்றோ
பூரணா னந்த வாழ்வே''[27]

எனப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

மானிடர் கடல் அலைகளைப் போல ஒன்றன்பின் ஒன்றாகப் பல வினைகளைச் செய்து கொண்டே வருகின்றனர். அலை அலையாகப் பெருகி வரும் அவ்வினைகள் அவனை அலைக்கழிக்கின்றன. அலைகள் எழும்படியான அக்கடலில் புயற்காற்றும் வீசி, அத்தோணியைக் கவிழ்க்க முயல்கிறது. மடந்தையர் மயலாகிய சுழற்காற்று அமைதியான வாழ்க் கையைக் கவிழ்க்கும் சூறாவளியாகிறது. சீரான காற்றில் நேராகச் சென்ற அச்சிற்றறிவுத் தோணி திசை திரும்பிச் சுழல்கின்றது. அத்தனை துன்பங்கள் போதாவென்பன போல் ஆசையாகிய காட்டாறும் வான்நதி சுரத்தல் போல் ஓயாது சுரந்து வாழ்வுக் கடலில் கலந்து கலக்குகின்றது. அந்நிலையில் தோணி அலைகின்றது.

அப்போது தோணியைச் செலுத்தும் மூதறிவும் தன்னைக் கைவிட, அதனால் மனிதன் மதிமயங்கி வாடுகின்றான். உதவி யற்ற நிலையில் கடற்கொள்ளைக்காரராகிய காலன் அத்தோணி யைக் கவிழ்த்து அழிக்க வருவான் என்னும் அச்சத்தால் கண்ணீர் வடித்து ஏங்குகின்றான். முத்தியாகிய முழு நிலைக்கரையை அடைய கருணைபுரிய வேண்டும் என்று இறைவனை வேண்டு கின்றான்[28] எனத் தாயுமானவர் பிறவித்துயரினை விளக்கிப் பாடியுள்ளார்.

இவ்விதம் பிறவித்துயரினை விளக்கிப் பாடிய தாயுமானவர்,

> **"எண்ணரிய பிறவிதனின் மானுடப்**
> **பிறவிதான் யாதினும் அரித ரிதுகாண்"[29]**

என மானிடப் பிறவியைப் போற்றியும் பாடியுள்ளார். அவர், எண்ணுவதற்கரிய அளவினையுடைய பிறவிகளுள், மனிதப் பிறவியே மற்றெல்லாப் பிறவிகளிலும் மிகவும் உயர்ந்தது என்கின்றார்.

எடுக்கும் பிறவிகள் மேலுலகத்திலோ, கீழுலகத்திலோ அல்லது இப்பூவுலகத்திலோ அமைவதற்கு வாய்ப்புண்டு. மேலுலகத்தில் இன்பமே நுகர்ந்து வரும் காரணத்தால், கடவுள்

Koviloor Digital Library

நினைவு தோன்றுதல் அரிது. கீழுலகத்தில் துன்பமே நுகர்ந்து வருங் காரணத்தால் கடவுளின் அருள்தன்மை இனிது விளங்காது. ஆகையால், இரண்டுமுடைய இந்நிலவுலகத்தில் பிறக்கும் மானிடப் பிறவியே கடவுளை உணர்ந்து வழிபடுவதற்கேற்ற பிறவியாகின்றது. அதனால்தான் தாயுமானவர் இம்மானிடப் பிறவியை அரிது அரிது என உயர்வாகக் கூறியுள்ளார். இம் மானிடப் பிறவி, ஐம்பொறியறிவோடு பகுத்தறிவாகிய மன அறிவு வாய்க்கப் பெற்றதால் இப்பிறவி மிகவும் உயர்ந்தது என அவர் நவின்றுள்ளார். இவ்விதமே அருணகிரி நாதரும், இம்மனிதப் பிறவியை,

''உவகை தருகலை பலவுணர் பிறவி''[30]

என்கின்றார்.

மனிதப் பிறவியானது ஐம்பொறி அறிவினோடு பகுத்தறி வாகிய மன அறிவும் வாய்க்கப் பெற்றதால், மகிழ்ச்சியைத் தரக் கூடிய கலைகள் பலவற்றை உணர்வதற்கேற்ற வாய்ப்புடைய பிறவி என அருணகிரிநாதர் கூறுவதை அறிய முடிகிறது. உவகை தரும் கலைகள் என அவர் கூறுவதில் யோகக்கலை முதன்மை யானது என்பது இங்குப் புலனாகிறது.

சித்தர் என்போர் முத்தியை நோக்கித் தவம் இருப்போர் ஆவர். முத்தி அடையும் வரை உடல் இருக்க வேண்டுமாதலால் பல பிறவிகள் எடுப்பதற்கு மாறாக இந்த ஒரு பிறவியிலேயே காயசித்தி பெற்று முத்திக்கு உரியவராதல் வேண்டும் என்பது தாயுமானவரின் கருத்தாகிறது. இதனை,

''தேகம் யாதேனு மொருசித்தி பெறச்சீவன் முத்தி
யாகுநெறி நல்லநெறி ஐயா பராபரமே''[30]

என்ற அவர்தம் கண்ணியால் அறியமுடிகிறது. இக்கண்ணியில் யாதேனுமொரு சித்தி என்றது மூவகைச் சித்திகளுள் ஒன்றா கிறது. இம்மூவகைச் சித்திகளான உருவசித்தி, அருவசித்தி, அருவுருவசித்தி ஆகின்றன. இவற்றைத் தாயுமானவர்,

''முத்தியிலுந் தேகமிசை மூவிதமாஞ்சித்தி பெற்றோர்
எத்தனை பேரென் றுரைப்ப தெந்தாய் பராபரமே''[31]

Koviloor Digital Library

எனப் பாடியுள்ளார். சித்தியால் சிவத்தின் பேரருள் பதியப் பெற்ற வரின் திருமேனி கர்ப்பூர தீபம் போல் விளங்கும் என்பதை,

"சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தார் உடல்தீபம்
வைத்த கர்ப்பூரம்போல் வயங்கும் பராபரமே"[32]

எனத் தாயுமானவர் பாடியுள்ளார். எனவே இப்பிறவியிலேயே முத்தி அடைவது என்பது அவர்தம் தலையாயக் கொள்கை யாகிறது. அதனால்தான்,

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ"[33]

என அவர் கவலையுறுகின்றார்.

உயிரானது ஒருமுறை மனிதப்பிறப்பு எடுத்தால், அதன் அடுத்த பிறவியும் மனிதப் பிறவியாய் இருக்கவேண்டும் என்னும் நியதியோ கட்டாயமோ இல்லை. அடுத்த பிறவி இழிந்த பிறவியாய் இருந்து விடுவதுமுண்டு. இம்மனிதப் பிறவியே பிறவி ஒழிப்பதற்கேற்ற பிறவியாகிறது. இவற்றை யெல்லாம் மனத்திற்கொண்டே தாயுமானவர், இம்மானிடர் பிறவி இல்லையெனில் வேறு எப்பிறவி வாய்க்குமோ! என ஏக்கம் உறுகின்றார். அரிய இம்மனிதப் பிறவியிலேயே பிறவி யினை ஒழித்துவிடவேண்டும் என்பது அவர்தம் பெருவிருப்ப மாகிறது.[34]

தாயுமானவர், இவ்வுலகில் தான் வாழ்கின்றபோதே, திருவருளான வானவட்டத்தில் நின்று, நிலைத்துப் பேரின்ப மழையைப் பொழிகின்ற மேகத்துடன் சேர்ந்து, தன் அறிவானது தன்வயம் இழந்து அதன்வயம் ஆகுமாறு செய்வது நன்மை தருவதாகிறது. இந்நிலையில் அழுந்தும் வரைக்கும், உயிர் தங்கும் நிலைக்களமாய் உள்ள உடல் ஆடி வரம் கூத்து வகை களுள் ஒன்றான பவுரிக் கூத்து கலைந்து போகாது, கௌரியான குண்டலி சக்தி என்ற அம்மையின் திருவருளால் அறிவுப் பெருவெளியில் நிலை பெற்றிருக்கின்ற சந்திரனிடத்துள்ள அமிர்தமானது இடையறாது பெய்வதற்குத் திருவருள் புரிய வேண்டும் எனத் தாயுமானவர் சித்தர் கணத்திடம் வேண்டுவதை அறியமுடிகிறது. மேலும் அவர்,

Koviloor Digital Library

"சட்டையொத்த இவ்வுடலைத் தள்ளுமுன்னே நான்சகச
நிட்டையைப்பெற் றையா நிருவிகற்பங் காண்பேனோ"[36]

என்றும்,

"ஊனிருந்த காயம் உடனிருப்ப எந்தை நின்பால்
வானிருந்த தென்னவுநான் வந்திருக்கக் காண்பேனோ"[37]

என்றும், ஆகாதோ என் கண்ணியில் இறைவனிடம் வேண்டுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

தாயுமானவர் சிறந்த சித்தர். சித்தராகிய அவரே சித்தர்களுடைய அளப்பரிய ஆற்றல்களையும் வியத்தகு செயல்களையும் சிறப்பியல்புகளையும் எடுத்துரைத்துப் பாடியவராதல்; சித்தர்களைப் பற்றிப் பாடுவதற்கென்றே சித்தர்கணம் என்ற தலைப்பினைத் தேர்ந்து வித்தகச் சித்தர் கணம் என ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் போற்றிப் பாடியதோடு மட்டுமல்லாமல் வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் தமது பாடல்களில் பிறவிடங்களிலும் சித்தர்களைப் போற்றித் தாயுமானவர் பாடியிருத்தல், "பொய்யே மிக்கு விளங்கும் மக்களின் பொழுதுபோக்கு, பொய்யான உடலின் பொருட்டாய் உண்ணவேண்டிய உணவுக்காக அலைந்து திரிந்து இரந்து உண்ணுதல், உண்டபின் கண்மூடி உறங்குதல், ஆகிய இவ்வொழுக்கம் உயிருக்கு உறுதி பயப்பதன்று. எட்டுமலைகளுடன் செம்பொன் மேருவான பெரியமலையின் பக்கத்தும் யோக தண்டான கோலை எழுதிப் பெறற்கரிய வெற்றியின் பேரடையாளமாய்க்காட்டி மெய்யுணர்வு நன்கு விளங்கும் அட்டாங்க யோக நிலத்தில் வளர்கின்ற அரசர்களாகிய சித்தர் கணமே மக்களுக்கு மெய்யுணர்வின் ஊட்ட வேண்டும்" எனச் சித்தர் கணத்திடம் வேண்டுதல்; "பொய்யான உலக வாழ்க்கையையுடைய நாயைவிட இழிந்தவனான தான் இனிமேலும் வீணான செயல்களில் புகுந்து திரியாமல் மலைக் குறி போன்று வெளிப்படக் காட்சி அளித்துக் காத்தருள வேண்டும்" எனச் சித்தர் கணத்திடம் வேண்டுதல். தாயுமானவர் தமிழ், வடமொழி ஆகிய மொழிகளிலுள்ள இலக்கிய இலக்கணங்களை

Koviloor Digital Library

யெல்லாம் தெளிவுபெறக் கற்றிருந்தாலும் தம்மைக் கல்லாத வராகவே கூறுதல்; கல்லாத பேர்களே நல்லவர்கள் என்றால், தாம் கற்ற நூற்கல்வியால் தமக்குச் சிறிதும் பயன் இல்லை; மெய்யுணர்வுக் கல்வியே பயனளிக்கக் கூடியது; அத்தகைய கல்வியைத் தமக்களிக்க வேண்டும். தாம் பாடிய பாடல்கள் பற்றி எவரேனும் யார் பாடியது என்று வினவினால் ''சிறிது தோய்ந்த குணசாந்தன் பாடியது'' என்று கூறவேண்டும் எனச் சித்தர் கணத்திடம் வேண்டுதல்; இவ்வுலகில்தான் வாழும்போதே, திருவருளான வானவட்டத்தில் நின்று நிலைத்துப் பேரின்ப மழையைப் பொழிகின்ற மேகத்துடன் சேர்ந்து, தன் அறிவானது தன்வயம் இழந்து அதன் வயம் ஆகுமாறு செய்து, உயிர்தங்கும் நிலைக்களமாயுள்ள உடல் ஆடிவரும் கூத்து வகைகளும் ஒன்றான பவுரிக்கூத்து கலைந்து போகாது, கௌரியான குண்டலி சக்தி என்ற அம்மையின் திருவருளால் அறிவுப் பெருவெளியில் சந்திரனிடத்துள்ள அமிர்தமானது இடையறாது பெய்வதற்குத் திருவருள் புரிய வேண்டும்'' எனத் தாயுமானவர் சித்தர்கணத் திடம் வேண்டுதல் ஆகிய அனைத்தும் இத்தலைப்பில் கூறப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

குறிப்புகள்

1. இளங்கம்பன், டாக்டர், தத்துவக் குயில்கள், பக். 1-2.
2. விமலானந்தம், பேராசிரியர் மது.ச., தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 306.
3. தெய்வ நாயகம், பேராசிரியர் சி.கோ., சித்தர் சிந்தனைகள், பக். 27-28.
4. அகப்பேய் சித்தர் பாடல்கள், 79.
5. பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், 115.
6. சித்தர் சிந்தனைகள், ப. 10.
7. சிவவாக்கியர், பா. 504.
8. தாயுமா. சித்தர்கணம், பா.5.
9. பழனியம்மாள், டாக்டர் ப., தமிழில் சதக இலக்கியங்கள், ப. 190.
10. மாணிக்கம், டாக்டர் வ.சுப., தற்சிறுமை (கட்டுரை) சிந்தனைக் களங்கள், (நூல்) ப. 324.
11. திருவாசகம், கண்ட பத்து, பா. 4.
12. மேற்படி, நீத்தல் விண்ணப்பம், பா.1.
13. மேற்படி, திருச்சதகம், பா. 56.
14. மேற்படி,திருவம்மானை, பா. 5.
15. தாயுமா. சித்தர்கணம், பா.7.
16. திருவருட்பா, அருள்விளக்க மாலை, பா. 62.
17. மேற்படி, அருட்பிரகாசமாலை, பா. 63.
18. அருள்வாக்கியர் அகவல், அடி, 145.
19. தாயுமா. ஆகார புவனம், பா. 30.
20. மேற்படி, 31.

Koviloor Digital Library

21. சிவஞானம், சிலம்புச் செல்வர் ம.பொ., வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப. 53.
22. தாயுமா. பன்மாலை, ப. 1.
23. தாயுமா. சித்தர் கணம், பா. 10.
24. தாயுமா. ஆனந்தமானபரம், பா. 9.
25. மேற்படி, சச்சிதானந்த சிவம், பா. 3.
26. தாயுமா. சித்தர்கணம், பா. 8.
27. மேற்படி, கற்புறு சிந்தை, பா. 5.
28. மேற்படி, தேசோமயானந்தம், பா. 2.
29. திருப்புகழ், 189.
30. தாயுமா. பராபரக்கண்ணி, 357.
31. மேற்படி, 209.
32. மேற்படி, 245.
33. மேற்படி, சித்தர் கணம், பா. 4, அடி;1.
34. செந்துறை முத்து, புலவர், தாயுமானவரும் அருணகிரி நாதரும், ப. 106.
35. தாயுமா. சித்தர்கணம், பா.4.
36. மேற்படி, ஆகாதோ என்கண்ணி, 32.
37. மேற்படி, 35.

Koviloor Digital Library

நிறைவுரை

''தாயுமானவரின் சித்தர்கணம் - ஒரு பார்வை'' என்ற தலைப்பில் அமைந்துள்ள இந்நூலில், தாயுமானவரின் வாழ்க்கை வரலாறு, அவர் பாடியுள்ள பாடல்கள், சித்தர்கள் பற்றித் தொல்காப்பியர் முதல் இக்கால அறிஞர்கள் வரை தெரிவித்துள்ள கருத்துகள், அவர்களது பொதுவான சிறப் பியல்புகள், சித்தர் கணத்தில் தாயுமானவர் பாடியுள்ள சித்தர் களின் அளப்பரிய ஆற்றல்கள், குறிப்பாக அவர்களது அட்டமா சித்திகள், அவர்களின் வியத்தகு செயல்கள், சிவராசயோகச் செல்வராயும் சிவராசச் சிங்கங்களாகவும் அவர்கள் விளங்கும் பான்மை, தாயுமானவர் சித்தர் கணத்திடம் வேண்டுவன எனப் பலவும் இந்நூலில் நோக்கப் பட்டுள்ளன.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், பட்டினத்தார், அருணகிரி நாதர் எனத் தமிழ்நாட்டில் வழிவழியாகச் சமயச் சான்றோர்கள் தோன்றியுள்ளனர். அச்சான்றோர்கள் வரிசையில் தோன்றியவர் தாயுமானவர். சோழ வளநாட்டில் திருமறைக்காட்டில் வேளாளர் குலத்தில் கேடிலியப்பப் பிள்ளைக்கும் கஜவல்லி யம்மையாருக்கும் அவர் மகவாகப் பிறந்தார். திருச்சிராப் பள்ளியில் கோயில் கொண்டுள்ள தாயுமான சுவாமிகள் திருவருளால் அவர் தோன்றியதால் அவ்விறைவன் திருநாமமே அவருக்குப் பெயராகச் சூட்டப்பட்டது. தாயுமானவர் இளமையிலேயே தமிழ், வடமொழி ஆகிய இருமொழி களிலும் பெரும்புலமை பெற்றார்; தோத்திரப் பாடல்கள்,

Koviloor Digital Library

சாத்திரங்கள் என அனைத்தையும் கற்றுணர்ந்தார். தாம் கற்றுள்ள நூற்கல்வியால் இறைவனைக் காணமுடியாது. நூலறிவுக்கும் மேலான மெய்யறிவினால் ஞானநெறியால் மட்டுமே இறைவனைக் கண்டுதெளிய முடியும் என உணர்ந்தார். விசயரங்க சொக்கநாத நாயக்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணிபுரிந்து வந்தாலும் அவரது உள்ளம் ஆன்ம ஈடேற்றத்தையே நாடிச் சென்றது.

மௌனகுருவைச் சந்தித்து அக்கணமே தமக்குத் தீட்சை அளிக்குமாறு வேண்டினார். அருணந்தி சிவாச்சாரியாரது சிவஞான சித்தியாரே இறைவனை அடையும் வழியைக் கூறும் சிறந்த சுத்தாத்துவைத சைவ சித்தாந்தம் என மௌனகுரு கூறினார். அதில் நிறைவடையாத தாயுமானவர் மௌன குருவிடம் மீண்டும் தமக்குத் தீட்சை அளிக்குமாறு வேண்டினார். சிலகாலம் இல்லற வாழ்க்கையில் இருந்துவிட்டுப் பின்னர் வருமாறு மௌன குரு கூறினார். சித்தாந்த நூல்களைக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என்ற நிலைகளிலேயே தாயுமானவர் இருந்து வந்தார். இராமேசுவரம் தரிசனத்திற்காகப் புறப்பட்டுச் சென்றார். வழியில் விராலி மலையில் சித்தர் கணத்தினைச் சந்தித்து சில நாட்கள் அங்குத் தங்கியிருந்து அவர்களிடம் அளவளாவினார். பின்னர் இராமேசுவரம் வழிபாட்டினை முடித்துக் கொண்டு உறவினர் விருப்பத்திற்கிணங்கத் திருமறைக்காட்டிற்கு வந்து திருமணம் புரிந்து கொண்டார். சிலகாலம் இல்லறத்தில் இருந்து விட்டுப் பின்னர்துறவினை மேற்கொண்டு மௌனகுருவினைச் சந்தித்துத் தீட்சை அளிக்குமாறு வேண்டினார். அவர், 'சும்மா இரு' என்று திருவாய் மலர்ந்தருளித் திருவடி தீட்சை அளித்தார். கூடுதல், பிரிதல் அற்று, முக்குணம் அற்ற, நினைத்தலும் உணர்தலுமின்றி ஐம்பூத முதலியன கடந்து, காட்சி உணர்வற்று, வாட்டம் ஏதுமின்றி, மனம் ஒடுங்கி முழுமுதல் பேரின்பக் கடலில் திளைத்துச் சிவமயமாய் இருக்கும் நிலையே சும்மா இருத்தல்

Koviloor Digital Library

எனத் தாயுமானவர் தெளிந்து அவ்வாறே இருந்து வந்தார். மௌன குரு மடத்திற்குச் சில காலம் தலைவராய் விளங்கினார். திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை எனப் பல தலங்களை வழிபட்டுவிட்டு இராமநாதபுரம் சென்றார். அந்நகரின் கீழ்பாலுள்ள காட்டூரணி என்ற தனியிடத்தில் நிட்டை கூறியிருந்து சமாதியானார். அவரது காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

தாயுமானவர், உலக வாழ்வியல் நிலைகளையும் தமது இறையனுபவங்களையும் இறைவனின் அளப்பரிய பெருமை களையும் சித்தர்களின் சிறப்பியல்புகளையும் ஞான் நெறியை அடைதலே பிறவி எடுத்ததன் பயன் என்பதையும் தமது பாடல்களில் பாடியுள்ளார். அவரது பாடல்கள் இன்று 1454 கிடைத்துள்ளன. அவை 56 தலைப்புகளில் விளங்குகின்றன. எனப் பலவும் தாயுமானவர் வாழ்க்கை வரலாறு, அவரது படைப்புகள் வாயிலாக இந்நூலில் அறிய முடிகிறது.

தொல்காப்பியர் சித்தரை 'அறிவர்' எனக் குறிப்பிட்டி ருத்தல், நச்சினார்க்கினியர் அகத்தியரையும் திருமூலரையும் சித்தர்கணத்தலைவர்களாகக் கூறுதல், சாத்திரங்களைச் சுட்டெரித்து அட்டாங்கயோக வழி நின்று ஞானம் பெற்றவரே சித்தர் ஆவர் எனத் திருமூலர் கூறுதல், சித்தர்களை ஓர் அடியார் இனமாகக் கருதியே சைவசமயக் குரவர்கள் பாடியிருத்தல், சிவபெருமானும் முருகப் பெருமானும் பெருஞ்சித்தர்களாக விளங்கிச் சித்துகள் பல புரிந்திருத்தல், சிவநெறியைச் சார்ந் தொழுகியவர்களே சித்தர்கள் என்றாலும் சமயங்களில் கூறியுள்ள சமய விதிகளை விலக்கிவிட்டு, ஆத்மஞானம் ஒன்றையே கடைப்பிடித்தவர்களாக அவர்கள் விளங்குதல், சித்தர்கள் உடம்பினைப் பொய் என்று கூறுவதற்கு மாறாக மெய் என்று கூறி அதற்குரிய பொருள்கண்டு தெளிந்து, அட்டமா சித்திகளை அடைந்தவர்கள்; உடம்பினை மாத்திரம் தகுந்தபடி

Koviloor Digital Library

பலப்படுத்திக் கொண்டால் பிறப்பு இறப்புகளினின்றும் நீங்கி விடலாம் என்றுணர்ந்து, அநேகக் காலம் உயிருடன் இருக்கக் கூடிய நித்திய வாழ்க்கையைப் பெற்ற மிகப்பெரிய மகான்கள்; கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் எனத் தொல்காப்பியர் காலந்தொட்டு இக்காலம் வரை சித்தர்களுடைய சிறப்பியல்பு கள் பற்றிப் பலரும் கூறியுள்ள கருத்துரைகள் இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சித்தர்களுடைய அளப்பரிய ஆற்றல்களையும் வியத்தகு செயல்களையும் சிறப்பியல்புகளையும் விரிவாகப் பாடிய பெருமை தாயுமானவர்க்கே உண்டு. அவரைப் போன்று சித்தர் கணம் என்று தனியாகத் தலைப்பிட்டு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், ''வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம்'' எனப் போற்றிப் பாடியவர் வேறு எவருமிலர். அட்டமாசித்திகள் கைவரப் பெற்ற சித்தர்கள் திக்குகளிலும் திக்குகளின் எல்லைகளிலும் மனத்தின் வேகத் தினைப் போன்று விரைவாகச் சென்று ஓடியும் விளையாடியும் வருவார்கள்! செம்பொன் மலையான பெரிய மேருமலையுடன் அம்மலை போன்று விளங்கும் துருவ மண்டலம் வரை சென்று பொருந்தி வேகமிக்க ஆழிப்படையையுடைய திரிவிக்கிரமன் போன்று விளங்குவார்கள்! வானுலகத்தையும் அதிலுள்ள ஐராவதம் என்ற யானையையும் கைகளுக்கு எளிதாகப் பந்து போல் எடுத்து விளையாடுவார்கள்! வானுலகச் செல்வங் களாகிய சங்க நிதி, பதுமநிதி ஆகியவற்றை இவ்வுலகிற்குக் கொண்டு வந்து, கேட்டதை கேட்டவாறே வழங்குமாறு செய்வார்கள்! யுகமுடிவில் தோன்றும் மிகப்பெரிய வெள்ளத்தை ஒரு சிறிய கிணற்றில் கொண்டு வந்து அடக்குவார்கள்! அவர்கள் சிவராச யோகச் செல்வர்களாகவும் தவராசச் சிங்கங்களாகவும் விளங்குவார்கள்! எனத் தாயுமானவர் சித்தர்கணத்தில் பாடியுள்ள சித்தர்களின் அளப்பரிய ஆற்றல்கள்

Koviloor Digital Library

வியத்தகு செயல்கள் ஆகிய அனைத்துமம இந்நூலில் கண்டறியப் பட்டுள்ளன.

பொய்மை ஒழுக்கமே மிகுந்து விளங்கும் மக்களின் போக்கு பொய்யான உடலின் பொருட்டாய் உண்ண வேண்டிய உணவுக்காக அலைந்து திரிந்து இரந்து உண்ணுதல், உண்டபின் கண் மூடி உறங்குதல் ஆகிய இவ்வொழுக்கங்கள் உயிருக்கு உறுதி பயப்பவை அல்ல. எட்டு மலைகளுடன் செம்பொன் மேருவான பெரிய மலையின் பக்கத்தும் யோக தண்டமான கோலை எழுதிப் பெறற்கரிய வெற்றியின் பேரடையாளமாய்க் காட்டி மெய்யுணர்வு நன்கு விளங்கும் அட்டாங்க யோக நிலத்தில் வளர்கின்ற அரசர்களாகிய சித்தர்கணமே! பொய் ஒழுக்கமுடைய இம்மக்களுக்கு மெய்யுணர்வினை ஊட்ட வேண்டும்; பொய்யான உலக வாழ்க்கையுடைய, நாயைவிட இழிந்தவனான தான் இனி மேலும் வீணான செயல்களில் புகுந்து திரியாமல் மலைக்குறி போன்று வெளிப்படக் காட்சியளித்துக் காத்தருள வேண்டும் என மிகப் பெரும் சித்தராகிய தாயுமானவர் சித்தர் கணத்திடம் வேண்டுவன இந்நூலில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

தாயுமானவர் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளில் பெரும்புலமை பெற்றவர். அம்மொழிகளிலுள்ள சமய, சாத்திர நூல்களையெல்லாம் கற்றறிந்தவர். என்றாலும் தம்மைக் கல்லாத வராகவே கூறிக்கொள்ளுதல், ''கல்லாத பேர்களே நல்லவர்கள்'' என்றல், தாம் கற்ற நூற்கல்வியால் தமக்குச் சிறிதும் பயன் இல்லை; மெய்யுணர்வுக் கல்வியே பயனளிக்கக் கூடியது; அத்தகைய கல்வியையே தமக்களிக்க வேண்டும் எனச் சித்தர்களிடம் வேண்டுதல்; அத்தகைய கல்வியை வலியுறுத்தித் தாம் பாடிய பாடல்கள் பற்றி எவரேனும் 'யார் பாடியது' என்று வினவினால் ''சிறிது தோய்ந்த குணசாந்தன் பாடியது'' என்று கூறவேண்டும் எனச் சித்தர் கணத்திடம் வேண்டுதல்; இவ்

Koviloor Digital Library

வுலகில் தான் வாழும்போதே, திருவருளான ஞான வட்டத்தில் நின்று நிலைத்துப் பேரின்ப மழையைப் பொழிகின்ற மேகத்துடன் சேர்ந்து, தன் அறிவானது தன் வயம் இழந்து, அதன் வயம் ஆகுமாறு செய்து, உயிர்தங்கும் நிலைக் களமாயுள்ள உடல் ஆடிவரும் கூத்துவகைகளுள் ஒன்றான பவுரிக்கூத்து கலைந்துபோகாது, கௌரியான குண்டலி சக்தி என்ற அம்மையின் திருவருளால் அறிவுப் பெருவெளியில் சந்திரனிடத்துள்ள அமிர்தமானது இடையறாது பெய்வதற்குத் திருவருள் புரிய வேண்டும் எனத் தாயுமானவர் சித்தர் கணத் திடம் வேண்டுதல் ஆகியவை இந்நூலில் கண்டறியப் பட்டுள்ளன.

Koviloor Digital Library

துணைநூற்பட்டியல்

அருணாசலம், டாக்டர் ப., திருமந்திரக் கோட்பாடு, பாரி புத்தகப் பண்ணை, 58,டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5, மு.ப. 1982

அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, (14-ஆம் நூற்றாண்டு) காந்தி வித்யாலயம், மாயூரம், மு.ப. 1969.

,, தமிழ் இலக்கிய வரலாறு, (15-ஆம் நூற்றாண்டு) காந்தி வித்யாலயம், மாயூரம், மு.ப. 1969.

இளங்கம்பன், டாக்டர்., தத்துவக் குயில்கள், பழம் நீ பதிப்பகம், மதுரை மு.ப. 1993.

கல்யாண சுந்தரனார் தமிழ்ச்சோலை, இரண்டாம் பகுதி, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 108.

,, கடவுட் காட்சியும் தாயுமானவரும், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 108.

கௌசல்யா விஜயன், டாக்டர் ஜி., திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள், விஜயன் பதிப்பகம், 12-ஏ, சஞ்சீவி பிள்ளை வீதி, சாயிநாதபுரம், வேலூர் - 1, மு.ப. 1996.

Koviloor Digital Library

சிவஞானம், சிலம்புச் செல்வர் ம.பொ., வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை, மு.ப. 1999.

சிவநேசன், செங்கை, தமிழ் வளர்த்த முனிவர் கதைகள், செல்வ நிலையம், இராயப்பேட்டை, சென்னை - 14, இ.ப. 1984.

சுந்தரம், வெள்ளை யாம்பட்டு., தாயுமானார் கதை (வரலாறு) சேகர் பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 78, திருத்திய பதிப்பு - 1997.

சுப்பிரமணிய பிள்ளை, கா., தாயுமான சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53 - 56, பவழக்காரத் தெரு, சென்னை - 1.

,, இலக்கிய வரலாறு, தொகுதி -2, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பவளக்காரத் தெரு, சென்னை, ஏழாம் பதிப்பு, 1980.

செந்துறை முத்து, புலவர்., தாயுமானவரும் பட்டினத்தாரும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், மு.ப. 1983.

சௌரிராசன், டாக்டர் பொன்., தாயுமானவர் வாழ்வும் வழியும், பாரி நிலையம், 184. பிரகாசம் சாலை, சென்னை 108. மு.ப. 1993.

தமிழண்ணல், டாக்டர்., புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், தானப்ப முதலித் தெரு, மதுரை - 1, பதினாறாம் பதிப்பு, 2000.

Koviloor Digital Library

தெய்வநாயகம், சி., கோ.,	சித்தர் சிந்தனைகள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், மு.ப. 1984.
நாக சண்முகம், புலவர்.,	தாயுமானவர் கதை, வைரம் பதிப்பகம், 50,51, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை - 5, மு.ப. 1964.
பரமசிவனாந்தம், பேராசிரியர் அ.மு.,	சான்றோர் வாக்கு, வள்ளியம்மாள் கல்வி அறத்தின் வெள்ளிவிழா வெளியீடு, தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை - 30, மு.ப. 1993.
பழனியம்மாள், டாக்டர் ப.,	தமிழில் சதக இலக்கியங்கள், மங்கை வெளியீட்டகம், மதுரை, மு.ப. 1992.
மாணிக்கனார், புலவர் அ.,	தாயுமானவரின் திருப்பாடல்கள் மூலமும் உரையும், முதல் தொகுதி, வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை - 17, மு.ப. 1991.
மோசஸ் மைக்கேல் பாரடே, டாக்டர்.,	தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும் (கடவுட் கொள்கைகள்) சி.எஸ்.ஐ. சென்னைப் பேராய வெளியீடு, 288, கதீட்ரல் சாலை, சென்னை, மு.ப. 1999.
மாணிக்கம், டாக்டர் வ.சுப.,	சிந்தனைக் களங்கள், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 108.
ரசபதி, குக ஸ்ரீ.,	சைவ மெய்ஞ்ஞானிகள், திருப்புகழமிர்தம் காரியாலயம், 144, சாமிநாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2, மு.ப.,

Koviloor Digital Library

வரதராசன், டாக்டர் மு., — தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, நியூடெல்லி - 19. ஏழாம் பதிப்பு, 1989.

” — தாயுமானவர், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை, மு.ப. 1983.

விமலானந்தம், பேராசிரியர் மது.ச., — தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் முதல் தொகுதி, ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை - 5, மு.ப. 1987.

கட்டுரைகள்

மாதவன், வே. இரா., — சித்தர் பாடல்கள், இலக்கியத்தின் நோக்கமும் பயனும், தொகுதி - 1, உலகத்தமிழாரய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை, மு.ப. 1977.

மாணிக்கம், டாக்டர் வ.சுப., — தற்சிறுமை, சிந்தனைக் களங்கள், பழ. சண்முகனார் மணிவிழா வெளியீடு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1975.

முத்துக்குமாரசாமி, இரா., — தாயுமானவர், இலக்கியக் கொள்கை, தொகுதி - 2, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை, மு.ப. 1977.

ஆய்வேடுகள்

சகுந்தலா, சி.ஆர்., — தாயுமானவர் பாடல்கள் - ஓராய்வு, பி.ப.ஆ., சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, ஆண்டு, 1985.

Koviloor Digital Library

சேட்டு, ஏ., தாயுமானவர், பட்டினத்தார் - ஓர் ஒப்பாய்வு, எ.ப.ஆ., மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, ஆண்டு 1999.

சௌரிராசன், டாக்டர் பி., தாயுமானவ சுவாமிகள் - ஒரு திறனாய்வு, பி.ப.ஆ., திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி, ஆண்டு, 1976.

கலைக்களஞ்சியம்

பெரியசாமித்தூரன், ம.பெ., (பிரதம ஆசிரியர்) தொகுதி - 4, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, மு.ப. 1955.

,, தொகுதி - 5, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, மு.ப. 1955.

இதழ்கள்

ஞானியாரடிகள், தாயுமானவர், சித்தாந்தம், தொகுதி -12, சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை.

பெருமாள், பேராசிரியர் 2-ஆம் உலகத்தமிழ் மாநாடு, சித்த மருத்துவக் கருத்தரங்கு மலர்.

அகராதிகள்

கந்தையா பிள்ளை, ந.சி., செந்தமிழ் அகராதி, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தார், சென்னை 1950.

Koviloor Digital Library

கழகப் புலவர் குழுவினர், கழகத்தமிழ் அகராதி, கழக வெளியீடு, சென்னை, *1969.*

English Books

Zvelebil, Kamil V., A History of Indian Literature - Tamil Literature Volum X, otta Harrassowitz, wiezbadon, 1974.

Shuddhananda Bharatiar, Maharshi., Voice of Thayumanavar, (The life of the saint and his song - offering) 1963.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 15332

Koviloor Digital Library

Koviloor Digital Library

நூலாசிரியரைப் பற்றி...

புலவர் ஆ. ஆறுமுகம் 24.1.1953 இல் பிறந்தவர். பெற்றோர் திரு. ஆ. ஆரிமுத்து – திருமதி ஆ. ஞானாம்பாள்.

தமிழாசிரியர், முதுகலை ஆசிரியர், தலைமையாசிரியர் எனப் படிப்படியாக உயர்ந்தவர். திருவண்ணாமலை கல்வி மாவட்டத்தின் சாரண சாரணியம் மாவட்ட ஆணையாளராகவும் இருந்து சிறப்புப் பணிபுரிந்தவர்.

கம்பீரமான குரல்வளம், கருத்தைக் கவரும் எழுத்து வளம், எள்ளளவும் சோர்வின்றி எடுத்த பணியை முடித்துக்காட்டும் செயல்திறம், 'உழைப்பு' ஒன்றையே உயிர்மூச்சாய் சுவாசிக்கும் உன்னத பண்புநலம் வாய்க்கப் பெற்றவர்.

திருவண்ணாமலை தமிழிலக்கியப் பேரவை அமைப்பாளர், அனைத்திந்திய எழுத்தாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் போன்ற பொறுப்புகளில் இருந்தவர்.

தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் திருவண்ணாமலை மாவட்டத்தில் வட்டச் செயலர், மாவட்டச் செயலர் பொறுப்புகளில் இருந்து போர் வாளாகச் செயல்பட்டவர்; தற்போது மாநிலப் பொதுச்செயலாளராகச் செயல்பட்டு வருபவர். தமிழ் வளர்ச்சிக்கும், தமிழாசிரியர் நலனுக்கும் பாடுபட்டு வருபவர், மாநிலம் முழுவதும் தேனீயாய் சுற்றித் திரிந்து ஆசிரியர் இனத்திற்குத் தொண்டாற்றி வருபவர். 'தாயுமானவரின் சித்தர்கணம் – ஒரு பார்வை' என்ற இந்நூல் அவரின் ஆன்மிக தாகத்தின் முதற்படைப்பு, முத்தான படைப்பு. அவர்தம் படைப்புகள் மேலும் முகிழ்க்கும்.

– பதிப்பகத்தார்